
www.tamilarangam.net



# எக்ஸில்


**EXIL**

July 2003

13

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடுகள்

www.tamilarangam.net

## சிறுகதைகள்


'பொழுதை தோய்த்தல்' - ரவி (ஸ்விஸ்) ........ 15

'காதல் கதைகளும் சில காதலிகளும்' - கலாமோகன் ........ 33

'சத்திரியம்' - சக்ரவர்த்தி ........ 47

'தமிழீழத்தின் கிடங்கு' - ஜீவசுதா ........ 66


## கட்டுரைகள்


'தேசியவாதத்தில் இன்றும் குளிர்காயும் ...'
அமிர்தலிங்கம் - பவளவிழா ........ 07

'பின் நவீனத்துவம் முன்நகரும் சமூகத்தில் மாறுதல்'
நாதன் ........ 17

'மூதூர் கலவரம் - முஸ்லீம் தகவல் நிலையத்தின் அறிக்கை' ........ 42

'திருத்தவே மாட்டாத யாழ்பாணியமும் திறக்கும் முன்பே மூடப்பட்ட யாழ்நூலகமும்' ........ 54


## கவிதைகள்


'போரும் குழந்தைகளும்' - ஏ.ஜி.ஸதக்கா ........ 09

'எனக்குள் வசிக்க ... 'வழித்துணை' - ஹவி ........ 24

கடல்வெளி' - அனார் ........ 30

'தமிழ் மொழி வாழ்த்து ... ........ 31

ஞாபகம்' - ஆழியாள் ........ 32

'பழசின் புதுசு' - ரவி ........ 41

'பாலையின் புதிர்' - ஹவி ........ 65

'கரம்' - ஶ்ரீநேசன் ........ 72

'ஏழு பெட்டி இரயில்' - ஶ்ரீநேசன் ........ 73


## நூல் விமர்சனம்


'இலங்கை ...' - எம்.ஆர். ஸ்ராலின் ........ 25

'எறிகணை தாலாட்டு ...' - எம்.ஆர். ஸ்ராலின் ........ 28


## வேறுவேறு


'கவனி' ........ 05

'கணக்குத்தீர்ப்பு ...' - கற்சுறா ........ 10

'பெருவாழ்வு' ........ 40

'கொரில்லா உள்ளும் புறமும் ...' - ரவி ........ 62

'புஷ்பராஜா கடிதமும் எதிர்வினையும்' ........ 68


# எக்ஸில்


VOL : V

No : 13

JULY - 2003


அட்டைப்படம்
பாபு, மதுரை

காசோலைகள் அனுப்ப வேண்டிய வங்கியும் இலக்கமும்

B.N.P
ASSOCIATION EXIL
00345/100241-65


தொடர்புக்கு :

EXIL
B.P.- 204
92604 ASNIERES CEDEX
FRANCE

E-MAIL : exil-inba@infonie.fr


No d'enreg : 13022670

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்று சமாதானம் ... ?

வடகிழக்கில் கொலைகள் நின்று விட்டதா? அமைதி திரும்பிவிட்டதா? எல்லா ஊதுகுழல் பத்திரிக்கைகளையும் போல எம்மால் ஒத்து ஊத முடியவில்லை. பேச்சுவார்த்தை மேசையில் உட்கார்ந்துகொண்டே புலிகள் வடகிழக்கு எங்கும் செய்துவரும் மனிதஉரிமை மீறல்கள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றது. மாற்று இயக்கத்தினரின் மீதும் முன்னாள் போராளிகள் மீதும் கட்டுமீறிய அதிகாரத்தை புலிகள் பிரயோகித்து வருகின்றனர். கப்பம் வாங்குதல், ஆள்கடத்தல்கள், சிறுவர்களை படைக்காக சேர்த்தல் என்பன இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. குறிப்பாக முஸ்லீம்கள் மீது புலிகளது அணுகுமுறை எள்ளளவும் மாறியதாக தெரியவில்லை. பழிவாங்கல்கள் இனந்தெரியாதோர் என்னும் பெயரில் தினமும் நடந்து வருகின்றன. நாளாந்தம் கொலைகள் மீண்டும் சாதாரணமாகி விட்டது. அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 வயது குழந்தை ஒன்று கூட புலிகளின் கிரணைத் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளது. புலிகளுக்கு ஒன்று என்றால் அங்கெங்கே முளைவிடும் பினாமி மனிதாபிமான அமைப்புகள் எதுமே இவை குறித்து வாய்த் திறப்பதில்லை. பழி வாங்கல்களும், கணக்கு தீர்ப்புகளும் முன்னாள் மாற்று இயக்க உறுப்பினர்களின் 100க்கு மேற்பட்டோரை இதுவரை காவு கொண்டு இருப்பதாக தெரியவருகிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஆயுதமின்றி அரசியல் வேலைகளில் ஈடுபட்டிருந்த மாற்று இயக்கம் ஒன்றில் மூத்த உறுப்பினர் ஒருவர் (ரொபர்ட்) புலிகளின் திட்டமிட்ட சினைப்பர் தாக்குதலுக்கு இலக்காகி கொள்ளப்பட்டுள்ளார்.

சுமார் முப்பது வருடகால கொலை வரலாற்றில் மனநோய் பிடித்து அலையும் புலிகள் இந்த அமைதி பேச்சின் பின்னபாக கூட, திருந்த மறுப்பதை கடுமையாக கண்டிக்கின்றோம்.

*********

பரிஸ் லாச்சப்பல் தெருக்களில் நாளாந்தம் நடக்கும் சண்டைகளில் ஒன்று அரசியல் ஆக்கப்பட்டமை குறித்தும் அதில் ஈடேற்றப்பட்ட ஆதிக்க அரசியல் குறித்தும் கடந்த எமது இதழில் அம்பலப்படுத்தியிருந்தோம். அவசியமேதுமே இன்றி கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியம் எனும் சுதந்திர அமைப்பு இழுக்கப்பட்டு அதன்மீது நடத்தப்பட்ட சேறுபூசல்களில் யாழ் ஆதிக்க சிந்தனையின் தாக்கம் இருந்துள்ளது என்பதே அது. அத்தோடு அதற்குக்காரணமான இலக்கியச்சந்திப்பு நண்பர்கள் மீது எமது பகிரங்கக் கண்டனத்தையும் தெரிவித்திருந்தோம்.

இதனைப் பொறுக்காத சி.புஸ்பராசா பரிஸ் அறிவாலயம் புத்தக சாலையில் எக்ஸில் விற்கப்படக்கூடாதென சட்டாம்பித்தனம் பண்ணியுள்ளார். ஏதோ ஒரு வகையில் அது அவரது அதிகார எல்லைக்குட்பட்ட நிலையம் என்பதனால் அங்கே எக்ஸில் தடைசெய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் மார்க்சியம், தேசியம் என்கின்ற பெருங்கதையாடல் மீது நாம் எழுப்பி வந்த கேள்விகளும் சைவவேளாள அரசியல் மீது பண்ணி வந்த கலகங்களும் எமக்குத் தேடித்தந்தவை சண்டைக்காரர்கள், குழப்பவாதிகள், மாபியா கும்பல், ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகள் போன்றவைதான். கருத்தை கருத்தால் மோத முடியாத ஆனால் பேனா கொண்டலையும் கோழைகளின் இக்குற்றச்சாட்டுக்களும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முத்திரை குத்தல்களும் நாம் அனுபவித்து வருபவைதான். இதன் தொடர்ச்சியே இன்று அரங்கேறியுள்ள இந்த எக்ஸில் தடை.

இலக்கியச் சந்திப்பு என்பதன் தாற்பரியமே "மாற்றுக்கருத்துக்கான அங்கீகாரத்தைக் கோருதல்" என்றுதான் நாமும் நம்பி வந்துள்ளோம். ஆனால் தங்கள் மீது வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கு இப்படி கேவலமான அதிகாரத்துவமான தொனிகொண்டு அணுகுவதன் அர்த்தம் என்ன?. எமது கருத்து எதுவானாலும் பதில் நேர்மையான முறையில் முன்வைக்கப்பட வேண்டும். சம்பவம் குறித்து தன்நிலை விளக்கங்களை சேறு பூசலில் சம்பந்தப்பட்டவர்கள் எக்ஸிலிலேயே முன்வைத்திருக்க முடியும். தெருச்சண்டை குறித்து ஏதுமே அறியாமல் காட்டுமிராண்டிகள், காடையர் கூட்டம், துப்பாக்கி நபர்கள் என்று ஒடுக்கப்பட்ட பிரதேசமொன்றின் கல்வி வளர்ச்சிக்கான ஒன்றியத்தை ஒற்றைவரிகளில் திட்டி இரவும் பகலுமாய் நோட்டிஸ் விடப்பட்டது. இந்த வேகத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட உங்கள் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு, சுயவிமர்சனத்துக்கு ஒதுக்கமுடியாமல் போனதேன்? யாழ்ப்பாண ஆதிக்கம் இருக்கிறது என்கிறாயா? உனக்கே தடை என்று அதிகாரம் பண்ணுவது எவ்விதத்திலும் உசிதமானது அல்ல. சாதி, மதம், சீதனம், வட்டி என்று எல்லாக் குப்பைகளையும் தங்களோடே விமானம் ஏற்றி புகலிடமெங்கும் பரப்பி வைத்துள்ள யாழ்ப்பாண சமூகம் தன்னைவிட மற்றவனை சோனி, தோட்டக்காட்டான், வன்னியான், மட்டக்களப்பான் என்று இழிவு படுத்திப் பழகிய யாழ்ப்பாண சமூகம் தன் ஆதிக்க குணத்தை மட்டும் கிடுகு வேலிகளுக்குள் மறைத்துவிட்டா வந்திருக்கும்?

தெருச்சண்டையில் மட்டுமல்ல புத்தகக் கடையிலும் மீண்டும் ஒருமுறை நிருபிக்கப்பட்டுள்ளது இந்த யாழ்ப்பாண திமிர். புஸ்பராசாவினுடைய எக்ஸில் தடை, புகலிட இலக்கியம் கைகட்டி மௌனம் காக்கிறது. ஏதுமே நடவாதது போல. ●

– ***எக்ஸில்*** 17.7.2003



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சகோதரி இன்பவல்லி அவர்கட்கு,

முதற் தடவையாக ஒரு கடிதம் எழுதுகிறேன்.

எக்ஸிலின் 12 ஆவது வெளியீடு பற்றி அறிந்தேன். இதுவரை படிக்கக் கிடைக்கவில்லை.

புகலிடத்தில் மாற்றுக் கருத்துக்கள் - நீதியான் குரல்கள் மங்கி வருகின்ற ஒரு அவலமிகுசூழலில் - இன்னும் நியாயத்தின் குரலாகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் மனச்சாட்சியாகவும் 'எக்ஸில்' வெளிவந்து கொண்டிருப்பதை எண்ணும் போது, உண்மையாகவே மெய்ச்சிலிர்த்துப் போகிறேன்.

யதார்த்தத்தில் இந்தப் பண்புள்ள தமிழர்களை - தமிழ் இலக்கிய வெளியீடுகளை -ஆவணங்களை எங்காவது மிக மிக அபூர்வமாக தரிசிக்கின்ற போது, அவர்களையும், அவற்றையும் தெய்வாம்சம் பொருந்தியவர்களாக கொண்டாடத் தோன்றுகிறது. துரதிஸ்டவசமாக - ஈழத்தில் தற்போது இவை ஏறக்குறைய முற்றாக இல்லை என்றே சொல்ல வேண்டும்.

எக்ஸில் -11 (முஸ்லிம் தேசத்தின் சிறப்பிதழ்) மிக மிக தைரியமான, காத்திரமான வரலாற்றுப் பதிவு என்பதை காலங்கடந்தாவது உங்களைப் பாராட்ட வேண்டும். அதற்கு வார்த்தைகளில்லை என்னிடம்..'. ( தங்களுக்கும், எம். ஆர். ஸ்டாலின், ஜெபா போன்ற ஏனையோருக்கும் எனது வாழ்த்துக்களும், வந்தனங்களும )

வடகிழக்கிலே எந்த நியாயங்களை முன்னிறுத்தி, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் தொடங்கப்பட்டதோ, அந்த நியாயங்களையும் மிகைத்ததான நெருக்குதல்களையும், அநீதிகளையும் வடகிழக்கிலுள்ள சிறுபான்மை முஸ்லிம் இனத்தின் மீது, தமிழ்ப் பேரினவாதம் கட்டவிழ்த்து வருகிறது. இந்தக் கணம் வரை வடகிழக்கிலே இதுதான் யதார்த்தம் - இதுதான் உண்மை.

இதனை நேர்மையாகப் பதிவு செய்வதற்கும், வெகுசனப்படுத்தவும் எந்த தமிழ் ஊடகமும் தயாரில்லை. மாறாக, ஊடக சுதந்திரத்தின்



பெயரால் இவற்றை திரிவுபடுத்தி, உண்மைகளை மூடி மறைக்கும் காரியங்களையே அவை செய்கின்றன. யுத்த காலத்தில் இடம் பெற்ற முஸ்லிம்கள் மீதான படுகொலைகள், ஆட்கடத்தல்கள், கொள்ளை, கப்பம், பாரம்பரிய நிலங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றல், கால்நடைகள், வயல் நிலங்கள், குடியிருப்புக்கள் அபகரிப்பு, கல்வி, நிருவாக துறைகளில் அநீதி என்பன இந்த சமாதான காலத்திலும் அப்பட்டமாக நடந்தேறுகின்றன.

இவற்றுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் துணை போகிறது. ''இனந் தெரியாத நபர்கள்'', "சமாதானத்தை விரும்பாத சக்திகள்" என்ற சொல்லாடல்கள் மூலம் குற்றங்கள் மறைக்கப்படுகின்றன.

இது ஒரு விதத்தில் முஸ்லிம்களது வழமையான புராணமாகி விட்டது. அவர்களது நிலையோ, முஸ்லிம் தலைவர்கள் இருக்கத்தக்கதாக அவர்கள் மீது அடர்ந்தேறுமளவு துயரம் நிறைந்ததாகி விட்டது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

( உதாரணம் - மூதூர் நிகழ்வுகள் ) இனியும் விபச்சாரக் குணம் படைத்த இந்தத் தலைவர்களை நம்பி ஏமாறத்தான் போகிறதா முஸ்லிம் சமூகம்? அல்லது தமிழ்ப் போராட்ட வழிமுறையில் பாடம் புகட்டப் போகிறதா? எது நடந்தாலும் அது முஸ்லிம் சமூகத்தின் இருப்புக்கும், வடகிழக்கின் அமைதிக்கும் பாரிய விலையாக அமையும் என்பதை மட்டும் இங்கு கூறி வைக்க முடியும்.

-ஏ. ஜீ. எம். ஸதக்கா, ஹுதா வீதி, வாழைச்சேனை. 20. 04. 2003

எக்ஸில் ஆகஸ்டு 02, இதழ் எண் 12ல் 113 வது பக்கத்தில் கவிஞர் செழியன் என்னைப பற்றிக் கூறும்போது, நான், "பிறப்பால் தமிழர் அல்ல" என்றும் "ஜனவரி 02 காலச்சுவட்டில் என் பேட்டி கண்டிப்பாக படிக்க வேண்டியது" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

நான் பிறப்பால் தமிழன் தான். வீட்டில் பேசிவரும் மொழியும் தமிழே. என் இளமைக் காலத்தில் தமிழ்ப் பள்ளிக்கூடம் இல்லாத கோட்டயம் என்ற ஊரில் இருந்ததால் நான் மலையாளம் படிக்கும்படி ஆயிற்று. காலச்சுவடு 2002 ஜனவரி இதழில், "வானகமே இளவயிலே மரச்சறிவே" என்ற பகுதியில், பிரபல இதழ் ஒன்று என்னிடம் எடுத்த பேட்டியில் "எடிட்" செய்திருந்த பதில்களைச் சேர்த்திருந்தேன். இந்த விபரத்தையும் அந்தப் பகுதியில் குறிப்பிட்டிருக்கின்றேன். இதனை காலச்சுவடு என்னிடம் எடுத்த பேட்டியாக வாசகர்கள் கருதக்கூடாது.

-சுந்தர ராமசாமி, நாகர்கோயில், இந்தியா

இம்முறை கட்டுரைகளைவிட சிறுகதைகள் குறிப்பிடத்தக்கவையாக இருந்தன. கௌரிபாலன், அசதா, தேவாகரோல்ட், தேவதாஸன் என்று எல்லோரது சிறுகதைகளும் இதழின் கனதியை அதிகரித்திருந்தன.

ஈழத்து அரசியல் நிலமை குறித்து துணிந்த கருத்துக்களை முன்வைத்து வந்த புகலிட எழுத்தாளர்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமாதானச் சூழல் குறித்து இம்முறை எக்ஸிலில் ஏன் ஏதுமே எழுதவில்லை. எனினும் அந்த இடைவெளியை சக்கரவர்த்தியின் சிறுகதை நிரப்பியிருந்தது. சமாதான அரசியல் பேச்சுகள் குறித்து அவர் நன்றாகத்தான் அறிந்து வைத்திருக்கின்றார் போலும். கதையில் வருவதுபோல் யுத்தப்பிரியர்கள் அடுத்த கட்ட தயாரிப்பிற்கு நகர்ந்துகொண்டிருக்கிறார்கள். சமாதானம் தனக்கான காலக்கெடுவை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இன்றைய ஈழத்து நிலவரம் இப்படித்தான். ஆனால் எப்படியோ நாட்டைக் கடந்து விட்ட நீங்கள் எல்லாம் கொடுத்துவைத்தவர்கள்.

கனடாவில் இருந்து ஜயகரன், செழியன் ஆகியோரின் பேட்டிகள் அங்குள்ள நாடகச் சூழல் குறித்து இங்கு நாம் அறியமுடியாத பல தகவல்களைத் தந்தது. "கனடாவில் வருகின்ற காலம் சஞ்சிகை காலச்சுவட்டையும் சுந்தரராமசாமியையும் தாண்டுவதில்லை" என்ற கேள்விக்கு செழியன் அவர்கள் கூறும் பதில் மிக நகைச்சுவை அளிக்கிறது. சுந்தரராமசாமியின் அரசியலுடன் அவரால் நெருங்கி நிற்கவும் முடிகிறதாம். இவர் யார் என்று இப்போது எமக்குப் ! புரிந்தது. எக்ஸில் இதற்கெல்லாம் ஏன் பக்கங்களை வீணடிக்கிறதோ தெரியவில்லை.

தொடர்ந்து இதழ்களை அனுப்புங்கள்

-கணேசமூர்த்தி, வெள்ளவத்தை, கொழும்பு

எக்ஸில் 12 ல் ஷோபா சக்தியின் கொரில்லா நாவலை முன்வைத்து எம்.ஆர். ஸ்டாலின் எழுதிய கட்டுரை இலங்கையில் தமிழீழ விடுதலை போராட்டத்தின் பதிவுகளின் விரிவான பார்வையை எமக்கு தூண்டியது. இதற்குமுன் இந்நாவலின் இரண்டு விமர்ச்சன கட்டுரைகள் மதிவண்ணன் மற்றும் கற்கறா எழுதியவை புதிய கோடங்கியில் படித்தேன். மூன்றும் வேவ்வேறு விதமான பார்வையையும் அதே நேரத்தில் ஒரு விடுதலை போராட்டத்தின் பதிவுகள் எவ்வாறு சாய்வு தன்மை இன்றி இருக்க வேண்டும் என்பதையும் சொல்லிற்று. மதிவண்ணன் ஒரு தமிழ்நாட்டு வாசகரின் மனநிலையையும் அந்த நாவலின் நேர்கோடற்ற தன்மையையும் அவருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே கொரில்லா நாவலை அணுகியிருந்தார். கற்கறா இதற்கு நேர்மாறாக தமிழீழ விடுதலை போராட்டத்தில் பங்கெடுத்த ஒரு வீரன் தான் எதிர்கொண்ட இன்னல்களையும் மற்ற பிற விசயங்களையும் இந்நாவல் முழுமையாக பேசவில்லை என்ற ஆதங்கத்தை வெளிப் படுத்தினார் என்று புரிய முடிகிறது. எம். ஆர். ஸ்டாலின் இதுவரை வந்த தமிழீழ போராட்டத்தை விவரிக்கும் நாவல்களின் பட்டியலுடன் அவை எந்த சூழலில் எப்படி சமரசமின்றி எழுதப்பட்டது என்றும் கொரில்லா ஏன் இந்த சமரச நிலைக்கு ஆட்பட்டது என்றும் அதே நேரத்தில் நாவலின் ஆசிரியன் சமரசமின்றி எழுதியிருக்கும் வாய்பை யாருக்காக விட்டு கொடுத்தார் 'புதியதோர் உலகம்' நாவலுக்கு பிறகு ஒரு நல்ல நாவல் வந்திருக்க வேண்டும். அந்த நாவலுக்கு பிறகு எண்ணற்ற சம்பவங்களும் பதிவு செய்யப் பட வேண்டிய விசயங்களும் ஏராளம் இருக்கையில், ஏன் ஷோபாசக்தியால் அவைகள் பதிவு செய்யப்படவில்லை என்ற அவருடைய பார்வை ஏற்றுக் கொள்ளக்கூடியது. இதற்கு ஷோபாசக்தி பதில் சொல்வாரா ?

குழகன், திருநெல்வேலி, இந்தியா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசியவாதத்தில் இன்றும் குளிர்காயும் புகலிடம்

## அ. அமிர்தலிங்கம் – பவளவிழா

*"அமிர்தலிங்கம் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் நீண்டநாள் இருந்து இறுதியில் இறந்து போனாரா?"* என்று லண்டனில் நடந்த அமிர்தலிங்கம் நினைவுக் கூட்டத்தில் இறுதியாகப் பேசிய ஒருவர் கேட்டாராம். அந்தளவிற்கு அந்தக் கூட்டம் பயமுறுத்தப்பட்டும் மிரட்டப்பட்டும் இருந்த சூழலில் கடமைக்காக நடத்தப்பட்டு இருந்தது. ஆனால் பரிசில் நடந்த பவளவிழாவின் போது இப்படியெல்லாம் காதில் விழுந்தது. "அந்த மனிதரை ஏன் சுட்டார் பிரபாகரன்", "கொலை செய்ததும் அல்லாமல் வரலாற்றை ஏன் மறைக்கிறீர்கள்", "அன்று நாங்கள் அரசுடன் பேசினால் துரோகிகள், இன்று நீங்கள் இவ்வளவு கொலைகளையும் செய்து விட்டு தமிழீழத்தையும் கைவிட்டு விட்டு அரசுடன் பேசுகிறீர்களே நீங்கள் யார்?", "எந்த பாலசிங்கத்தாலும் நிரப்பப்பட முடியாத தலைவன் அமிர்தலிங்கம்." முழு தமிழ்ச் சமூகமுமே பாசிசமாகிப் போன சூழலில் அதற்கெதிராக ஈனக்குரலிலேனும் எதிர்த்துப் பேசும் வாய்ப்பை புகலிடம் இன்னும் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது என்பதற்கு இக்கூற்றுக்கள் சான்று.

புலிகளுக்கெதிரான அல்லது அவர்களது மக்கள் விரோத வன்முறைகளுக்கெதிராக, வெளிப்படையாக பலரும் பேசியதுக்கப்பால் அரசியல் ரீதியாக அமிர்தலிங்கத்தின் மீது ஒரேயொரு விமர்சனம் மட்டும் முன்வைக்கப்பட்டது. "துரோகி" கொலைப்பட்டியல் வரலாற்றை உருவாக்கியதே இந்த அமிர்தலிங்கந்தான் என்பதை ஈழநாடு குகநாதன் சுட்டிக்காட்டியிருந்தார். இதுகூட புலிகளால் விரும்பப்படாத கூட்டத்தில் தான் பங்குகொண்டிருந்தாலும் புலிகளால் கொலைசெய்யப்பட்ட அமிர்தலிங்கத்தின் மீது குற்றம்சாட்டுவதின் மூலம் அதனை சரிகட்டிவிடும் ஒரு தந்திரம்தான். ஏனெனில் சுமார் 10 வருடங்களாக அவர் நடத்தி வருகின்ற "ஈழநாடு" பத்திரிகை மாற்றியக்கத்தோர், புத்திஜீவிகள், பத்திரிகை யாளர்கள், இலக்கியவாதிகள்... மீதெல்லாம் புலிகள் நடத்தி வந்த கொலைகள், பயமுறுத்தல்கள், அடாவடித்தனங்கள் மீது ஒரு வரிகூட கேள்விகேட்டிருக்குமா என்பது சந்தேகமே?

ஐரோப்பாவைப் பொறுத்தவரை புலிகளின் பணம் தெண்டும் விழாக்களையும், கோயில திருவிழாக்களையும் தவிர ஒரு அரசியல் கூட்டத்தில் பெருந்தொகைத் தமிழர்கள் ஒன்று கூடுவது அரிது. இலக்கிய வட்டத்தினர், பத்திரிகையாளர்கள், சிறு சஞ்சிகையாளர்கள், பழைய தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள், முன்னாள் போராளிகள், புலிகளின் செய்தி/ உளவு சிவில் உடை இளைஞர்கள் என பலதரப்பட்டோரும் கலந்து கொண்டனர். சுமார் 500 பேரைத் தாண்டியது இந்தப் பவளவிழா.

இங்கே திரண்டிருந்த கூட்டத்தினை புலிகளுக்கெதிரான மக்கள் திரளின் வெளிப்பாடாகக் கொள்ளலாமா? ஒரு அமிர்தலிங்கத்தின் கொலையைக் கண்டிக்க 14 வருட அஞ்ஞாத வாசம் தேவைப்பட்டிருக்கிறது. இதுவரை ஒருமுறையேனும் இப்படி குறைந்த பட்ச பேச்சுரிமையை நிலைநாட்டும் கூட்டத்தை இந்தப் புகலிடத்திலேனும் ஏன் சாத்தியப்படுத்த முடியவில்லை. இன்றைய சமாதானச் சூழல்தான் இதற்கான மறைமுக அனுமதியை வழங்கியிருக்கிறது என்கின்ற கேள்விகளும் எழாமலில்லை.

எப்படியிருந்தபோதும் இந்தக் கூட்டம் புலிகளை சற்று குழப்பி விட்டுத்தான் இருக்கிறது. மறுநாட்காலை பரிஸ் லாசப்பல் தெருக்களில் "தேசபக்தன்" எனும் பெயரில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் இதன் வெளிப்பாடுதான். பவளவிழாவை ஒழுங்கு செய்த முக்கியஸ்தர்கள் மீது துரோக குற்றச்சாட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டன. தங்களை மீறி இவ்வளவு பெரிய கூட்டத்தை வேறு யாரும் கூட்டுவதை, தங்களைக் கண்டிப்பதை புலிகள் எப்போதும் போல் இப்போதும் விரும்பவில்லை. தமிழ்த் தேசியத்தை மிதவாத போக்கிற்கு மீளக் கொண்டுவருவதேயானாலும் அதையும் புலிகளே செய்ய வேண்டும் என்பதே புலிகளது ஏகப்பிரதிநிதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோரிக்கையின் அத்திவாரம்.

இந்நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் புலிகளுக்குமான அரசியல் வெளி எங்கே முரண்படுகின்றது? புலிகளின் வன்முறை அரசியலும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஜனநாயகத் தேர்தல் அரசியல் என்கின்ற வழிமுறைகள் மட்டுமே இங்கு வேறுபடுத்தலில் அடிப்படையாக இருக்க முடியும். மாறாக இரு தரப்பினரும் முன்வைக்கும் தேசியவாத அரசியல் ஒன்றுதானே. தமிழ் பொதுசனத் திரள் எப்போதுமே இதுகுறித்து பெரிதாக அலட்டிக்கொள்ளப்போவதில்லை. ஆனால் இதற்கொப்பாகவே பவளவிழாவில் புதுப்பிக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் தியாகங்கள், போராட்டங்கள், புனிதங்கள் என்பவை மீது எவ்வித விமர்சனமும் இன்றியே புகலிட இலக்கிய வட்டத்தினரும் கலந்து கொண்டிருந்தனர். புகலிடத்திலும் புலிகளினது வன்முறையரசியல் மீதான எதிர்ப்புணர்வு இருப்பதைத் தவிர தேசியவாத அரசியல் மீது, அதன் அடிப்படைகள் மீது எவ்வித விமர்சனங்களும் இல்லை என்பதையே இது காட்டுகிறது.

தமிழ்த்தேசிய அரசியலின் உருவாகத்தில் முக்கிய பங்கு வகித்தவர் இந்த அமிர்தலிங்கம். அவர் பண்ணிய தேர்தல் திருகு தாளங்களுக்கு அப்பால் தலித்துகள், ஒடுக்கப்பட்ட பிரதேச மக்கள், ஏழை விவசாய மீன்பிடி உழைப்பாளர்கள், இன்னபிற சிறுபான்மையினங்கள் போன்றவற்றுக்கெதிராக அவர் உயர்த்திப்பிடித்த தான் சார்ந்த யாழ் மேட்டுக்குடி அரசியற் சூதுகள் கொஞ்சநஞ்சமல்ல. இவைகுறித்து மூச்சுவிடாமல்தான் மார்க்ஸிய முகம் கொண்டோர், முற்போக்காளர்கள், புகலிட இலக்கிய புத்தி ஜீவிகள், கலகக்காரர்கள், தலித்தியம் பேசுபவர்கள் என்று ஏதேதோ சொல்பவர்கள் எல்லாம் கலந்து கொண்டிருந்தனர். புகலிட இலக்கியச் சூழலின் உண்மை முகம் இதுவே.

இந்நிலையில் நாம் சொல்லக்கூடியது இதுவே. இன்று புலிகளின் வன்முறையை அல்லது இயக்கங்களின் வன்முறையை, தமிழ் அரசியலில் நிறைந்துள்ள படுகொலைக் கலாச்சாரத்தைக் கட்டிவளர்த்தவர்கள் யார்?, இந்த வன்முறைக்கெல்லாம் புனித சாயம் பூசும் வரலாற்றை தொடங்கி வைத்தவர்கள் யார்? என்னும் கேள்விகளில் இருந்து தமிழ்த் தேசியத்தின் பிதாமகர்கள் தப்பிவிட முடியாது. பிரச்சனைகளின் மூலங்களை விடுத்து நுனிப்புல் மேய்வது போலி அரசியல் அன்றி வேறில்லை. தேசியவாதத்தின் மீது கேள்வியெழுப்பாமல் புலியெதிர்ப்பு மட்டும் கதைப்பது என்பது ஆயுதம் இல்லாத புலியை ஆதரிப்பதேயாகும். அதே யாழ் மத்தியவர்க்க அபிலாசைகளைப் பூர்த்திசெய்யக்கோரும் சைவவேளாள அரசியலை ஜனநாயக வடிவில் வேண்டி நிற்பதேயாகும். வடகிழக்கு மக்கள் மீது விடுதலையின் பெயரில் தன் ஆதிக்க கரங்களைப் பதித்திருக்கும் தமிழ்த் தேசிவாதத்தின் மீது கேள்வியெழுப்புவதே இன்று நாம் செய்யவேண்டியது.

அது புலிகளை மட்டும் அல்ல தமிழீழ பெருங்கதையாடலின் பெயரில் ஒழிந்துள்ள முழு பாசிசத்தையும் தோலுரிக்கும். இதிலிருந்துதான் தலித்துகளும், முஸ்லிம்களும், யாழ் மேட்டுக்குடி ஆதிக்கத்துக்குட்பட்ட ஏனைய பிரதேசங்களும் தங்கள் விடுதலைக்கான விதைகளை கண்டுகொள்ள முடியும்.

# செய்தி

## எதிர்காலம் மீது நம்பிக்கையூட்டும் ஒரு சிறு கலகம் மாற்றுக்கருத்துக் கொண்ட 3 தோழர்களால் இப் பவளவிழாவில் நிகழ்த்தப்பட்டது.

சுமார் 500 பேர் நிறைந்த மண்டபத்தின் மௌனத்தைக் கலைத்துக் கொண்டு விஜி, நாதன், ஸ்ராலின் எனும் தோழர்கள் ஓர் பிரசுரத்தை வினியோகித்தனர். பாய்ந்தோடி வந்த அமிர்தலிங்கம் பகிரதன் ஸ்ராலினிடம் இருந்து பிரசுரங்களை பறித்துக் கிழித்தெறிந்ததோடு அவரைப் பிடித்துத் தள்ளி வெளியேற்ற முனைந்தார். "நாங்கள் விழா நடத்த இரவலில் வந்து குழப்ப வேண்டாம்." "உங்களைப் போன்றவர்களால்தான் தமிழினம் சீரழிந்து கிடக்கிறது." என்று தன் அப்பன் மேல் போடவேண்டிய பழியை நம் தோழர்கள் மேல் போட்டார். பதிலளித்த ஸ்ராலின் தனக்கான அழைப்பிதழை எடுத்துக் காட்டி தாங்கள் அழைக்கப்பட்டிருந்ததையும், தங்கள் கருத்தை அமைதியாக முன்வைப்பதையும் எடுத்துச் சொல்லி இது எப்படி குழப்பமாகும் என வினவினார். எனினும் விழாக்குழுவினரின் சார்பாக பகிரதன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பிரசுர வினியோகத்தை தோழர்கள் நிறுத்த வேண்டியேற்பட்டது.

* 10நிமிட இடைவெளியில் திரும்பி வந்த பகிரதன் தான் நடந்து கொண்ட விதம் குறித்து மனம் வருந்துவதாகவும், கூட்டம் குழப்பப்பட்டுவிடக் கூடாது என்கின்ற கரிசனையில் தான் ரென்ஷனாகி விட்டதாகவும் ஸ்ராலினிடம் தனிப்பட்ட முறையில் விளக்கமளித்தார்.

* பிரசுரம் முன்வைத்த கேள்விகளுக்கு பவளவிழா நடத்திய எந்தக் கொம்பனுக்கும் பதிலளிக்க வக்கில்லாமல் போனதுதான் உண்மை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போரும்; குழந்தைகளும்

புகை மண்டியதாய் எம் மண்ணைச் சூழும்
பேர்க்காலப் பொழுதுகளில்
சொல்லிக் கொள்ளாமற் போயினர்
எம் குழந்தைகள்

பாசத்தின் முகங்களில் இரு கரத்தாலும்
புழுதி வாரிற்று காலம் -

வாழ்வில் துளிர்விட்ட இளமையின்
இனிமை படரும் நாட்களில்
அவர்கள்
துயரத்தால் எம்மை போர்த்தினர்

சபிக்கப்பட்ட வாழ்க்கையோடு நாங்கள்
எவ்வளவு காலந்தான் மல்லுக் கட்டுவது?

போரின் எஜமானரே,
நெஞ்சுக்குழிக்குள் அவஸ்தையுறும்
தாய்மையின் கல்லறை மீது,
இனியும் சமாதி எழுப்பாதீர்கள்

போர் உறங்கும் இந்நாளில்
அமைதியின் காப்பரே,
வயிற்றுச்சுமை மீண்ட
எம் பிள்ளைகளை மீட்டுத் தாருங்கள்-
நேரில் கண்டு, இனி எங்கள்
நெஞ்சுச் சுமை நீக்க வேண்டும் 1
நெடுநாள்
நெஞ்சுச் சுமை நீங்க வேண்டும் 1



ஏ.ஜீ. எம். ஸதக்கா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கணக்குத் தீர்ப்பு

- கற்சுறா

# "தேசத் துரோகி" சிறுகதைத் தொகுப்பும் உள் அரசியலும்

எக்ஸில் நண்பர்களுள் ஒருவனும் சோபாசக்தியின் நண்பனுமாகிய கற்சுறா ஆகிய நான் எவருடைய வற்புறுத்தலும் இல்லாது, சுய சிந்தனையுடனும் புத்தி சுயாதீனத்துடனும் இந்தக் கணக்குத் தீர்ப்பை எழுதுகிறேன் என்பதனை நீங்கள் சொல்கின்ற அடையாளப்படுத்துகின்ற உலகத்தின் அனைத்துப் புனிதங்கள்- பைபிள், குர்ஆன், கொரில்லா, கீதை- மீதும் தொட்டு புறொமிஸ் பண்ணுகிறேன்.

சோபாசக்தியின் தேசத்துரோகி என்னும் சிறு கதைத் தொகுப்பு அடையாளம் பதிப்பகத்தாரால் அண்மையில் வெளியிடப்பட்டிருக்கிறது. இது இன்று நம்முன்னுள்ள அரசியலின் முக்கியத்துவத்தினை மிகவும் வெக்கம் கெட்ட நிலையில் விழுங்கி தன் சூட்டைத் தணித்திருகிறது. தேசத்துரோகியின் அரசியலைப் பேசுவதினூடாக சோபாசக்கியின் அரசிலையும் சோபாசக்கியின் அரசியலைப் பேசவதினூடாக தேசத்துரோகியின் அரசியலையும் இனம் காணக் கூடியதாக இரண்டும் ஒன்றுக் கொன்று பின்னிப் போயுள்ளன.

சூடு சுரணை வெக்கம் மானம் ரோசம் போன்ற இத்தியதிகள் சோபா சக்தியிடம் இருந்த போது எழுதிய கதைகளை விடுத்து பின் எழுதிய நான்கு( தேசத்துரோகி,பகுத்தறிவு பெற்ற நாள்,சூக்குமம், குரு வணக்கம்) கதைகளின் மீதே இங்கு கவனம் கொள்கிறேன். தமிழ்நாட்டு வாசகர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள சிறுகதைத் தொகுப்பில் நாசூக்காக அரசியல் சித்து விளையாட்டுக்கள் காட்டிவரும் சோபா சக்திக்கு இப்போது தேவையெல்லாம் வெகுசனப் பத்திரிகைகளும் (குமுதம், ஆனந்த விகடன் இந்தியா ருடே)சனரஞ்சகக் கதைகளும் லொள்ளு லோளாய்களுமே.

ஒருகாலத்தில் வெளிவந்த ஈழத்துச் சிறுகதைத்தொகுப்புக்களைப் பார்த்து நக்கல் நளினம் பொங்க சிறுகதைகளைத் தொகுக்கப்படாது ஏலுமெண்டால் நாவல் எழுதவேண்டும் நான் ஒருக்காலும் உந்த வேலை செய்யமாட்டேன் என்று சொல்லித்திரிந்த சோபாசக்திக்கு இன்று சிறுகதைத்தொகுப்பு வெளியிடவேண்டிய தேவை வந்ததும் கவனத்துக்குரியது. ஆனால் அதுக்கும் அங்கால் போய் தான் கொண்ட கொள்கை கோட்பாடு கோதாரி எல்லாம் கைகழுவிவிட்டு அம்மணமாய் நிற்கும் (பார்க்க தேசத்துரோகி அட்டைப்படம் )சோபாசக்தி பஞ்சத்துக்கு புலம்பெயர் சிறுகதை எழுதிக்காட்ட வேண்டியிருக்கிறது.

இன்று புலம்பெயர் இலக்கியம் என்ற மகா பெருங்கதையாடலுக்கு ஆப்படித்து ஆணியடித்து காடாத்திவிட்ட பின்னும் புலம்பெயர் இலக்கியத்தில் தமிழ் நாட்டு வாசகர்களை எழுத்தாளர்களை குளிர் காய வைத்து குசிப்படுத்தியிருக்கிறார் சோபாசக்தி. அவர்களுக்கு புலம் பெயர்ந்த புதினங்களும் ரெஸ்ரோரண்ட் வாழ்வும் அகதி விசாவுக்கு அலையும் கதைகளும் தான் சிறுகதைகள் என்பதாய் விளங்குபவர்கள். அவர்கள் பாவம் அறியாதவர்கள். கவனிக்க- ப.திருநாவுக்கரசால் நிழல் பதிப்பகத்தின் பெயரில் வெளியிப்பட்டிருக்கும் புலம் பெயர்ந்தோர் கவிதைகள் தொகுப்பு அதனால் இவர்களும் காலம் காலமாய் அதையே எழுதிக் குவித்து வருகிறார்கள். இண்டைக்கு சோபாசக்திக்கும் அதே நோய் பிடித்திருக்கிறது! அண்மையில் வெளிவந்த இந்தப் புலம் பெயர்ந்தோர் கவிதைகள் நூலைப் பார்த்தால் இந்தத் துரோகத்தனம் அப்பட்டமாய் விளங்கும். தனக்குத் தேவையான அரசியலில் எங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேற்றுவரை மிகவும் ஆக்கிரோசமாகவும் கோபத்துடனும் இந்த அசிங்கங்களை எதிர்த்து வந்த சோபாசக்திக்கு இன்று அதற்குள் விழுந்து புரள வேண்டிய தேவை என்ன? அல்லது இதுவரை சோபாசக்தி காட்டிய கோபம், எதிர்ப்புக் குரல்கள் எல்லாம் பம்மாத்தா?

பிராங்போட்டில் நடந்த 25வது இலக்கியச் சந்திப்பில் சரிநிகர் சார்பாகக் கலந்த கொண்ட சேரன் சிவகுமாரிடம் சரிநிகரில் கட்டுரைகள் வெட்டப்படுவது தணிக்கைக் குள்ளாவது பற்றி நம்மோடு சேர்ந்து சோபாசக்தி குரல் கொடுத்தவர். ம்மன்னாவுக்கு மேலே இரண்டு புள்ளி வந்தாலும் நீங்கள் எடுக்கமுடியாது என்று பின்நவீனத்துவக் கணக்கில் பதில் சொன்னவர். நான்காவது எக்ஸிலில் றயாகரனின் எழுத்து நடைமுறையில் முன்னுக்குப் பின் முரண பேசியத ற்காக கல்வெட்டு எழுதியவர். அதிலும் சிலவார்த்தைகளை நீக்கச்சொல்லி கலைச்செல்வனால் கேட்கப்பட்டபோது அதன் மீது எதிர்க்கருத்துக் கொண்டு எம்முடன் சேர்ந்து போராடியவர். தன்னுடைய கட்டுரையிலிருந்து ஒரு வரியும் எடுக்கமுடியாது என்று கட்டன் றைற்றாய் பதில் சொல்லியவர். -எழுத்துச் சுதந்திரம் பற்றிய கருத்து மோதலின் உச்சக்கட்டத்தில் (பார்க்க 4வது எக்ஸில் எடிட்டோரியல்)எக்ஸிலை உடைத்து வெளியில் வந்து இன்றுவரை தனித்து சஞ்சிகை நடாத்திக் கொண்டிருக்கிறோம் நாம்.- இப்படியான சூழ்நிலையில் கால் பதித்து எங்களுடன் துணை நின்றவர் சோபாசக்தி. இன்று எக்ஸிலில் பிரசுரமாகிய அவரது பத்துக்கட்டளைகள் சிறுகதையினை அடையாளம் பதிப்பகத்தாரின் அரசியல் இலாபத்துக்காக தணிக்கை செய்து வெளியிட்டிருப்பது மிகவும் வெட்கம் கெட்ட வேலை.

இதற்கும் அப்பால் விளம்பரம் வருகிற எந்த இதழ்களிலும் எழுதமாட்டேன் என்ற கொள்கையைக் கொண்டிருந்தபடியால் தனியே எக்ஸிலிலும் அம்மாவிலும் மாத்திரமே எழுதிக் கொண்டிருந்தவர். அத்துடன் எக்ஸிலில், “இந்தியாருடே இலக்கிய மலர் பார்ப்பன சார்புடையதாக இருந்ததெனச் சொல்லி மலம் துடைத்தெறிந்தவர் நீங்கள். ஆனால் அண்மைக் காலங்களில் நீங்களும் பெரும் பத்திரிகை நோக்கி நகர்வதாய்த் தெரிகிறது. உதாரணத்துக்கு நீங்கள் குமுதத்தில் ஞானக்கூத்தனுடன் நடாத்திய உரையாடலைக் குறிப்பிட விரும்புகிறேன்.உங்களது மதிப்பீடுகள் மாறியிருக்கிறதா? அல்லது இந்தியாருடேக்கும் குமுதத்துக்கும் இடையில் ஏதாவது வித்தியாசத்தைக் கண்டிருக்கிறீர்களா?” என்று அ. மார்க்சிடம் கேட்டவர். (ஏப்ரல்-ஒக்டோபர்2000ஈபக்கம்89) நா. கண்ணன் இந்தியாருடேயில் எழுதியதுக்கு நா. கண்ணன் இந்தியாருடே அக்ரகாரம் என்று அட்ரஸ் போட்டு நாமம் போட்ட நோட்டீஸ் விட்டவர். இவர் இன்று ஆனந்த விகடனில் (சமூகத்தின் பொதுப்புத்தி மட்டம் சார்ந்து விளம்பர வியாபாரம் செய்யும் பார்ப்பனீய மேலாதிக்க சிந்தனையுடனும் சினிமா கிசுகிசுக்களும் இன்ன கொசிப்புக்களும் சார்ந்து வெளிவரும் பத்திரிகை)பேட்டியும் இந்தியா ருடேயில் தனது புகைப்படத்துடன் குறிப்புக்களும் கொடுக்க வேண்டிய தேவையும் தான் என்ன? இப்போது இரவோடு இரவாய் இவர் பார்ப்பனியப் பக்கம் செட்டில் ஆனது எப்படி? அனார்க்கிஸ் குறூப்பை அக்ரகாரம் வெற்றி கொண்டது எப்படியம்மா?

இப்போது அடையாளம் பதிப்பகத்தாருக்கு உருவிக்கொடுக்க கிளம்பியிருக்கும் சோபாசக்தி தனது இருப்பை உன்னதமான வடிவில் தக்கவைத்தக்கொள்ள ஆடைகளைக் கழற்றி எறிந்து விட்டு அவர்கள் முன் அட்டாங்க நமஸ்காரம் செய்து வீழ்ந்து கிடக்கிறார். பதிலுக்கு அவர்களோ இவரைக் கலகக்காரனாய் படம் காட்டி நமக்கு இன்னொரு ஜுனேயை தந்துவிட்டதாய் நம்மையெல்லாம் புல்லரிக்கச்செய்து தாமும் மகிழ்கிறார்கள். ஆனால் இரண்டு பக்கமும் தாம் சொல்வதுக்கோ எழுதுவதுக்கோ எவ்வித சம்பந்தமும் இல்லாது கோவேறு கழுதைகளாய் படுத்துக்கிடக்கிறார்கள்.

எப்பொழுதும் அடையாளத்தாரின் அடையாளப் படுத்தல்கள் சோபாசக்திக்கு அவமானமானவையே. புகலிட- நாடோடி இலக்கியத்தின் கறுப்பு எழுத்து சோபாசக்தியினுடையது. (என்றால் யார் யார் சிவப்பு எழுத்தில் மஞ்சள் எழுத்தில் எழுதுகிறார்கள்?) அகதியாகவும் கலகக்காரனாகவும் இருப்பதால் மட்டுமே இது அவருக்குச் சாத்தியமாகிறது என்கிறது அடையாளம். சோபாசக்தியின் கொரில்லா நாவலுக்கு அடையாளம் எழுதிய குறிப்பில் விளிம்பு நிலை வாழ்வொன்றை வரித்துக் கொண்டவர் சோபா சக்தி என்கிறது. இந்த அடையாளப்படுத்தல்களை வைத்து தமிழ் இலக்கியச் சூழலில் இதுவரை சொல்லப் பட்ட,அடையாளப்படுத்தப்பட்ட அத்தனை விடயங்களையும் பொதுவாக பொய் என்றும் நம்பத் தகுதில்லாதவை என்றும் ஒரு சொல்லில் சொல்லிவிட முடியும். ஏனெனில் சோபா சக்தியுடன் கூடி வாழ்ந்தவர்கள் நாங்கள். அவர் என்ன மனநிலை கொண்டவர். எப்படி வாழ்கிறார் என்பதெல்லாம் நமக்கு பரிபூரணமாகத் தெரியும். ஆனால் வெறும் பணம் பண்ணும் நோக்கில் அடையாளம் பதிப்பகத்தார் இப்படி இட்டுக்கட்டல்களை செய்வது ஒருபோதும் ஏற்க முடியாது. அவர்களுக்குப் பணம் கிடைக்கும் என்பதற்கு அப்பால் இது உண்மையான விளிம்பு நிலையினரையும் கலகக் காரர்களையும் கேலி செய்யும் செயற்பாடு என்பதனை இன்னொரு தடவை அழுத்திச் சொல்ல வேண்டியுள்ளது.

அடுத்து மிக முக்கியமான விடயம் நான் மேலே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொன்னது. எக்ஸிலில்(மார்ச்- ஏப்ரல் 1999,பக்கம்11) வெளியான பத்துக்கட்டளைகள் சிறுகதையினை அடையாளம் பதிப்பகத்தார். தணிக்கைக்குள்ளாக்கி யிருப்பதுதான்.(தேசத்துரோகி பக்கம்113) இங்கே சுத்தமும் தேவை ஒரு கலக்காரனின் (அவர்கள் பாசையில்)கசாப்புத் துணியும் தேவை. இந்த ரெண்டும் கெட்டான் நிலையில் தன்னை வித்து அம்முண்டியாய் அடக்கிவாசித்திருக்கிறார் சோபாசக்தி. இங்கே இவருடைய கலகம் என்னசெய்தது. அல்லது அடையாளத்தின் கலகவெளிதான் என்னசெய்தது. இரண்டு கலகமும் இரண்டறக்கலந்து செகயோதியாய் காசு சம்பாதித்ததுள்ளது. போதாததுக்கு "நீதியென்பது அரசின் வன்முறை வன்முறை என்பது மக்களின் நீதி" என்பதாய் கோட்டேசன் வேறு. கோட்டேசன் மட்டும் போடத்தெரிந்த சோபாசக்திக்கு கலகக்காரனாய்க் காட்ட முடிந்த சோபாசக்திக்கு அடையாளம் பதிப்பகத்தாருடன் தன்கதையினைத் தின்னக் கொடுத்து சமரசம் செய்ததின் இலாபம் என்னவென்று தெரிய ஆவலாகவுள்ளது.

இனிக் கதைக்கு வருவோம்.

1.எப்பேர்ப்பட்ட கொம்பனாக இருந்தாலும் தண்ணிகாட்டி தடி காட்டி வெட்டி ஓடும் வில்லங்கம் - வில்லங்கத்தின் முழுப் பெயர் வீசிராசுத்தம்பி சிறீசிவகாசிவாசி. சிங்களச் சிறீ சட்டம் அமுலில் இருந்த நேரம் இந்தாபார் தமிழ் சிறீ வைக்கிறேன் என்று அவன்ர தேப்பன் வீசிராசர் பெயர் வைச்சுக்காட்ட வகுப்பில டாப்புக் கூப்பிட வாற யாழ்ப்பாணத்துச் சட்டம்பிமார் இதென்ன வில்லங்கம் எண்டு சொல்லிச் சொல்லி அவனுக்கு வில்லங்கம் எண்டு பெயர் வைச்சுப் போட்டான்கள். இந்த வில்லங்த்திற்கு உந்த யாழ்ப்பாணத்துச் சட்டம்பி மாரில கறள் பத்தினதுக்கு உதுவும் ஒரு காரணம். ஆனால் வில்லங்கம் உவேன்ர எந்த உலுப்பலுக்கும் ஆடாமல் அசையாமல் தன்ர பாட்டில வாறதும் போறதுமாக இருந்தான். யாழ்ப்பாணத்து வாத்திமாரோ திங்கள் கிழமை பின்னேரமா(மாலை நேரம் அல்லது சாயந்தரம் என்பது தமிழ் நாட்டு வழக்கு) குவாட்டசுக்க வந்தால் வெள்ளி காலம்பிற கிளம்பிருவானள். அதுக்குள்ள இருக்கிற மூண்டு நாளுக்குள்ள வெங்காயமோ கௌப்பியோ(தமிழ் நாட்டு வாசகர்களுக்காக மொச்சக் கொட்டை) செத்தல் மிளகாயோ விறகோ என்ன விசுக்கோத்தோ கிடைக்கிற மட்டும் சுருட்டுவதுதான் வேலை. பிள்ளையளப்பற்றி தாய் தேப்பனோட கதைச்சால் தான் பிள்ளையள் திருந்தும் எண்டிற பிளானில வீடுகளுக்குப் போய், ரோக்கைப் போட்டு அங்கின காயிற உழுந்து, கௌப்பில கண்ணெறிஞ்சு கை வைக்கிறதுதான் இவங்கட முழு நேர வேலை.

உது ஒண்டும் வில்லங்கத்திட்டையோ அல்லது அவன்ட தேப்னிட்டையோ வாய்க்கவில்லை. வாத்தியார் வீட்டுக்கு வந்த நேரமெல்லாம், வாத்தியார்...நீங்கள் படிப்பிக்கிறதெண்டால் படிப்பியுங்கோ நான் ஒண்டும் உங்களுக்குத் தரமாட்டன். உங்களுக்குத் தானே கவுண்மேந்து காசு தருது. எண்டு டிறைக்டாய் வாய்க்க வைச்சுடுவார் வில்லங்கத்தின்ட தேப்பன். அதால வாத்திமாருக்கோ வில்லங்கத்தில ஒருவித பிடிப்புமில்லாமப் போட்டுது.

2.வில்லங்கத்தை படிப்பிச்சும் ஒரு புண்ணியமும் வராது எண்டு எப்ப யோசிச்சாரோ தெரியாது அவனப் புடிச்சு இவனப் புடிச்சு செட்டப் பண்ணி ஆள ஒருமாதிரி ஏத்தி கொழும்புக்கு கூட்டிப் போய் வெளி நாட்டுக்கு அனுப்ப ரெடிபண்ணிக் கொண்டிருக்கேக்க தான் சிங்களவற்ற சகவாசம் கிடைச்சுது. பம்பலான சனம். கிடத்தட்ட எல்லாச் சிங்களவர்களுக்கும் ஒரு தமிழ்சொல் எண்டாலும் தெரிஞ்சிருக்கு எனக்குத்தான் ஒரு சிங்களச் சொல்லும் தெரியேல்ல எண்டு சங்கேனப்பட்டார். அப்தான் முதல் முதல்ல அமிர்தலிங்கத்தாரில மெதுவாய்க் கோவப்பட்டார். தன்ர ஊர் சிங்களப்பள்ளிக் கூடத்தைக் கொளுத்தியது ஞாபகம் வந்தது. அப்ப இருந்த ஞாயம் வேறதானே என்று சமாதானப்பட்டார். பொடியனை உந்த இயக்கக்காரங்களிட்ட இருந்து டொச்பண்ணி டிமிக்கி கொடுத்து கூட்டிவந்து வெளியில அனுப்பி அலுவல கப் சிப்பென்று முடிச்சுப் போட்டு காய் ஊருக்கப் போறார்.

3.இப்ப வில்லங்கம் சிறீ ஏஜென்சிக் காரனோட மொஸ்கோ போய் பல்கேரியா போய் துருக்கியில வந்து நிக்கேக்க ஏஜென்சிக்காரன் எங்கெண்டில்லாம நட்டாந் தெருவில விட்டேத்தியா விட்டுட்டுப் போட்டான். துருக்கிப் பொலிசுக் காரன் வந்து விறைச்சுப் போய் நிண்டவன பார்த்து, 'மெர்கபா...நஸிஸ்ஸின்...துருக்கி பிலியோரமிஸின்....' எண்ட, இவன் பேந்தப் பேந்த முழிச்சுக் கொண்டு நிண்டான். பொலிஸ் கூட்டிக் கொண்டு போய் ஒருகொட்டலில விட்டிட்டுது. அங்கயும் ஆறேழு புள்ள குட்டி புருசன் எண்டு ஏஜென்சி கைவிட்ட கேசுகள் இருக்கு. ஆறேழு மாசமாய் ஒரு வருசமாய் எண்டு. ஆனால் இவன் தமிழ்சிறீக்கொ நித்திரை வருகுதில்லை. இருக்கிற ஆம்பிளையள் எல்லாரும் காலத்தால வெளிக்கிட்டு 'கரக்கோய்'க்குப் போவதும் மத்தியானச் சாப்பாட்டுக்கு வருவதுமாய் இருக்கினம். சிறீயோ ஒருக்காலும் கரக் கோய்குப் போனதில்லை. சிறீக்கோ எப்ப ஜுரப்புக்குப் போய்ச் சேருவன் எண்டு யோசினையாக் கிடக்குது. வாகீசர் தான் தம்பி வாடா. சும்மா புள்ளப் பெத்த பெண்டுகள் மாதிரி படுத்துப்படுத்துக் கிடக்காத. எப்வெண்டாலும் போய்ச் சேரத்தானே வேணும். வா. சும்மா பம்பலாப் போட்டு வருவம் எண்டு கேட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரி எண்டு சிறீயும் வெளிக்கிட்டுப் போனான் வாகீசருக்கு கிட்டத்தட்ட 50,55 வயசிருக்கும் மனிசனுக்கு அரிப்பு மட்டும் அள்ளகொள்ளையாக் கிடக்கு.
கரக் கோய்க்கு போனவுடன் கேட்டார் தம்பி நீ போப்போறியோடா
சிறீ வெக்கப்பட்டான்.
டேய் சிலோனில இருந்தால் உதுகள கேள்விப்பட்டே இருப்பியோ.
சும்மா வெக்கப்படாத எண்டு அட்வைஸ் பண்ணினார்.
சரி நீவேண்டாம் எண்டால் விடு.
கையில எவ்வள காசு கிடக்கு? பிறகு தாரன் எண்டு கேட்டு வாங்கினார்.
நீ உதில நில்லு இப்பவாறன் எண்டு போன மனிசன் டக்கெண்டு வந்திட்டார்.
பிறகு மனிசி சுல்தான் மார்க்கட்டுக்கு போய் மீன் வாங்கி வரச் சொன்னது எண்டு கூட்டிக் கொண்டு போய், மனிசன் மசிந்திக் கொண்டு நிக்குது. கொஞ்ச நேரத்தால மீன் விக்கிறவன் இந்தா பிடி இனி வராத எண்டது மாதிரி ஒரு பாக் நிறைய வெட்டிப் போட்ட தலைகள அள்ளிக் கொடுத்து விட்டான்.
வாகிசருக்கு பயங்கரச் சந்தோசம்.
ஏனண்ண காசு குடுக்கல்ல எண்டு சிறீ கேட்க அதடா தம்பி நாய்க்குப் போட எண்டு நினைச்சுத் தான் அவங்கள் தாறவங்கள். அவங்களுக்கு நாங்கள் சமைக்கிற விசயம் தெரியாது. எண்டார்.
யாழ்ப்பாணத்ததான்ர புத்தியப் பார். தின்னுறத்துக்கு 5சதம் செலவழிக்கமாட்டானள். நகை நகையா குண்டிக்கம் போடுவானள் எண்டு சிறீ மனதுக்குள்ள பேசினான்.
நடந்த வாக்கில வாகீசர் கேட்டார்.
தம்பி நீ யாழ்ப்பாணத்தில எவடம்?
நான் பல்லவராயன் கட்டு.
அதெங்க தம்பி இருக்கு.
வன்னியில அண்ண.
ஓ... வன்னியாக்களுக்கும் இப்ப வெளிநாடு கேக்குதோ.
...
தமிழ்சிறீக்கு இப்ப யாழ்பாணத்து வாத்திமார் கண்ணுக்க வந்திச்சினம்.
ஒரு பதிலும் சொல்லேல்ல பல்ல மட்டும் இறுக்கிக் கடிச்சுக் கொண்டு பாலையடி வைரவனை வேணடிக்கொண்டு நடந்து கொண்டிருந்தான்.

4.தமிழ் சிறீ பரீசுக்கு வந்து கேஸ் எழுதி அனுப்பிப் போட்டு, பச்சை விசாவிலேயே வேலை செய்ய வெளிக்கிட்டு விட்டான். பேப்பர் போடுறது. கோப்பை கழுவுறது எண்டு ஆப்பிட்டதை செய்து ஐஞ்சோ பத்தோ உழைச்சத சமறி கெடுத்து காத்தி ஓறேஞ்ச் எடுத்துக் கொண்டு. ஏஎம்பியை அப்பிடியே வீட்டுக்கு அனுப்பி கடனைக் கட்டிக் கொண்டிருக்க மூண்டு மாதத்தில ஒவ்ப்ரா கூப்பிட்டு றிஜைக்ட் பண்ணி விட்டுது. சிறீக்கு ஒரே குழப்பம். ரூமில இருக்கிறவங்கள் எவனப்பாத்தாலும் இயக்கத்தில இருந்து அங்க வெட்டினன் இங்க வெட்டினன் எண்டுறான்கள் அவனுகளுக்கெல்லாம் இந்த ஒவ்ப்ரா காட்டைக் குடுத்திருக்கு. என்ர கண் தெரிய கொலை செஞ்சவனெல்லாம் சிட்டிசன் வைச்சிருக்கான். இவங்களிட்ட இருந்து தப்பிவந்த எனக்குக் காட் தாறாங்களில்லை. இந்த ஒவ்ப்ராக் காரங்கள் கொமிசன் காரன்களுக்கு விளக்கம் காணாது என்று மனதுக்குள் நொந்து எரிந்து கொண்டு கலே வழியாய் லண்டன் போறதுக்கு அடுத்த பிளான் போட்டுட்டு, கெண்டெயினர் ஏஜென்சிக்கு ஒரு ஏஎம்பியை எடுத்துக் கொடுத்துப் போட்டு பார்த்துக் கொண்டிருக்கிறான்.

5. சிறீயை 'கலே' போடரில வைச்சு பிடிச்சப் போட்டான்கள். ஏஜென்சிக்காரன் அடிச்சு ரூமுக்கு சொல்ல 'இந்த லூசனையும் பிடிக்காட்டி பிறகு போடரில இமிக்கிரேசன் என்னத்துக்கு இருப்பான்' எண்டு ரூம் பொடியள் சொல்லிச் சிரிக்கிறான்கள்.
சிறீயை லண்டன் அரசு பரீசுக்கு பிரஞ்சு அரசு சிலோனுக்கு அனுப்பிற பேப்பரில சிறீயைக் கையொப்பம் இட வற்புறுத்திக் கொண்டிருக்குது. சிறீயோ ஒவ்வொரு தடவையும் தன்ர உடம்பில பிளேட்டால வெட்டுறதும் சட்டையக் கிழிக்கிறதுமா பிரஞ்சுப் பொலிசுக்கு அலுப்புக் கொடுத்துக் கொண்டு காலத்தை ஜெயிலுக்குள்ள கழிக்கிறான்.
முடிந்தது.

இப்ப, இது ஒரு நல்ல சிறுகதை என்று இந்த இலக்கிய உலகம் ஒப்புக் கொண்டால் தேசத்து துரோகியில் வந்த நான்கும் சிறுகதைகளே. ஆனால் இப்படி 58483675 சிறுகதைகள் நமது ஒவ்வொருவரிடமும் உண்டு. அவை மட்டுமல்ல நமது வாழ்வு இலக்கியம் என்று பதிவு செய்ய. கிட்டத்தட்ட 25 வருடங்கள் ஓடிவிட்டது புலம் பெயர் வாழ்வு. அன்றிலிருந்து இன்றுவரை இந்தப் புலம்பல்தான் இலக்கியமாக பதிவாகியிருக்கிறது. இதுதாண்டிய பதிவின் தேவைதான் இன்றைய இலக்கியத்தின் தேவையாக இருக்கமுடியும். இது சோபாசக்திக்கும் வெளிச்சம்.
இவை எல்லாவற்றிற்கும் அப்பால் சோபாசக்தியின் தற்கால இலக்கியச் செயற்பாடுகள் தான் எமக்குச் சந்தேகத்தினை ஏற்படுத்தியிருப்பவை.

♦ ஜெயபாலன் நா.கண்ணன் போன்றோர் குமுதம் இந்தியா ருடே போன்றவற்றில் சங்கமமாகியதுக்கு கோபம் கொண்டவர், இன்று தானும் அதனுள் சிக்கியிருப்பதும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

◆ கருத்துச்சுதந்திரத்துக்கு நம்முடன் நின்று போராடியவர் இன்று எல்லாம் மறந்து அடையாளம் பதிப்பகத்தாரிடம் தன்னுடைய சிறுகதையை தணிக்கை செய்து வெளியிடச் சம்மதித்ததும்

◆ புலம் பெயர்ந்தோர் இலக்கிய மகா கதைவிடலை நிராகரித்தவர் இன்று தமிழ்நாட்டுச் சூழலை மனதில் கொண்டு 'புலம்பெயர் இலக்கியம்' பண்ணியிருப்பதும், இன்னும் பிறவும் நமக்கு அவர் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றவை. இவ்வளவு காலமும் ஜெயபாலன் மீதும் கண்ணன் மீதும் இவர் காய்ந்து கொண்டது தனக்கு அந்த இடம் கிடைக்கவில்லை என்கிற வயித்தெரிச்சலில் தான் என்றும் நாம் யோசிக்கிறோம். நாம் தான் ஏமாந்து போனோம். இங்கே நம்மால் ஒரு கல்வெட்டினை சோபாசக்திக்காக எழுத முடியாமல் இருப்பதற்காக கவலைப்படுகிறோம்.

ஆனால் சோபாசக்தியோ

ஆம். நான் குழப்பம் விளைவித்தேன் அட்டகாசம் பண்ணினேன். சாருநிவேதிதா பிரேம் ரமேஷ் போன்றோரை விசம் குடித்துச் சாகவும் சொன்னேன். ஏன்? இந்தியாருடே ஆனந்த விகடன் குமுதம் கூடாது என்பதற்காகவா? இல்லை! இந்தியா ருடே குமுதம் ஆனந்த விகடன் கொள்ளையரின் (ஜெயபாலன், நா.கண்ணன்) கூடாரம் ஆகிவிடக் கூடாது என்பதற்காகவே. என்று பராசக்தி வசனம் பேசினாலும் பேசுவார்.

◆ நாம் தான் அவருடனான கணக்கை தீர்த்து வெட்டிவிட வேண்டியுள்ளது.

அவசியமான ஒரு இடைக்குறிப்பு:
இலக்கிய தகடுதத்த வேலையில் தனது வித்துவ விளையாட்டை காட்டியிருக்கும் சோபா சக்தி பத்துக் கட்டளைகள் சிறு கதையில் கறுப்பு மை பூசி அழித்து தணிக்கை செய்திருக்கும் வார்த்தைகள் இங்குள்ளன. இவை மிகவும் புத்திசாலித்தனமாக நம்மை ஏமாற்றி வெட்டப்பட்டதாகவும், வெட்டியதும் விளங்காமலும் கைங்கரியம் பண்ணியுள்ளது. யாராவது மடையர் இதைப் போய் சோபாசக்தி ஏன் வெட்டுவான் என்று கேட்டால் அதுதான் சோபா சக்தி என்று மட்டுமே நம்மால் சொல்ல முடியும். ஆனால் வார்த்தைக்கு முன்னும் பின்னும் உள்ள வார்த்தைகளை எக்ஸிலில் தேடிப்பார்த்து ஆச்சரியமடைக.

1. ஆசிரியரின் மனைவியை இச்சிக்கா திருப்பாயாக.
2. தறிக்கப்பட்டு உதிரம் சொட்ட கூடைகளில் சேகரம் செய்யப்பட்டன.
3. கணத்தில் ஒவ்வொருத்தியும் கா்ப்பவதியானாள். இப்படியாகக் கா்ப்பம்...
4. தின்றுவிட்டு
5. வாக்குக் கொடுக்கவும் ●


## "யாதுமாகி பதிப்பகம்"

37/17 மாடி, ராமசாமிகோயில் சன்னதி தெரு, பாளையங்கோட்டை.
திருநெல்வேலி - 627 002. தமிழ்நாடு. ✆ : 0462- 2560083

| | |
|---|---|
| நான் இந்துவல்ல நீங்கள் ? (பேட்டி) | விலை ரூ. 5 |
| இதுதான் பார்ப்பனியம் - சிவக்குமரன் | விலை ரூ. 15 |
| திருக்குறள் (தமிழ் - ஆங்கிலம்) (G.U. போப்பின் ஆங்கில குறளுடன்) | விலை ரூ. 45 |
| திருநெல்வேலிக்கு கிறிஸ்தவம் வந்தது - டேவிட் பாக்கியமுத்து | விலை ரூ. 60 |

குறிப்பு : தபால் செலவு இலவசம்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொழுதைக் கொய்தல்

நான் அநேகமாக நித்திரையாகிக் கொண்டிருந்தேன். நான் வாசித்துக் கொண்டிருந்த சிறுகதைத் தொகுப்பின் நான்காவது கதையை நான் வாசித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும். கையிலிருந்து புத்தகம் நழுவி தலையணையில் மெல்ல சாய்ந்துகொண்டது. அதன் போதையை நான் சுகித்திருக்க வேண்டும். கையில் புத்தகங்களை எடுத்தாலே இடையில் ஓர் பக்கம் திறந்திருக்க நான் தூங்கிப் போய்விடுவதுண்டு. எழுத்து என்னில் ஊறுவதும் எழுத்தாளனிடமிருந்து நான் விடைபெற்று அதை நகர்த்தபவனுமாய்ப் போவேன். பின்னர் தூங்கிப் போய்விடுவேன்.

இப்போ அவன் தொலைபேசியில் தொடருகிறான். ஏன்ரா கடிதம் எதுவும் போடுவதில்லை. ரெலிபோனும் அடிப்பதில்லை. சண்டை முடிஞ்சுதெண்டாப்போலை எல்லாம் சரிவந்திட்டுதெண்டு நினைக்கிறியோ..ஒரே கஸ்ரமாயிருக்கு. கொஞ்சமாவது காசு அனுப்பிவை.

ம்...

தொலைபேசியை வைத்து பல நிமிடங்கள் போயிருக்கும். என்னிடம் சொல்வதற்கு இப்போதெல்லாம் வார்த்தைகள் தயாரிக்கப்பட்டும் இருப்பதில்லை. தானாகவே வருவதுமில்லை. இந்த விடயத்தில் நான் களைத்துப் போயிருந்தேன். கொழும்பு வந்து தொலைபேசி எடுத்து.. பின் யாழ்ப்பாணம்...பின் ஊர் மனையில் முளைத்த ரெலிகொம்கள்.. என இப்போ வீட்டுக்கும் வந்தாயிற்று. சண்டைகள் நின்று அமைதி வந்து செய்துவிட்டுப்போன சலுகை.

இப்போதெல்லாம் ஓம் என்று மட்டும் சொல்லிவிட்டு பேசாமல் இருந்துவிடுவது சுலபமான வழியாகப் பட்டது.

பனிக்காலம் தொடங்கி நாட்களாகியும் இன்னம் வின்ரர் ரயர் மாற்றாததால் பொலிசில் மாட்டுப்பட்டிருந்தேன். ஒரு வாரத்துக்குள் ரயரை நான் மாற்றி விடவேண்டும். கால அவகாசம் மிகக் குறுகியதாகப் பட்டது எனக்கு. ஒரு பதினைந்து கோப்பி குடிக்கும் காசு போதும் இதைச் செய்வதற்கு. இன்று திகதி 20. சம்பளம் வர இன்னும் ஒரு வாரம் இருக்கிறது. அதற்கு முன்னரே இதை நான் செய்து முடித்துவிட்டு அந்தத் துண்டை பொலிசில் சென்று காட்ட வேண்டும். இந்தப் பணத்தை உருட்ட நான் யோசித்துக் கொண்டிருந்தேன். தொலைபேசி உரையாடலை நான் மறக்க வேண்டும்.

பியர் ஒன்றை எடுத்துக் கொள்கிறேன். மெல்லிய தாகமாய் இருந்திருக்க வேண்டும். புத்தக அலுமாரியில் புத்தகங்களை ஒழுங்காக்க வேண்டும் என்பது என் நீண்ட நாள் வேலைத்திட்டம். சரி அதை இன்று முடித்துவிடுவோம். புத்தங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஜீவியாக என்னுடன் பேச.. நானும் ஆழியாளுடனோ கலாமோகனுடனோ அல்லது அமார்க்ஸ், ராஜ்கௌதமனுடனோ இன்னும் போய் கப்ரால் உடனோ பேசிக்கொண்டிருந்தேன். புத்தக அடுக்கலும் சரியாய்ப் போய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட்டது. அள்ளி அடைசிவிட்டு பியரையும் முடித்துக் கொள்கிறேன்.

இப்படியாக நாட்களில் நான் உருண்டுகொள்கிறேன்.

நான் இப்போ அயர்ந்து தூங்கியிருந்திருக்க வேண்டும். இன்றும் தலைமாட்டில் புத்தகம் நழுவிக் கிடந்தது. நான் எழுந்தபோது அதுவும் தரையில் விழுந்தது. என்னதான் அவசரம் இருந்தாலும் அதை அப்படியே தரையில் விடுவது எனக்கு உடன்பாடானதாக இருப்பதில்லை. சிறுவயதில் புத்தகத்தை காலால் மிதித்தால் தொட்டுக் கும்பிட வேண்டும் என்று எனது அப்பா சொல்வது அல்லது நிர்ப்பந்திப்பது சரியானதாகப் படுவதால் தட்டாது செய்வேன். அது எனக்கு இப்போதும் சரியானதாகவே படுகிறது.

இன்று ஞாயிற்றுக் கிழமை. தொடர்ச்சியாக வேலைசெய்து நான் கழற்றிவிடப்படும் நாள் இன்றுதான். நான் இடைஞ்சலற்று, அலாரம் ஒலியற்று, நீண்டுவளரும் தூக்கத்தில் பயணிப்பதில் ஆனந்தம் கொண்டிருந்தேன். அதுவும் மீண்டுமோர் ஊர்த் தொலைபேசி மணியால் உதறப்பட்டுவிட்டது. இனி தூங்குதல் சாத்திய மில்லை. மதிய உணவுக்கு ஏதாவது தயார் செய்தாக வேண்டும். கொஞ்சம் காலாற காற்றுவாங்க ஒரு நூறு மீற்றராவது நடக்க வேண்டும். வேலைக்கு இழுத்துச் செல்லும் எனது காரை திரும்பிப் பார்க்காதிருக்க வேண்டும். எல்லாம் சிறிய ஆசைகளாகவும் பட்டது. சாத்தியப்படுமா என்பதில் பதட்டமும் இருந்தது. சிலவற்றை சாதித்தேன்.

தொலைக்காட்சிமுன் குந்துகிறேன். எல்லாம் ஈராக்கினுள் படையெடுப்புச் செய்து கொண்டிருந்தன. பொய் எது உண்மை எது என்று மண்டையைப் போட்டுக் குழப்புவதற்கு கொஞ்சம் அரசியலும் தேவைப்பட்டது. முட்கம்பிகள் அருகில் 4 வயதுப் பாலகன் தகப்பனுடன் இருத்தப் பட்டிருந்தான். தலையை மூடி சாக்கு கட்டப்பட்டிருந்தது. பத்திரிகையாளன் குறிவைத்து சுடப்படுகிறான். குழந்தைகள் எரிகாயங்களில் அலறுகிறார்கள் வைத்தியசாலையில. வைத்திய சாலைமீது குண்டு விழுகிறது. மனித உரிமைகள் பற்றி அமெரிக்க ஜனாதிபதி உரையாற்றுகிறார். அவரின் இழுப்பில் சுற்றிச் சுற்றி ஓடுகிறது பிளேயர் -பிரித்தானியப் பிரதமர். அமெரிக்க ஜனாதிபதியையும் கிற்லரையும் அருகருகாகக் கொணர்ந்து செய்தியை முன்னறிவுப்புச் செய்கிறது அல்மெனார் என்ற லெபனான் தொலைக்காட்சி. எல்லாம் தடல்புடலாக நடந்து கொண்டிருந்தது.

இன்னும் இரண்டு மணி நேரத்தில் நாதனும் அவனுடன் கூட்டாளிகளும் வரப் போகிறார்கள். மனிதாபிமான அடிப்படையிலாவது பங்களிப்பு செய்யும்படி கேட்பார்கள். சகல ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடும் ஒரு இனத்தைச் சேர்ந்தவன் நீ என்று போன தடவையும் ஞாபகப்படுத்திவிட்டுப் போனார்கள். இன்று மீண்டும் வருவதாக அடித்த தொலைபேசி ஞாபகத்துக்கு வந்துபோனது. நாதனுடன் வந்த அந்த தடித்த இளைஞன் பெயர் மறந்து விட்டது. அவன் தனது கையில் பைல் ஒன்றுடன் நட்ட கல்லுப் போன்று உட்கார்ந்திருந்தான். மற்றவர்கள்போல் எதுவுமே விவாதிக்காமல் இருந்தவன் போகும்போது கதவுக்கு வெளியில்... அண்ணை! ஒருநாளைக்கு வருத்தப் படுவீங்கள் என்றுவிட்டுப் போனான்.

எழுபதுக்கும் மேற்பட்ட உலக நாடுகளில் ஈராக் யுத்தத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன. உலக வரை படத்தில் இன்னொரு நாடாகப் போகிறது எங்கள் நாடு என்பவர்கள் இந்த யுத்த எதிர்ப்பை எங்கு காட்டப் போகிறார்கள் என்று நான் நினைத்தது எனது தவறாகப் பட்டது. இடையிடையே நான் ஏதாவது அதீதமாக யோசிக் கிறேனா என்றுவிட்டு தரையிறங்கி விடுவேன்.

தொலைக்காட்சியில் வெடி குண்டுகள் புகைமண்டலங்கள் அழுகுரல்கள்... ஈராக்கிய மக்களின் எதிர்காலம் மீது கவிழ்ந்துகொண்டிருந்தது.

வெளியில் நல்ல வெயில். குளிரற்று காலநிலை சிரித்துக் கொண்டிருந்தது. அவர்கள் வருவார்கள். நான் தமிழன்தான் என்பதையும் எனது இனம் ஆக்கிரமிப்புக்கு எதிரானது என்பதையும் அவர்கள் மீண்டும் ஞாபகப்படுத்திவிட்டுப் போவார்கள். மனிதாபிமானம் பற்றியும்தான்.

தொலைபேசியின் இருப்புக்கு இடையில் எனது குழந்தை பத்திரமாகச் சொருகியிருந்து பேப்பர் கட்டிங் காற்றிடை அசைகிறது. பட்டினியில் வாடும் ஆபிரிக்கக் குழந்தைக்கான உதவிகேட்டு அது என்னை அசைத்துக் கொண்டிருக்கிறது. ●

ரவி-(சுவிஸ்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பின்நவீனத்துவம்: முன்நகரும் சமூகத்தில் மாறுதல்

நாதன்

சமூகவியல் தத்துவமான 'நவீனத்துவம்' பிரகடனப்படுத்திய முதலாளித்துவ-ஏகாதிபத்திய உலகமா?

இல்லை 'என்றைக்கோ வரப்போகிற வர்க்கப்புரட்சிக்காக' நாம் காத்திருக்கும் உலகமா!

இன்றைய உலகம்.

.........................................

இயங்கியல் ஆசான்கள் மொழிந்து பதித்தவை அனைத்தும் உண்மையென்றால் இன்றைய உலக-சமூகங்களையும் அவைகளின் நகர்வுகளையும் புரிந்துகொள்ள (மதங்கள் தவிர்ந்த) இறுகிய தத்துவங்களைக் கோரிய நவீனத்துவ கால இறுதிக்கும் பின்நவீனத்துவ சிந்தனைக்கான தொடக்கத்திற்குள்ளும் நாம் நகர்ந்துகொண்டிருக்கின்றோம்.

பின்நவீனத்துவம் மேற்கத்திய அறிவுமுறை அதை கீழைத்தேய சமூகங்களுக்குள் பொருத்துவதும் அதுபற்றிய மொழிதலும் பயனற்றவை, 'அடிதளம்' என்பதனுள் அடிக்கிய வகைகளையும் 'மேற்தளம்' என்பதனுள் அடங்கிய வகைகளையும் எச்சமூகத்திலும்! தூணிலும் துரும்பிலும் கூடப் பொருத்தலாம், என அடம்பிடிப்பதோடல்லாது "வரலாற்றை 'முன்வண்டியில்' கட்டியிழுத்துக் கொண்டோடுவது மார்க்ஸியம்தான்" (சிவத்தம்பி) என குண்டுச்சட்டிக்குள் குதிரையோட நாம் மறுக்கின்றோம்.

நவீனத்துவத்தின் முன்னோடிகளான DURKHEIM, MARX, WEBER போன்றவர்களின் கருத்தியலான் வேறுபாட்டியல், வர்க்கயியல் அறிவியல் போன்ற தத்துவங்களே சமூக-மானிட முன்னகர்விற்கான பிரதான நியதிகளாக நவீனத்துவத்தால் நிறுவப்பட்டது.

பின்நவீனத்துவமானது மானிடத்தொகுப்பான சமூகத்தை தனிநபர் தனித்துவ "உடன் நிகழ்வுப் பண்புகளுடனும்" (EPI GENATIQUE) மானிட உலகத்துக்குள் பொருத்துகிறது. (பின்பு விபரமாக)

பின்நவீனத்துவத்துக்கான ஆதாரம் நவீன சித்தாந்தத் தோற்றுவாய்க்கு காரணமாகத் திகழ்ந்த, மேற்குலகின் தொலைந்து போன 'அறிவொளிக்காலம்' கீழைத்தேயத்திலும் நவீனத்துவத்தைத் தொடர்ந்து நியாயப்படுத்துவதாயின் நாம் அறிவொளிக்காலத்திலும் வாழந்துகொண்டிருக்கின்றோம் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டியவர்கள் ஆகிறோம். எனவே நவீனத்துவம் அறிவொளிக்காலத்தை நிராகரித்தது போல் பின்நவீனத்துவமும்; நவீனத்துவத்தை நிராகரிக்கும்.

நவீனத்துவத்திற்கு மாற்றான பின்நவீனத்துவமும் தொடர் சமூக மாற்றத்தை, இலகுவாகவோ, வரையறுக்கக்கூடியதாகவோ எதையும் முன்மொழிய முடியாது. ஒரு நம்பிக்கையில் MORDERNE, POST MORDERNE, COEXISTER (இணைந்திருப்பது) என்பதாகத் தொடரலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு புதிய சமூகத்தோற்றத்துக்கான புள்ளி நவீனத்துவத்துக்கான எல்லையை பூர்த்தி செய்யும் முகமான தோற்றமாகிறதா?

............................

எனவே நாம் பின்நவீனத்துவ சிந்தனை என்கிறோம்.

பின்நவீனத்துவம் ஒரு புரியாத புதிர், தமிழுக்கு ஒவ்வாத மொழி என்பதாகவும், "புலம்பெயர் இலக்கியம் என்பது உண்மையில் ஈழத்தமிழர்களின் 1980-1990 களின் அவலங்களின் விஸ்தரிப்பு..."

...

"... 1990களில் அது தமிழகத்தில் முதன்மைப் பட்டதற்கான சமூக அரசியல் பின்புலத்தை நோக்காமல் வாய்ப்பாட்டை ஒப்புவிப்பது போல் ஈழத்திலும் தலித்தியம் வேண்டும் என்பது வரலாற்று முரணாகும்." (சிவத்தம்பி) என்பதாக தேசிய வெறிக்குரல்கள்.

## பின்நவீனத்துவம்:

சமூக வாழ்வில் மனிதர்களின் சுயநல-தந்திர-உபாயங்களை பறவைகள், மிருகங்கள் ஊடாக வெகு இலகுவான புரிதலில் கவிதைகளாக சொன்னவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கவிஞர் JEAN DE LA FONTAINE (1621-1695) இவரின் சிந்தனை ஊற்றுக்கு காரணமாகத் திகழ்ந்தவர் கி.மு VII-VI ஆண்டுகளில் வாழ்ந்த கிரேக்க நாட்டைச் சேர்ந்த ESOPE (FABULISTE) என்பவராகும். JEAN DE LA FONTAINE இனது கவிதைகளானது சிறுவயதில் எமக்கு ஓதிய

* நரியும் திராட்சைப் பழமும்
* ஆடு நனைய ஓநாய் அழுதது.
* காகமும் நரியும் (வடை)
* நரிக்கு முள்ளெடுத்த கொக்கு,

இப்படியாக இவரது கவிதைகள், பல மொழிகளில் பெயர்க்கப்பட்டதென மேற்குச் சான்றுகள்.

எனவே "காகமும் நரியும் கவிதை", கதைகளாக அனைத்து நாடுகளிலும் பொருந்தி உள்ளதுபோல் பின்நவீனத்துவமும் மனிதர்கள் வாழும் அனைத்து இடங்களிலும் பொருந்தும்.

## புலம்பெயர் இலக்கியம்:-

நொவம்பர் 2002இல் திருகோணமலையில் நடைபெற்ற எழுத்தாளர்களை கௌரவிப்பதற்கான இலக்கிய விழாவை நாம் அறிந்துகொண்ட வகையில் புலம்பெயர் இலக்கியம் மீது பெருமைகொள்ளத் தோன்றும்.

*விழாவின் சுருக்கம்:*

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட திருகோணமலை அரசாங்க அதிபரின் இலக்கிய முழக்கம் "சமயமும் இலக்கியமும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல" மேலும் வருந்துகிறார் "எமது உயர்கல்வி நிறுவனங்கள் எதிர்கால சந்ததியினருக்கு நம்பிக்கை ஈனத்தை உருவாக்குவதற்கான காரணமாக இருப்பது சமயக் கல்வியின் பற்றாக்குறைதான்.

வரவேற்புரையாற்றிய இலங்கையின் இந்துக் கலாசார பிரிவின் ஊளியரான ரி.மகேந்திரராஜா "எமது புதிய தலைமுறையினரின் இலக்கிய ஈடுபாடானது கவலைக்கிடமானதாகவே இருக்கிறது, எமது கலாச்சார மதிப்பு உடைந்து சிதைந்து விடாமல் தடுத்தாக வேண்டும்"

திரு.கந்தையா (காந்தி மாஸ்ரர்) பாடசாலைகளிலும், சர்வகலாசாலை வைபவங்களிலும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறாராம்... "எமது கல்வி முறையானது சமூக பாதுகாப்பிற்கான பொறுப்புணர்வை அறிவுறுத்தும் வகையில் அமையவில்லை என்பதோடு, பெற்றோர்கள் தமது சொந்த சமயக் கல்வியை ஊக்கப்படுத்துபவர்களாக இல்லாது இருக்கிறார்கள்.

## தலித்தியம்:-

இந்தியாவும், புலம்பெயர் நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களும் சாதியச் சமூகமாகையால் தலித்தியமும் எங்கும் பொருந்தும். இந்த மிக இலகுவான சமன்பாடுகள் எமக்கு வெளிச்சு விட்டதால் ஒரு முடிச்சுக்குள் எம்மை இறுக்கிவிட நாம் வியூகங்களுடன் புலமைகள் சுமந்த நிபுணர்கள் அல்ல. எமது சாதியச் சமூகத்துள் நிலவும் மையவாத நிராகரிப்புக்குள்ளாகிய விளிம்புநிலை மக்களுக்கான நிபந்தனையற்ற ஆதரவாளர்களும், அவர்களின் நலன்கள் நிமிர்த்தம் நிபந்தனையற்ற முரண்பாடுகளையும் கொண்டவர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமக்கு அனைத்து மார்ஸ்சிய மொழிகளிடமிருந்தும் உச்சிவிட நிறையவே வாய்ப்புக்கள் இருந்தும், சிவசேகர மார்க்ஸ்சியத்திடமிருந்து உச்சுவது மிக எளிதான காரியம் அல்ல ; புராதன மார்ஸ்சியம், நிலவுடமை மார்க்ஸியம், நவீன மார்க்ஸியம், பின்நவீனத்துவ மார்க்ஸியம், COEXISTE மார்க்ஸியம் என்பனவாக வரலாற்றை கட்டுவோம் ஆயின் சிவசேகர மார்க்ஸிய முகம் மலருமோ?

⇩ ⇩

உயிர்கள் பற்றிய கரிசனையானது வெற்று நினைவுகளாகிப் போக; 'நன்மை' 'தீமை' எனும் இருமைக் கோட்பாட்டு வரலாற்றுக்குள் மட்டுமே தேங்கி நிற்கும் அமெரிக்க - ஈராக் யுத்தமும்

அமெரிக்கா மீது கொதித்தெழும்பியவர்கள் எல்லோரும் சகஜ நிலமைக்கு திரும்பிய சூழல், மேலும் ஒரு யுத்தம் தொடங்கும் வரை மீண்டும் கொதிப்பதற்காய்க் காத்திருப்போம். ...

ஒரு நாடு தனது நலன்கள் அச்சத்துக்கு உள்ளாகும் போதே பிறநாட்டின் மீதான சுதந்திரம் பற்றிப் பேசுகிறது.

உதாரணம்:

ஐ.நா பாதுகாப்புச் சபையின் ஒப்புதல் இன்றியே நான் யுத்தத்தைத் தொடங்குவேன் என BUSH கூவியபோது அதற்கெதிராக எனது வீட்டோ அதிகாரத்தை பிரயோகிப்பேன் என பிரான்சும் மிரட்ட, பிரான்சின் உற்பத்திகள் அமெரிக்காவில் பகிஸ்கரிக்கப்பட்டதோடு மட்டுமல்லாது, பிரான்ஸ் நன்றி மறந்துவிட்டது எனவும் பிரான்சைப் பாதுகாத்த எமது இராணுவ வீரர்கள் NORMANDIE (பிரான்ஸ்) மயானத்தில் இன்னும் உறங்குகிறார்கள் எனவும் புலம்பியது அமெரிக்கா. அன்றைய சர்வதேசச் சூழலில் சோவியத் ஏகாதிபத்திய முகாமில் பிரான்சும் இணைந்து விடக்கூடாது எனும் அமெரிக்க நலன்களின் அடிப்படையில்தான் அன்றைய ஜேர்மனுக்கு எதிராக, பிரான்சுக்கான அமெரிக்க உதவி அமைந்திருந்தது.

ஜனநாயகம் அர்த்தம் இழந்து இரண்டு நூற்றாண்டுகளைக் கடந்தும், அதன் பயன்பாடுகள் இகழ்ச்சிக்குள்ளாக்கப் பட்டுக் கொண்டிருக்கும் சமகாலச் சூழலில், பல்வேறு இனங்களைக் கொண்டதாகவும் மதச் சிந்தனையையே தமது வாழ்வியல் மூலமாகக் கருதுபவர்களும், பலவருடங்களாக சர்வாதிகார ஆட்சிக்கு தம்மை தகவமைத்துக் கொண்டவர்களுமான ஈராக் மக்கள் தமது இரு கரங்களையும் ஏந்தி நிற்கிறார்களாம் அமெரிக்காவிடமிருந்து ஜனநாயகத்தைப் பெறுவதற்காக.

மனித உயிர், மனித நேயம், மனிதாபிமானம் எனும் மொழி இழைப்புனைவுகளால் இன்று உலகம் தலைநிமிர்ந்து நிற்க, தத்துவம், சித்தாந்தம், கோட்பாடுகள் எனயாவும் செயலிழந்து முடங்கிப் போக; கொலைக்கருவிகளே உலகச் சமூக முக்கியத்துவமாகி அக் கொலைக் கருவிகளுள் இருக்கும் மனிதநேயம் குறித்து(?) யுத்தமே பெற்றெடுத்த ஐ.நா சபை வியூகங்களில் அமெரிக்காவின் காரியச் சூழ்ச்சி.

தன்னிடமிருக்கும் கொலைக்கருவிகளில் மனிதநேயம் இருப்பதாகவும் சதாமிடமிருக்கும் கொலைக்கருவியானது மனிதநேயமற்ற பேரழிவை ஏற்படுத்தும் கொலைக்கருவி எனக் கூறி, உலகத்தில் 'துருவம்' ஒன்றே எனவும் அவ்வுலகில் தனக்கே உருண்டு உலாவி அபகரிக்கும் வல்லமையும், அதிகாரமும் என நிருபித்திருக்கிறது அமெரிக்கா - ஈராக் யுத்தத்தின் மூலமாக. BUSH நிர்வாகமானது அமெரிக்க மக்களிடம் ஈராக் மீதான யுத்தத்திற்கு காரணமாக 2001 செப்ரம்பர் 11 நிகழ்வுக்கும் சதாமுக்கும் தொடர்பு இருக்கிறது என்பதாகவும்; ஈராக் மக்களுக்கான நியாயப்படுத்தலாக சதாமிடமிருந்து உங்களை விடுவிப்பதும் சுதந்திரமும் ஜனநாயகமும் மிக்க நாடாக ஈராக்கை புனரமைப்பதுமே எனது பணி என்பதாக காரியத் திட்டத்திலான சதிப்பின்னலை விரித்தது.

ஐ.நா சபையின் ஏகோபித்த தீர்மானத்தின் அடிப்படையில் KANS BLIX இன் தலைமையில் அமைந்த பேரழிவு ஆயுதபரிசோதனைக் குழுவொன்று ஈராக்குக்கு அனுப்பப்பட்டு, அக்குழுவும் பலநாட் பரிசோதனையின் பெறுபேறுகளாக குறிப்பிட்ட பேரழிவுக்கான கொலைக்கருவிகள் எதுவும் இல்லை என உறுதிப் படுத்தியும் அதை ஏற்றுக்கொள்ள மறுத்த BUSH நிர்வாகம் தன்னிடம் அதற்கான ஆதாரங்கள் இருப்பதாகக் கூறி தனது ஆகாய வேவுப்பிரிவினால் பெறப்பட்ட ஆதாரங்கள் என சிலவற்றை பாதுகாப்புச் சபைமுன் கையளித்து, யுத்தத்திற்கான பெரும்பான்மை ஆதரவைப் பெறுவதற்கான நாளையும் BUSH நிர்வாகம் அறிவித்தது.

இவ்யுத்தத்திற்கு எதிராக பாதுகாப்புச் சபையின் பெரும்பான்மை இருப்பதையும் பிரான்ஸ் யுத்தத்திற்கு எதிராக தனது வீட்டோ அதிகாரத்தை பிரயோகிக்கப்போவதாக பகிரங்கப் படுத்தியதாலும், எமக்கு பாதுகாப்புச் சபையின் அனுமதி தேவையில்லை எனக் கூறி சில நாடுகளின் மறைமுக ஆதவுடன் அமெரிக்காவும் லண்டனும் யுத்த நாட்குறித்து நிறைவேற்றியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈராக் மீதான அமெரிக்க யுத்தத்திற்கு எதிராக வீட்டோ அதிகாரத்தை பிரயோகிக்கப் போவதாக மிரட்டிய பிரான்ஸ் ஜனாதிபதி பிரன்சுப் பொதுமக்களுக்கான தனது உரையில், "பிரான்ஸ் யுத்தத்திற்கு எதிரான நாடும் அல்ல, அமெரிக்க எதிர்ப்பு நாடும் அல்ல. ஐ.நா இன் தீர்மானங்களை நிறைவேற்றுவதே எமது பணி" என்பதாகவும், ஈராக்கின் தோல்விக்கு பிற்பாடு சதாமின் சர்வாதிகாரம் தோற்கடிக்கப்பட்டதில் பிரான்ஸ் மகிழ்ச்சி கொள்வதோடு யுத்தத்தால் சிதைந்து போன ஈராக்கின் புனர் நிர்மானப் பணிகளில் ஐ.நா சபையின் அங்கீகாரம் பெற்று பிரான்சும் ஈடுபடும் எனவும் தெரிவித்தார்.

தனது மல்டி மில்லியோனர்களின் நலன்களுக்காகவே பாதுகாப்புச் சபையையும் நிராகரித்து யுத்தத்தை மேற்கொண்டு வெற்றியீட்டிய BUSH நாமே ஈராக்கின் புனர்நிர்மானப் பணிகளுக்கான உரிமையுடையவர்கள் எனத் தெரிவித்ததுடன் யுத்தம் முடியும் முன்பாகவே பல தொழிலதிபர்கள் குவைத்தில் தமது சூறையாடலுக்கான முன்தயாரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

பிராதானமானவைகளுக்கு அப்பால் (யுத்தம்) நிரந்தரமான!!! கடவுளுக்கே சோதனை. அமெரிக்க-லண்டன் கூட்டுக்கும் ஈராக்கிய படைகளுக்கும் ஒரு புதிய வகைப் பிரார்த்தனை... நாடுகள், மனிதர்கள் என்பதற்கு அப்பால் பெரு நாசத்தின் விளைவை எதிர்பார்ப்பதாக இருக்கிறது இன்றைய நாகரீகங்களும், மதங்களும்.

"எமக்கான கடவுள் இருப்பாராயின் அவர் எமக்கு எதிராகவா இருப்பார்?" இது முதலாவது உலக யுத்தத்தின் போது ஜேர்மனிய படைகளின் இடுப்புப் பட்டிகளின் மீது பொறிக்கப்பட்ட வாசகம். இன்றைய அமெரிக்க- ஈராக் யுத்தத்தின் போதும் எமது தேசமானது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதால் 'வேண்டுதல் நாள்' பிரகடனப்படுத்தப்பட்டு அன்றைய தினம் விரதத்துடனான பிரார்த்தனைகளை அனுஸ்டிக்குமாறும் BUSH கேட்டுக் கொண்டார். அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தின்போது முதல்முறையாக இப்படியொரு பிரார்த்தனையை செனட் சபையினூடாக முன்வைத்தவர் 1863இல் ஆபிரகாம் லிங்கன்.

எந்த நாளில் அமெரிக்கா பிரார்த்தனை நாளாக பிரகடனப்படுத்தியதோ அதே நாளில் ஈராக்கின் முஸ்லிம் மதகுரு ஒருவர் கையில் துப்பாக்கியுடன் "அல்லாவின் அறைகூவல் இன்றைய தினம் முஸ்லிம் பிரதேசத்துக்கு விரோதமானவர்களை வேட்டையாடும்படி." இப்படியாக யுத்தத்தில் ஈடுபட்டவர்களின் பிரார்த்தனைகள் அமைந்திருக்க, கத்தோலிக்க கடவுளின் பிரதிநிதியான போப்பாண்டவர் தனது பங்கிற்கு நீதியான ஒற்றுமையுடன் கூடிய சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு சமாதானமே அவசரமான அவசியமான தேவையெனவும் அதன் முன்தேவையாக இளைஞர்களை யுத்தத்திற்கு எதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் கலந்துகொள்ளுமாறு ஊக்குவித்ததோடு மேலும் எமக்கு தெளிவுறுத்துகிறார் "மானிடத்தின் தவறுகளுக்கு வெளியே கடவுளை சுதந்திரமாக விட்டுவிடும்படி" இருந்தும் தன்னுடைய குரல் வெள்ளைமாளிகைக்குள் நுழைய முடியாததையிட்டு மிக வருத்தமே.(அவருக்குள்ள பல வருத்தங்களுக்கு மத்தியில்)

1. யுத்தத்திற்கான செலவுகள் யாருடையது?
2. யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் யார்?
3. எவருக்கான யுத்தம்?

1. BUSH இன் ஆட்சியின் சாதனையில் அமெரிக்க மக்களுக்கான மருத்துவம், கல்வி, மற்றும் சமூகநல உதவிகளுக்கான நிதியில் இருந்து 49மில்லியன் டாலர்கள் யுத்தத்திற்காக பெறப்பட்டிருக்கிறது. மேலும் யுத்தத்திற்கு பிற்பாடும் கூட 25.7 மில்லியன் ஒதுக்கும் திட்டமும் இருக்கிறது. மொத்தம் 80 மில்லியன் டாலர் ஈராக் யுத்தத்திற்காக செலவிடப்பட்டிருக்கிறது. அமெரிக்கா எனும் அடையாளப் பெருமையொன்றை விட யுத்தச் செலவீனங்களால் பாதிக்கப்பட்டவர்கள் ஆபிரிக்க அமெரிக்கர்களும் குடியேறிய லத்தீன், ஆசிய அமெரிக்கர்களுமாகும். இம்மக்களின் அமெரிக்க வாழ்வியலானது இந்திய மாநிலங்களான சென்னை, கேரளா மற்றும் சீனா, இலங்கை போன்ற நாடுகளில் வாழும் ஏழைகளை விட மிக வறுமையில் வாடும் மக்கள் இவர்கள். இவர்களே ஈராக் யுத்தத்திற்காக செலவு செய்தவர்கள்!!!!

2. ஏழை அமெரிக்க வெள்ளையினத்தவர், ஆபிரிக்க அமெரிக்கர்கள், குடியேறிய லத்தீன் ஆசிய நாட்டவர்களுமே பெரும்பான்மையாக 'தன்னார்வ' இராணுவத்திலும் அமெரிக்கச் சிறைகளிலும் இருப்பவர்கள். மேலும் அமெரிக்க ஜனநாயகச் சிறப்புகளில் ஒன்றாக இருப்பது, கிருமினல் குற்றத்திற்கான தண்டனையை அனுபவித்த 4மில்லியன் அமெரிக்கர்கள் வாக்குரிமை இழந்தவர்களாகவும் இருக்கின்றனர்.

3. அமெரிக்க அரசியல் வரலாற்றில் இடம்பெறா நிகழ்வு. BUSH நிர்வாகத்தில் 16 மந்திர சபை உறுப்பினர்கள் மிகப்பெரிய சர்வதேச தொழிலதிபர்கள். அவர்களுள், பாதுகாப்புச் செயலர் (DONALD RUMSFELD°



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிதி அமைச்சர் (PAUL ONEUIL), அரசுச் செயலர் (COLIN BAWELL) போன்றவர்களும் உள்ளடக்கம். இப்புனிதச் செய்தியானது 2002 ம் ஆண்டின் உலகச் சாதனைப் புத்தகத்தில் பதிவான உலகப் பெருமையாகும்.

ஒப்பரேசன் "ஈராக் சுதந்திரம்" எனும் யுத்தத்தால் பயன்பெறப் போகிறவர்கள் BUSH இன் குடியரசுக் கட்சியில் உள்ள கொழுத்த தொழிலதிபர்களும், அக்கட்சியின் ஆதரவாளர்களுமே. அதில் BECHTEL, CHEBRON, HALLI BURTON போன்ற நிறுவனங்களும் அவற்றுள் பிரதானமான சர்வதேசப் புகள் பெற்ற பொறியியல் நிறுவனமான RILEY BECHTEL இன் "BECHTEL' நிறுவனமாகும். 680 மில்லியன் டாலருக்கான ஈராக் புனர்நிர்மானப் பணியின் குத்தகையை பெற்றவரும் BUSH இன் தேர்தல் நிதிக்காக பல லட்சங்களை பங்களிப்புச் செய்தவருமாகும். இவர்களுக்காகவே இந்த யுத்தம். பிறநாட்டு மூலகங்கள் மட்டும் அல்லாது பிறநாட்டு மக்கள் உயிர்களும் உலகமயமாதலுக்கு பலியாகிக்கொண்டு வருகிறது.

BUSH ஈராக் மீது கொண்ட யுத்தமானது ஐரோப்பிய யூனியனின் தலைமை நாடுகளுக்கான எச்சரிக்கையாகவும் அவதானிக்கப்படுகிறது. இன்று அமெரிக்காவிற்கு சமபலமான ஒரு கட்டமைப்பை உருவாக்கும் சாத்தியத்தைக் கொண்டிருப்பதும் ஐரோப்பிய யூனியன் மட்டுமே. இன்று அனைத்து ஐரோப்பிய நாடுகளின் இராணுவப் பாதுகாப்பானது அமெரிக்காவின் இராணுவப் பலத்தின் 2.5 பங்கு மட்டுமே. எனவேதான் யுத்தத்திற்கு பின்பாக 2003 ஏப்ரல் 29ம் திகதியின்று அவசர மனி மகாநாடு ஒன்று LUXEMBURGE இல் பெல்ஜியத்தின் தலைமையில்(!! தலைமை எனச் சொல்லப்பட்டது) பிரான்ஸ் ஜேர்மன் தலைவர்களும் ஏற்பாடு செய்து, அதில் ஐரோப்பிய யூனியனுக்கான இராணுவப் பாதுகாப்பின் அவசியம் குறித்து ஆராயப்பட்டது. "நாம் அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக அச்சமான சூழ்நிலையிலேயே வாழவேண்டியவர்களாக இருக்கிறோம். ஐரோப்பாவுக்கான அடிப்படை முக்கியத்துவங்களில் இராணுவ வழிமுறைகளும் முக்கியத்துவமாகவே இருக்கிறது. நாம் நேட்டோவிற்குள் இருப்பவர்களாயினும் நம்மில் கூடுதலானவர்கள் அமெரிக்கர்கள் அல்ல" என ஜேர்மன் அதிபர் GERHARD SCHORODER பேசுகிறார். பிரான்சின் ஜனாதிபதியின் கூற்றின் "ஐரோப்பியவர்களாகிய நாம் சர்வதேச அரங்கில் ஒருமித்த குரல் உடையவர்கள் என பிரதிபலிக்கும் வாய்ப்பை உருவாக்க வேண்டும்." மேலும் அவர் கூறும் போது "நான் கருதுகிறேன் ஐரோப்பாவின் நலன்கள் பற்றிய அவசியம் எமக்கு இன்று ஏற்பட்டிருக்கிறது என, எமது உறுதியும் இலட்சியமுமாக இருக்கவேண்டியது ஐரோப்பிய பாதுகாப்பின் மீதே."

ஐரோப்பிய யூனியனுக்கான இராணுவ உற்பத்தியை மேற்கொள்வதும், ஐரோப்பாவுக்கான இராணுவமாக ஒன்றை பலப்படுத்தும் நோக்கங்களாக மேற்படி மினி மகர்நாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### அமெரிக்காவில் யுத்தத்தின் பின்:-

அமெரிக்க கடற்படை உயர் அதிகாரி JAMES CON WAY யுத்தத்தின் பின்பு வருந்துகிறார் "நாம எதற்கான யுத்தத்தை மேற்கொண்டோமோ அவைகளை நாம் ஈராக்கில் காணவில்லை. குவைத்தில் இருந்து பக்தாத் வரை துருவித் துருவித் தேடினோம் எங்கும் இல்லை. ஈராக்கின் குடியரசுப் படையினர் இரசாயண ஆயுதங்களை பிரயோகிக்கப்போகிறார்கள் எனும் செய்தி எமக்கு தரப்பட்டது. அதை நாம் நம்பி சில நாட்கள் தூங்கும் போதும் கூட "பாதுகாப்புகள்" பொருத்தியபடியே தூங்கினோம். இப்போ எமக்கு ஆச்சரியமாக இருக்கிறது நாம் ஈராக்கில் எவ்விதமான பேரழிவுக்குமான ஆயுதங்களையும் கண்டுபிடிக்கவில்லை. என்னை நம்புங்கள் பொய்யிற்காக ஈராக்கில் நாம் பேரழிவு ஆயுதம் தேட முயற்சிக்கவில்லை " இவ்வாறான செய்திகளும் NEWYORKER MAGAZINE இல் வெளிவருகிறது. இப்பத்திரிகையாளரான SEYMOUR HERSH இன் குற்றச்சாட்டு. அமெரிக்க PENTAGONE இன் பிரிவுகளின் ஒன்றான O.S.P (OFFICE OF SPECIAL PLANS) எப்படி இவ்வாறான செய்தியை கொடுத்தது என்பதாக.

2001 செப்ரம்பர் 11இன் நிகழ்வுக்குப் பின்பாக ஸ்தாபிக்கப்பட்டது O.S.P . C.I.A. கொடுத்த தகவல் பிரகாரமும் அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் கோரியிருந்தவரான முன்னாள் ஈராக் தேசியக் காங்கிரசின் தலைவர் AHMED CHALABI இன் தகவலின் படியே இதை மேற்கொண்டோம் என்பதாக O.S.P. கூறுகிறது. இவ்விடயம் அமெரிக்க எதிர்க்கட்சிகளால் பாராளுமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டதுடன் மீண்டும் வேதாளம் முருங்கமரம் ஏறியிருக்கிறது. 2003 யூன் 2ம் திகதி 1400 பேர் கொண்ட விசேட பிரிவு ஒன்று மீண்டும் ஈராக்கில் பேரழிவு ஆயுதத் தேடலுக்காக உருவாக்கப்பட்டிருக்கிறது.

யுத்தம் இவ்வாறு முடிவடைந்தும் பிரான்ஸ்- அமெரிக் உறவுகளின் விரிசல்களை ஒட்டவைக்கும் முயற்சியாகவா!! அண்மையில் பிரான்சில் நடந்தேறிய அதிரடி நடவடிக்கை!!

2003 யூன் 17ம் திகதி அதிகாலை 6மணி 5 நிமிடம் பாரிசின் புறநகர்ப் பகுதியான AUVERS-SUR-OISE இல் 20 வருடங்களாக செயல்பட்டுவரும் ஈரானிய MOUDJAHIDIN மக்கள் இயக்கத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தல்லமைச் செயலகமும் பிறநகர்ங்களில் இருக்கும் 13 கிளைச் செயலகங்களும் பிரான்சின் "பிரதேச கண்காணிப்பு பிரிவால்" [(D.S.T) DIRECTION DE LA SURVEILLANCE TERRESTRE] சுற்றி வளைக்கப்பட்டு அதன் கட்சித் தலைவியும் செயலாளருமான MARYAM RADJAVI உட்பட பலர் கைதுசெய்யப்பட்டதுடன், பலநூறு மில்லியன் அமெரிக்க டாலர்களும் சற்றலைட் அன்ரனாக்கள் கணணி மென் பொருட்களுடன் MARYAM இன் பாதுகாப்புக்கு வைத்திருந்த ஒரேயொரு கைத்துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டது.

இச்சுற்றி வளைப்பிற்கான பிரதேச கண்காணிப்பு பிரிவு கூறும் காரணங்களாக "எமக்கு 2001 ஏப்பரல் 5ம் திகதி இவ்வியக்கத்திற்கு பல உலகப் பயங்கரவாத நிறுவனங்களிடமிருந்து நிதியுதவிகள் கிடைத்து வருவதாகவும் இவர்கள் ஐரோப்பா முழுவதும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட உத்தேசித்திருப்பதற்கான, ஐரோப்பிய யூனியனின் உறுதியான தகவலின் அடிப்படையிலேயே நாம் செயற்பட்டோம்." என்பதான நியாயங்களைப் புனைய வேண்டிய பரிதாப நிலை பிரான்சிற்கு.

முன்பொரு காலத்தில் பிரான்சின் நலங்களுக்குத் தடையாக இருந்த ஈரானிய அரசுக்கு தொல்லை கொடுப்பதற்கான பயன்பாடாக MOUDJAHIDIN இயக்கத்திற்கு பிரான்சின் இரகசிய ஆதரவு கிடைத்து வந்ததாகவும், பிரான்சிற்கு மட்டும் அல்லாது ஜேர்மன், லண்டன், கொலண்ட் போன்ற நாடுகளின் சேவைக்காகவும் MOUDJAHIDIN இயக்கம் பயன்பட்டிருக்கிறது என அதன் சட்டத்தரணியின் கூற்று.

பிரான்சின் இச்சுற்றி வளைப்பிற்கு ஈரானிய ஜனாதிபதி MOHAMMAD KHATAMI இன் பாராட்டு மட்டும் அல்லாது அமெரிக்க ஜனாதிபதி BUSH இன் பாராட்டும் கிடைத்ததானது பிரான்சின் சர்வதேசிய தொடர் நலன்களுக்கு அமெரிக்காவின் மன்னிப்பின் (ஈராக் யுத்தத்தின் பிரான்சின் வீட்டோ விளையாட்டுக்காக) அவசியமே MOUDJAHIDIN மீதான நடவடிக்கை என்பதாகவே நாம் கருத வேண்டியுள்ளது.

MOUDJAHIDIN மீதான சுற்றி வளைப்பிற்கு எதிராகவும் அதன் தலைவி MARYAM ஐ விடுதலை செய்யக் கோரி அவ்வியக்கத்தின் பக்தர்கள் பிரான்சில் D.S.T பிரிவு முன்பாகவும் லண்டன், சுவிஸ் போன்ற நாடுகளில் பிரான்சின் தூதுவராலயத்துக்கு முன்பாகவும் தம்மை நெருப்புக்கு பலிகொடுத்தார்கள். அதில் பலர் காப்பாற்றப்பட்டுள்ளனர், சிலர் அவ்வியக்கதின் தியாகிகள் அட்டவணையில் பதிவாகி விட்டனர்.

MOUDNJAHIDIN (இஸ்லாமிய சுயாட்சிப் போராளிகள்) இது அல்ஜீரியாவில் 1954-1962 வரை இயங்கியது. ஆ.்.ப்கானிஸ்தானில் 1979இல் இருந்து இயங்குகிறது. ஈரானின் CHIITE இன அரசுக்கெதிரானது MOUDJAHIDIN மக்கள் இயக்கம். CHIITE இன்மானது இஸ்லாமிய நீதி நூலான குரானின் வரம்பிற்குள் அடங்காத இனமாக கருதப்படுகிறது. உலகில் 900 மில்லியன் இஸ்லாமியர்களும் ஈரானிலும் பாகிஸ்தானிலும் 125 மில்லியன் CHIITE இன மக்களும் இருப்பதாகவும் தகவல்.

ஈரானில் 1980 ஆம் ஆண்டில் MASSOU RADJAVI இன் ஜனாதிபதித் தேர்தல் நியமனம் KHOMEINY யால் நிராகரிக்கப்பட்டது. 1982இல் MASSOU வின் மனைவி கொல்லப்பட்டார். மகன் கடத்தப்பட்டு இல்லாமலே போய்விட இவ்ரால் இஸ்லாமிய மார்க்ஸிய ஜனநாயக கட்சி ஈரானிய MOUDJAHIDIN மக்கள் இயக்கமாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் விளைவாக MASSOU பிரான்சில் தஞ்சம் புகுந்தார். MOUDJAHIDIN இன் ஒரு போராளியின் மனைவியான MARYAM AZDANLOU, MASSOU வின் மூன்றாவது மனைவியாகிறார். மேலும் இவ்வியக்கத்தில் பிரிவினைவாதமும் ஸ்ராலினிஸ அணுகு முறையும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. 1985 இல் MARYAM இயக்கத்தின் துணை நிர்வாகப் பொறுப்பாக இருந்து 1989இல் இயக்கத் தலைவரானார். உலகின் பரவலாக 10 ஆயிரம் போராளிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் பணிந்து தமது உயிரையும் பலிகொடுக்கும் நிலமைக்கு பயிற்சி அளிக்கப்பட்டதின் விளைவாக இன்று அதன் தலைவி MARYAM இன் விடுதலைக்காக தம்மை நெருப்புக்கு பலியிட்டுக் கொண்டதோடு பலர் சாகும் வரையிலான உண்ணாவிரதம் மேற்கொள்கின்றனர்.

குர்திஸ்தான் இன அழிப்புக்கும் ஈரானிய CHIITE இன மக்களுக்கும் அவ்வாட்சிக்கு எதிராகவும் சதாமின் அடக்கு முறைகளுக்கு துணைபோனவர்களும், சதாமின் பெருமளவு நிதிகளையும் பெற்று வந்தவர்கள் இந்த ஈரானிய MOUDJAHIDIN இயக்கத்தினர்.

அமெரிக்கா ஈராக் மீது மேற்கொண்ட யுத்தத்திற்கு எதிராக பிரான்சில் சமாதானம் கோரி குரல் கொடுத்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை மேற்கொண்டவர்களை நாம் யுத்தமறுப்பாளர்கள் என கருதிவிட முடியாதுள்ளது. இவ் யுத்த எதிர்பாளர்களை வகைப்படுத்திப் பார்ப்போமாயின் யுத்தமெனும் கருத்தியலில் இருந்து எப்படி இவர்கள் வேறு பட்டவர்கள் என கருதத் தோன்றுகிறது.

கலந்து கொண்டவர்களில் இளைஞர்களை பொதுக் கருத்தியலினால் ஈர்க்கப்பட்டவர்களாகவும் (IDELIST) மற்றும் பாலஸ்தீன ஆதரவாளர்கள், பசுமைக் கட்சியினர், இடதுசாரிகள்+தீவிர, வலதுசாரிகள்+தீவிர, சோசலிஸ்ட்டுகள், சதாம் ஆதரவாளர்கள், தொழிற்சங்கங்கள் போன்ற அமைப்புக்களிடம் அதிகாரப்பற்றுறுதியில் இருந்து வெளியேறும் யுத்த உணர்வுகளை தவிர்க்க முடியுமா? அல்லது எப்போதாவது முடிந்திருக்கிறதா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரலாற்றில் யுத்தம் என்பது தொடர் நிகழ்வாய் இருக்கிறது.
அதற்கான தளமாக அதிகாரம்.
மொழிகளால் பிரயோகிக்கப்படுவதுபோல் சமாதானம் என்பது
"குறிப்பான்" இல்லாத வெறும் குறியீடு மட்டுமே.
சமாதானத்திற்கு நிகழ்வுத்தளம் இருந்ததல்லை.
புரட்சியைப் போலவும்
இவ்வாறான கலைச் சொற்களான மொழிகளில் இருந்து
எப்போதும் சமாதானம், புரட்சி என குரல் கொடுத்து
தப்பித்துக் கொள்கிறது வரலாறு.

உன்னதமானவைகளாவே பலம் மிக்கோர்
நியாயங்கள்

நவீனத்துவத்தின் இதுவரைகால சமூகவளர்ச்சி பரிணாம ஆய்வுகளும்; முன்மொழியும் சமூக சித்தாந்தமும் ஆனாது விருப்பு மனநிலையின் வெளிப்பாடுகளே. இவ்வாறே கோட்பாட்டுருவாக்க முன்னோடிகளின் பாத்திரம் தொடங்குகிறது. அவைகளுள் பிரபலமான சமூக இயல் கோட்பாடாக நிலவுவது DURKHEIM, MARX, WBER போன்றோர்களின் சித்தாந்தங்களே. அவர்களின் முன் அனுமானங்களானது இன்றைய காலத்தின் ஆதாரங்களால் உதிர்ந்துபோவதைக் காண்கிறோம்.

பொருட்களுக்கிடையேயான முரண்நிகழ்வுப் பண்புகளையே சமூகத்துடனும், அதன் முன்நகரும் நிகழ்வுக்கும் பொருத்தியது நவீனத்துவம்.

அதாவது பொருட்களானது எப்போதும் இருந்தது போல் இருப்பதில்லை. அதன் இயங்கியலின் சார்பு நிலைகள் எப்படியோ அதே வகையில் தெளிவான மாறுதலாக சமூகத்தையும் ஆய்வுகூட ஆராட்சிக்கு உட்படுத்தி (முதலாளி வர்க்கம், தொழிலாளி வர்க்கம்) பொருளிற்கான விளக்கமே சமூகத்திற்கும் பிரயோகிக்கப்பட்டது.

சமூகத்திற்கும்- மனிதர்களுக்கும் இடையேயான உறவுகளின் முக்கியத்துவம் மனிதர்களுக்கும், தனிநபர்களுக்குமான (INDIVIDUEL) உறவுகள் மீது அன்றைய காலத்தில் கவனத்தில் கொள்ளப்படவில்லை (அன்றைய சூழல்)

தீர்வுகள் மீதான இலட்சிய வேட்கைத் தீயில் வீழ்வதற்கான 'விட்டில்'களாய் இயக்கப்பட்டோம் - இயக்கப்படுகிறோம்.

எல்லைக்குட்பட்ட இருப்புகள் என யாவும் உறுதிப்படுத்தப்படுமாயின், அச்சுறுத்தும் தடைகளைத் தாண்டிவிட முடிவதெப்படி?

பின்நவீனத்துவ சிந்தனையானது மனிதர்களால் தெளிவான, முன்னனுமானித்த எதிர்காலத்தை எதிர்நோக்கும் தகுதி படைத்தவர்கள் என்றோ, பிரதான குண இயல்பு எனும் ஒரு சமூகக் கோட்பாட்டின் சாராம்சங்களே சமூகங்கள், என்பதையோ மறுக்கிறது.

இயற்பியலில் PLANCK இன் குவாண்டம் (QUANTAM) சக்தியின் பயன்பாடுகள் உணரப்படுவது போலவே இன்று மானிடத் தொகுப்பின் மீதான பின்நவீனத்துவப் பார்வையும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூக முன்னகர்வின் நிகழ்வானது நாளொரு வண்ணமாக (வினாடிகளுக்குள் என்றும் கூறலாம்) நிகழ்ந்து கொண்டிருக்க இதற்கான ஒரு காலத்தையோ/எல்லையையோ தீர்மானித்துவிடுவது எப்படி?

ஒவ்வொரு மானிட பிறப்பின் நிகழ்தலும் சமூக முன்னகர்விற்கான வினைகளாகிறது. NEURO BIOLOGISTE, ALIN PROCHIANTZ இன் புகழ்பெற்ற நூல்களில் ஒன்றான இயந்திரப் - புத்தி (MACHINE - ESPRIT) எனும் நூலில் "ஒவ்வொரு புதிய மனிதப் பிறப்பிலும் இயற்கையாகவே CORTEX (உடலின் நரம்பியல் தகவல் உற்பத்தி - ஆராய்வுத் திறனும், மூளையின் விவேகச் செயல்பாட்டிற்கான பகுதியும் உயர்திறன் மிக்கதாகவே தொடருகிறது)" என்பதாகக் குறிப்பிடுகிறார்.

இதை எமது அனுபவங்களுடாக நினைவு கூர்வோமாயின் நம்புவதற்கு சுலபமாக இருக்கும். எமது பெற்றோர்களைவிட நாம் சிந்தனைத் திறன் உள்ளவர்களாயும், எம்மைவிட எமது பிள்ளைகளின் திறன் உயர்வானதாய் இருப்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம். இவ்வாறான உயிரியல் ஆய்வுகளினாலும் இன்று நவீனத்துவத்தின் வர்க்கக் கோட்பாட்டு நியாயம் வலுவிழுந்து வருகிறது.

இவ்வாறு நவீனத்துவத்தின் குறைபாடுகளை அம்பலப்படுத்திவரும் சூழலில் நவீனத்துவத்தால் கட்டப்பட்ட வரலாற்றுக் காலங்களையும் நம்புகின்ற பின்நவீனத்துவ மார்க்ஸியர்களும் எம்மத்தியில். அதாவது வரலாற்றுக் காலங்களாக நவீனத்துவம் அடுக்கிய "புராதன பொதுவுடமைச் சமூகம் exct...exct...exct... போன்ற காலங்கள் இருந்து வந்தமையால் இன்றைய எமது முதலாளித்துவ சமூகமும் மறையத்தானே வேணும்!!!

இதுபோன்ற குழப்பங்களுக்கான காரணத்தை NIETZCHE மிகத்தெளிவாகக் கண்டு சொன்னார். "புனிதமானவைகள் எனப் போற்றிப் பாதுகாப்பவைகளையும், சித்தாந்தம், கோட்பாடுகள் என போற்றுபவைகளையும், தங்கத்தையும் நீங்கள் அவைகளின் பயன்பாடுகள் தெரிந்தும் தொடர்ந்து உபயோகப் படுத்துவீர்களாயின்....... எவருக்கேனும் அவைகளை அன்பளிப்பாக (இனமாக) கொடுத்துவிடுங்கள்"

இந்தத் தொல்லைகளை நாம் எம்மோடு அணைத்து பாதுகாக்கும் வரை பின்நவீனத்துவ சிந்தனைக்கு நாம் வெகுதூரமாகவே இருப்போம்.

பொருள்மீதான நுகர்வுப் போதாமையின் வளர்ச்சிக் காலம்தான் நவீனத்துவம் கட்டிய "புராதன பொதுவுடமைச் சமூகம்" இவ்வாறான பொருள்மீதான நுகர்வுப் போதமாமைச் சமூகங்கள்தான் எம்முன் வரலாறுகள் என விரிக்கப்பட்டவைகளும்.

ALAIN PROCHAIANTZ இன் மார்க்ஸியமும், சமூகமும், EPI GENETIQUE (மானிட உடன் நிகழ்வுப் பண்பு) பற்றி மீண்டும்...........

தொடரும் . . . ●

---

# • வழித் துணை •

எனக்கும் வானத்துக்கும்
அத்யந்த உறவுண்டு

அகால வேளை
கையளவு வானம்அள்ளி
போர்வைக்குள் இட்டுக் கொண்டு
தலைவரை போர்த்திக் கொள்வேன்

அம்மாவின் கோலமாய்
உள் விரியும்
ஓராயிரம் நட்சத்திரங்களும்
பெயர் தெரியாது கிரகங்கள்
நிலாக்கள் மேகங்களுமாய்

இனி விடியும் வரை பிரச்சனையில்லை. ●

● ஹவி ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**நூல் விமர்சனம் - 1**

# "இலங்கை" யுத்தத்தின் பரிணாமமும் உலகமயமாக்கலின் படையெடுப்பும்

**- எம்.ஆர்.ஸ்ராலின்**

"தமிழ்த்தேசிய எழுச்சி என்பது இன்றைய உலகமயமாதல் நிபந்தனையின் கீழ் ஒருக்காலும் சாத்தியம் இல்லை. இலங்கை தேசிய எழுச்சி மட்டுமே இனி வரலாற்றால் சாத்தியமானது. என்று நடைபெறும் பேச்சுவார்த்தையில் ஒப்பந்தம் ஏற்பட்டாலும் சரி இல்லாமல் போய் யுத்தம் தொடர்ந்தாலும் சரி சர்வதேச நிலைமையும் புலிகளின் அரசியல் நிலமையும் இதைத் தாண்ட அனுமதிக்காது." என்று முன்னுரையில் கூறுகின்ற ஆசிரியர் இரயாகரன் சுமார் 20 ஆண்டு காலமாக இலங்கை அரசியல் நிலவரங்களில் பங்கெடுத்து, தொடர்ந்து பேசிவருபவர். 1990 இல் இருந்து "சமர்" எனும் அரசியல் சஞ்சிகையை புகலிட வாழ்வில் இருந்து நடாத்தி வருகிறது.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனை என்பது என்ன? இதை முன்னெடுத்த மத்தியதர வர்க்க மேட்டுக்குடியினரின் அரசியல் என்ன? அது எப்படிக் குறும்தேசியமாய் சீரழிந்து போனது என்பது குறித்து விளக்கமான கட்டுரைகளைத் தாங்கியுள்ளது இந்நூல்.

1972 இல் கல்வி தரப்படுத்தல் யாழ்மேற்தட்டு வர்க்க கனவுகளில் ஏற்படுத்திய பாதிப்பையும் அதன் விளைவாக விரக்தியுற்ற இளைஞர்களின் தீவிரவாதத்தின் உருவாக்கங்களினையும் விளக்குவதோடு இந்த யாழ் மேலாதிக்க மையவாத அடிப்படையில்தான் தமிழ் மக்களின் பிரச்சனை உருக்கொடுக்கப்பட்டது என சுட்டிக்காட்டுகிறார். இன அரசியல் குறித்து தமிழரசுக்கட்சியினரும் விடுதலை இயக்கங்களும் முன்வைத்த வரலாற்றை மீள ஒப்புவிக்காமல் ஒரு மறுவாசிப்பு முயற்சி நூலுருப்பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

காலனித்துவ காலத்தில் இருந்து தொடங்கி முழு இலங்கையும் வெள்ளையரின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட வரலாறு, அக்காலனித்துவ கைக்கூலிகளாக யாழ் தமிழன் செயற்பட்ட துரோகத்தனம், ஏனைய இனங்களையும் சமூகப் பிரிவுகளையும் இழிவுபடுத்தி தம்மை மட்டும் மேம்படுத்திக் கொண்ட புத்தி ஜீவிதம் போன்றவை குறித்து நன்கு ஆராய்கிறது இந்நூல்.

மலையக மக்களின் வரலாறு பேரினவாதிகளால் மட்டும் அன்றி தமிழ்




வெளியீடு:- "சமர்"
ஆசிரியர்:- பி.இரயாகரன்
தொடர்புகட்கு:
32, Rue Trouillet Derel
92600 Asnieres sur-seine
France
email: rayakaran@aol.com

www.tamilarangam.net

குறுந்தேசியவாதிகளாலும் எப்படி ஒடுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு வந்துள்ளது என்பதை விளக்கும் கட்டுரைகள் மிகவும் பயன்மிக்கவை.

தமிழ் சிங்கள தலைவரிடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் இதுவரை ஏன் தோல்வியை தழுவி உள்ளன? அவை யார் நலனில் அக்கறை கொண்டிருந்தன என்கின்ற வரலாற்றுத் தகவல்களினோடு இன்றைய தமிழ்த்தேசிய போராட்டத்தினையும் அதன் பண்புகளையும் ஆய்வு செய்யும் முயற்சி இது.

யோசேப் ஸ்ராலினது சுயநிர்ணய உரிமைக்கோட்பாட்டு நிபந்தனைகளினூடு தமிழ்த் தேசியத்தினது சுயநிர்ணயம் குறித்து விமர்சனம் செய்யும் ஆசிரியர் இன்று அதனைக் கோருகின்ற புலிகளை விமர்சனத்துக்கு எடுக்கிறார். தேசிய பொருளாதாரத்தில் எள்ளளவும் கவலைப்படாத புலிகள் சுயநிர்ணயம் என்பதை கேலி செய்வதாக குற்றம் சாட்டுகிறார்கள்.

இன்றை உலக சமாதான முயற்சிகளின் பின்னணியில் இருக்கின்ற ஏகாதிபத்தியங்களின் நலங்கள் அதிகார திணிப்புகள் உலகமயமாதல் சூறையாடல்கள் குறித்து நியாயமான அச்சங்களை எழுப்புகிறது இன்னும் சில கட்டுரைகள். சமாதான ஒப்பந்தங்களின் பாவனையில் கொடுக்கப்படுகின்ற பொருளாதார அழுத்தங்கள் சேர்க்கப்படுகின்ற உபசரத்துக்களும் மிக ஆபத்தானவை. குறிப்பாக சர்வதேச உதவித் தொகைகள் புனருத்தாரண உதவித் தொகைகள், முதலீட்டுத் திட்டங்கள். குத்தகைப் பேரங்கள் என்று ஏகதிபத்தியங்களை வரவேற்க பேரினவாதிகளும் குறுந்தேசியவாதிகளும் கைகோர்த்திருப்பதை உதாரணங்களுடன் கோடிட்டுக் காட்டுகிறது மேலும் சில பந்திகள். "மக்களின் உழைப்புத்தான் கல்வியில் இருந்து சுகாதாரம் என எல்லாவற்றும் அடிப்படையானது. அமெரிக்க டொலர்களும் மார்க்குகளும் அல்ல". இன்று ஒவ்வொரு பேச்சுவார்த்தை மேசைகளிலும் வெளிநாட்டுக் கடனிலேயே கண்ணாயிருக்கும் புலிகளுக்கான பதில் இன்னும் அதிகமான விளக்கங்களுடன் கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண சமூகத்தில் புரையோடிப் போயுள்ள சாதிய, பிரதேச ஏற்றத்தாழ்வு குறித்து அது சமூக உறவுகளை செலுத்திவரும் பாதிப்புக்குறித்து முறையான ஆய்வுகளையும் வரலாற்றுத் தகவல்களையும் முன்வைக்கின்ற இந்நூல். அதேவேளை முன்னெடுக்கப்படவேண்டிய வேலைத்திட்டங்கள், நடைமுறைப்படுத்தவேண்டிய தீர்வுகள் என்று வரும்போது தேசியம், தேசியம் என்று வரிக்குவரி தீர்வு தேடி அலைகின்றபோது ஏனையவை மறக்கடிக்கப்படுகின்ற அபாயத்தை ஏற்படுத்தி விடுகின்றது. சமூகத்தின் ஏனைய முரண்பாடுகளையும் படிமுறை ஏற்றத்தாழ்வுகளையும் இரண்டாம் பட்சமாக்குகின்ற தேசியத்தின் கூக்குரல் ஓங்கி ஒலிக்கிறதை அவதானிக்க முடிகிறது. எல்லாம் புரிந்துகொண்டாலும் இறுதியில் ஒற்றைத் தீர்வில் நம்பிக்கை வைக்கும் இப்போக்கில் இருந்துதான் பாசிசம் முளைவிடுகிறது என்பதை நாம் மீண்டும் மீண்டும் காணத் தவறுகிறோம்.

இலங்கை இனப்பிரச்சனைக்கு முடிவுகாண இந்நூலின் இறுதியில் ஆசிரியர் பல ஆலோசனை களை முன்வைக்கிறார். பொருளாதார வாதத்தை முன்நிறுத்திய தீர்வுகளை உலகமயமாதலுக்கு எதிராக தேசியம் சார்ந்து நின்று மொழியப்படுகின்றன. உதாரணமாக:-

* தேசியத்துக்கு எதிரான சகல அந்நிய பொருளாதாரத்துக்கும் தடை விதிக்கப்பட வேண்டும். அதாவது உலகமயமாதலை திட்டவட்டமாக எதிர்த்து சுயநிர்ணயத்தை வரையறுக்க வேண்டும். (பக்:111)

* சகல வெளிநாட்டு மூலதனங்களின் சொத்துக்களையும் நட்டஈடு இன்றி தேசியமயமாக்கி தேசியப் பொருளாதாரத்தை வளர்க்கவேண்டும். (பக்:111)

* ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பணப்பயிர் உற்பத்தி முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டும். (பக்:112)

அதேவேளை கலாச்சார பண்பாட்டு தளத்தில் மிகுந்த செல்வாக்கு செலுத்திவரும் சாதிய ஒடுக்குமுறை குறித்து சில சட்டங்களை முன்மொழிவதன் ஊடாக இல்லாதொழித்துவிட கோருகிறார்.

உதாரணமாக:-

* சமூகத்தில் இனம் கடந்து புரையோடிப்போயுள்ள சாதியக் கொடுமைகளை முற்றாக நீக்கவும் அதற்கெதிரான அனைத்து முயற்சிகளையும் முற்றாகத் தடைசெய்யவும் வேண்டும். (பக்:114)

* அனைத்து சாதிப்படிநிலைகளும் ஒழித்துக்கட்டப்பட வேண்டும். பிறப்பை முன்நிறுத்திய உழைப்பை வரையறுக்கும் சாதியக்கூறுகள் முற்றாக தடைசெய்யப்பட வேண்டும். (பக்:-115)

* சாதியரீதியான ஒடுக்குமுறையை வரலாற்று ரீதியாக அடையாளம் காணவும் இதற்கும் இந்துமதத்துக்கும் உள்ள உறவும் தெளிவாக வரலாற்று ரீதியாக அம்பலப்படுத்தப்பட வேண்டும். (பக்:-115)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* தீண்டாமை ஒரு சமூகக் குற்றமாக பிரகடனப்படுத்த வேண்டும். (பக்:-115)

இதுபோன்ற போதிய சட்டங்கள் இந்திய யாப்பிலும் இருக்கின்றன. தலித்துகளின் மேம்பாடு கருதி அவை சேர்க்கப்பட்டிருந்தாலும் அவற்றை யெல்லாம் விட மதமும், பண்பாடும், கிராமத்து பஞ்சாயத்து மரபுகளும் மிகவும் பலம் வாய்ந்தவை. அவற்றை இலகுவில் ஒற்றைநொடிச் சட்டங்களினூடு இல்லாதொழித்துவிட முடியவில்லை. சட்டங்களினூடு தீர்வு காண்பது என்பதும், தண்டனைகளினூடு தீர்வு காண்பது என்பதும் இதுபோன்ற பிரச்சனைகளுக்கு எள்ளவும் தீர்வைத்தராது. அதேவேளை தலித் அமைப்புகளோ எழுச்சியோ, அதற்கான போராட்டங்களோ அவசியமே இல்லையென்பது அவரது கருத்தாகின்றது.

உதாரணமாக:-

* சகல இனவாத, மதவாத, சாதியக் கட்சிகளையும் தடைசெய்ய வேண்டும். (பக்:-114)

* மக்களை பிளவுபடுத்தும் இனம் பால், சாதி சார்ந்து நடத்தும் பிளவு நடவடிக்கைகளான அரசியல் அமைப்பு வடிவங்கள், கல்வி முறைகள், பொருளாதாரக் கூறுகள், கலை இலக்கிய முயற்சிகள், பண்பாட்டுக் கலாச்சாரக் கூறுகள், மரபுகள் அனைத்தும் முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டும். (பக்:-115)

தலித்தியம் குறித்து தீர்வுகளில் இப்படி முன்மொழிகின்ற இரயாகரன் வெறும் சட்டங்களினூடு ஆயிரமாண்டு கால வரலாற்றைக் கொண்ட சாதியக் கொடூரங்கள் ஒற்றை நொடியில் தீர்ந்துவிடும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும். ஏனெனில் அதற்கான வேலைத்திட்டங்கள் குறித்து அல்லது அதைநோக்கி தள்ளக்கூடிய தலித்துகளின் எழுச்சி குறித்து அச்சம் கொள்வதையும், தடைசெய்யக் கோருவதையும் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்.

சகலவிதமான ஆதிக்க கட்சிகளும் யதார்த்தமாய் இருக்க தலித் கட்சிகளையும், அமைப்புகளையும் வளர்த்தெடுக்க வேண்டிய பணியை விடுத்து அவற்றைத் தடைசெய்யக் கோருவது சமூகத்தின் படிநிலை உண்மைகளை மறைத்துவிடுவதாகும்.

இப்படிச் சொல்லுவது படுமோசமான ஸ்ராலினிசக் கொடுமை. இந்த அதிகார மையங்களை உருவாக்கும் சிந்தனைகளில் இருந்து ஆசிரியர் வெளிவருவது அவசியம் என்பதை மட்டுமே நாம் சொல்லமுடியும். சுமார் 20 வருடகாலமாக பிரபாகரன் இதைத்தான் செய்து வருகிறார். அவர் தன்னை ஒரு ஸ்ராலினிஸ்ட் என்று பிரகடனம் செய்யாததுதான் குறை. தலித்துகளைப் பொறுத்தவரை தங்கள் விடிவை நோக்கிய பயணத்தில் தடை விதிக்கின்ற தமிழ் தேசிய பாஸிஸ்டுகளும் ஒன்றுதான், உங்களைப் போன்ற கொமினிஸ்டுகளும் ஒன்றுதான்.

அடுத்து இரயாகரன் பெண்ணிய உரையாடல்களில்தான் ஆணாதிக்க சொல்லாடல்களை பயன்படுத்துகிறார் என்றால் அதுமட்டுமில்லை பொருளாதாரம், தேசியம், சுற்றுச்சூழல் எதுவென்றாலும் கற்பழித்தல், விபச்சாரம் என்ற வார்த்தைகள் அவருக்கு நல்ல நெருக்கம்.

உதாரணமாக:-

* இன்றைய புத்திஜீவிகள் நடைமுறையாக சமூகத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்ற சமூகக் கடமையை கைவிட்டு மந்தைகளாகி நாய்போல் வாலாட்டத்தொடங்கியதில் இருந்து தேசியத்தை கற்பழிப்பது ஒரு முற்போக்கான செயல் என்ற நடைமுறையை பொதுமைப் படுத்தி உள்ளனர். (பக்:-4)

* சமாதானம் என்ற பெயரில் தேசியங்களை விலை பேசுவதும், உதவி என்ற பெயரில் அதை விபச்சாரம் செய்ய வைப்பதும் பெரிய அளவில் தொடங்கியுள்ளது.

இது பல பெண்ணியவாதிகளின் முயற்சியில் இலங்கையில் தினசரிப்பத்திரிகையின் பாவனையில் இருந்துகூட வழக்கொழிந்து விட்டது. இந்நிலையில் இதுபோன்ற ஆணாதிக்க சொல்லாடல்களை இனிமேலாவது கைவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்வதைத் தவிர நாம் ஒன்றும் செய்யமுடியாது. இதற்குமேல் புகலிடப் பெண்ணியவாதிகளுக்கே இந்தப் பிரச்சனை சமர்ப்பணம்.

நிறைந்த விமர்சனங்கள் இருந்தபோதிலும் இன்றைய சூழ்நிலையில் மிகுந்த ஆய்வு முயற்சிகளினூடும் உழைப்போடும் வெளிவந்துள்ள இந்நூல் மிகவும் பிரயோசனமானது. இலங்கை அரசியலில் இதுபோன்ற நூல்கள் மிக மிக குறைவென்பதுதான் யதார்த்தம். அதேவேளை பக்கத்துக்கு பக்கம் வரலாற்றுத் தகவல்களையும், ஆண்டுகளையும் புள்ளிவிபரங்களையும் கொண்டு ஆய்வுகள் செய்யும்போது அதற்கான உசார்த்துணை நூல்களையும், அறிக்கைகளையும் அடிக்கோடிட வேண்டியது ஆவசியம். ஆனால் அது இங்கே தவறவிடப்பட்டுள்ளது. குறித்த ஆய்வுகளை இட்டு மேலும் அக்கறை கொண்ட வாசகர்களுக்கு அது துணை செய்வதோடு, இக்கட்டுரைகளின் நம்பகத் தன்மையையும் அது மேலும் வலுப்படுத்தும். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூல் விமர்சனம் - 2

# எறிகணைத் தாலாட்டு

- எம்.ஆர்.ஸ்ராலின்




"அண்ணா கலைக்கழகம்" எழுபதுகளின் பிற்கூறு; எழுதப்பட்ட ஒவ்வொரு நாடகங்களும் 200 வது தடவைகளாக மேடையேற்றப்பட்டு கொண்டிருந்தது. கிழக்கு மாகாணமெங்கும் சமூக சீர்திருத்த கருத்துக்களை பரப்புவதில் சுமார் 20 நாடகங்கள் சக்கைபோடு போட்டன. கோயில் திருவிழாக்கள், பண்டிகையிரவுகள் கலைவிழாக்கள் எதுவேண்டுமானாலும் ஒரு அண்ணா கலைகழக நாடகமின்றி ஒப்பேற முடியாத காலமாயிற்று.

இத்தகைய தாக்கங்களினூடு வளர்ச்சி கண்டதுதான் மட்டக்களப்பின் இன்றைய நவீன நாடக பட்டறைகளும், செயற்பாடுகளும்.

இப்பிரச்சாரத் தொனிகொண்ட நாடகங்களின் சொந்தக்காரனான ஆ.கண்ணப்பன் அவர்களே ஏற்றத்தாழ்வுகள் கொண்ட எம்சமூகத்தின் நிம்மதியை பிய்தெறியும் இந்த எறிகணைத்தாலாட்டுக்கும் சொந்தகாரன். ஆனால் சீர்திருத்தக்காரனாக அல்ல கலகக்காரனாக. ஆனாலும் இதில் அவர் தன்னை சாத்தானின் சகோதரன் என்றே அறிமுகப்படுத்துகிறார்.

இதிகாசங்களும் வேதங்களும் எதிர்நிலையில் நிறுத்தும் 'பிசாசை' அரவணைத்து கொள்ளும் சாத்தியம், கடவுளுக்கே எதிரான சாத்தானை சகோதரனென்று உரிமை கொண்டாடும் தைரியம் ஒரு கலகக்காரனுக்கு மட்டுமே உரியது.

அமைதியாக சீர்திருத்த கருத்துக்களை பரப்பித்திரிந்த அந்த நாடகக்காரன் தன்னை ஒரு கலகக்காரனாக பிரகடனப்படுத்திக்கொள்ளும் வெளிப்பாடு இது.

எம்மீது ஒற்றை அடையாளங்களை திணிக்க ஒவ்வொரு கோட்பாட்டாளர்களும்வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றனர். சாதி, வர்க்கம், பால், என்கின்ற பல்வித ஏற்றதாழ்வுகளில் சீரழிகின்ற எமது சமூகம் குறித்து அடையாளமிடும் பன்முகக் குரல்கள் இங்கே ஒருமித்து தொகுக்கப்பட்டிருப்பது அதற்கெதிரான ஓர் மறுப்புக்குரல்தான் என எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

இன முரண்பாடே முதன்மையானது என்கின்றது தேசியவாதிகள் கூச்சல். இல்லை வர்க்க முரண்பாடே அடிப்படையானது என்கின்றது

**கிடைக்குமிடம்:**

**ஹிஸ் - ஸபாப் பப்ளிகேசன்**
**மருதமுனை**
**கல்முனை**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மார்க்ஸ்ட்டுகளின் முழக்கம். இல்லை இரண்டையும் மறுத்து இவ்வொன்றையும் போலவே சாதிய, பால் முரண்பாடுகளும் அவ்வவ்த்தளங்களில் முக்கியம் வாய்ந்தவை என குரலெழும்புகின்றன. இத்தொகுப்பிலுள்ள 36 கவிதைகள்.

முடிவுகளின் தொடக்கத்தில், கணனி எதிர்வுகள், தொலைபன்னி உபதேசம், மூன்றாம் பிறை முன்மொழிவு, எழுந்து நடக்கும் எலும்பு கூடுகள் என்பன தலித்தியக்கவிதைகளாகவும்.

உன்னிலே நான், நிதர்சன நிகழ்வுகள், கவிதையிலே மட்டும் போன்றவை ஓர் பெண்ணிய பார்வை கொண்ட கவிதைகளாகவும் ஒரே தொகுதிக்குள் இருவேறு கூறுகளாக நிற்கின்றன.

தமிழ்த்தேசிய போர்வைக்குள் சமூகத்தினது அகமுரண்பாடுகள் மறைக்கப்படக் கூடாது என்கின்ற எதிர்ப்பிலக்கியக் கவிதைகள் குறைந்துபோய்விட்ட ஈழத்து சூழலில் மீண்டும் ஓர் நம்பிக்கையை தரமுயற்சிக்கின்றன ஆ.கண்ணப்பனின் கவிதைகள்.

ஒரு தலித்துக்கு அன்றாடம் அவன் எதிர்நோக்கும் சாதிய ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டமே முதற்கட்டபணி என்கின்ற அறைகூவல் மிக்க கவிதைகளே வாசகர்களின் ஈர்க்கக்கூடியனவாய் உள்ளன இந்த எறிகணைத் தாலாட்டில். அதாவது சாதிய படுகுழியில் சிக்கி தவிக்கும் தலித்துகள் குறித்து கருசனை செலுத்தும் கவிதைகளே மிக தத்ருபமாக வாய்க்கப்பெற்றிருக்கின்றன.

உதாரணமாக :

அள்ளுவது மலமும் தூக்குவது பிணமுமாய் அதுவே விதியாகிப்போன தலித்துகளின் கோபக்கனல் தெய்வங்களையே சுட்டெரிக்கும் வேகம் இங்கே கவிதைகளாகியிருக்கின்றது. தம்மிடத்தில் கடவுள்களை இருத்திப்பார்க்கும் தலித்துகளின் தவிப்பிற்கு இந்த கவிஞர் பிரதிநிதியாகின்றார்.

...............

***துர்க்கை தாலி அற***
***லெட்சுமியாள் மாரடிக்க***
***கலைவாணி தலைமையிலே***
***செஞ்சடையார் சடங்கின்று***

...............

என்று லட்சுமியைமாரடிக்க வைப்பது துர்க்கையை தாலியறுக்க வைப்பது போதாதென்று,

...............

***பறைமேளம் அடித்து***
***பிள்ளையார் முன்செல்ல***
***பாவாடைவிரித்து***
***மாயவனார் பணிபுரிய***

..........

என்று தொடர்கிறது கவிதை.

அன்று நந்தனாரை தீக்குளிக்க வைத்ததன் கணக்கு இன்று பிள்ளையாரை பறையடிக்கவைத்து தீர்க்கப்படுகின்றதான என எண்ண வைக்கின்றது. கவிஞரின் ஆவேசம்

....................

***பிரமனார் தலைகோடு சுமக்க***
***இந்திரனார் பாடைகட்ட***
***தேவர்கள் வாய்க்கரிசி போட***

....................

என்று கடவுளரையெல்லாம் தரையிறக்கியிருப்பது என்பது புனிதங்களை போட்டுடைக்கும் பணி. எந்த புனிதங்களின் பெயரால் இந்த இழிநிலை தொடர்கிறதோ அவற்றை போக்க இந்த உடைவுகள் அவசியம்தான்.

அனைத்தின் இறுதியிலும் ***"சவமாகப் போவது சிவனார்"*** என்று இந்து மதத்தின் இறுதி மூச்சுக்கு ஆணியடிக்கும் தைரியம் இந்த கவிஞருக்கு வாய்த்திருக்கிறது. மேலும் சிவனுக்கு அஞ்சலி உரை செய்ய நீட்ஷேயை அழைக்கின்ற வரிகளின் வேகம் இன்னும் 18 ம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்சீர்கெட்ட சாதிய சமூகத்தையும் அதைக் கட்டிக்காக்கும் இந்து மதத்தையும் அதன் ஆதியும் அந்தமுமான சிவனையும் இறந்துவிட்டான் என்று அறிவிக்க இன்னுமொரு நீட்ஷேயே வா என்று அழைக்கிறார். இது சாதியப் பிழம்பில் தீக்குளித்து எழுந்த ஓர் தலித் போராளியின் பாசறை முழக்கமே இன்றி வேறில்லை.

கண்ணப்பனுக்கேயுரிய கிண்டலும், கேலியும், கோபமும் நிறைந்த பழந்தமிழ் படிமங்களை கையாளும் பாங்கும், மரபுக்கவிதைகளுக்கேயுரிய ஆழ்ந்த புலமையும் இணைந்து எம்சாதிய சமூகத்தின் மீது நல்ல எதிர்வினையாற்ற ஓர் தலித் கவிஞனை கிழக்கிலங்கையிலிருந்து எமக்கு அறிமுகம் செய்திருக்கின்றன. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எனக்குள் வசிக்க முடியாத நான்

எந்தச் சிதையில்
எரிகின்றது என் உடல் ?

எந்த மழைக்குள் கரைந்தது
என் கவிதை ?

யாருடைய அறையில் தொங்குகின்றது
என் ஓவியம் ?

யாருடைய வர்ணங்களில் இருக்கின்றன
எனது நிறங்கள் ?

எவருடைய கனவுகள் சுமக்கின்றது
என் கண்களை ?

கேட்காத செவிகளை தட்டித் தட்டி
என் இருதயம் - ஏன்
பாடிக் கொண்டே இருக்கிறது ?

# கடல்வெளி

ஆழ்கடலின்
இருள்களுக்குள்
போய் விழுந்தன
ஏழு நிறங்களும்

தோற்றமளிக்கும்
கானல் நீரின்மேல்
கைவிடப்பட்ட
தோணியின் எதிர் நீச்சல்

உயரத்தில்
இறக்கையை விரித்துப்
பறந்த வண்ணமாக
தன் தனிமையை
காவித் திரிகிறது
ராக்குருவி

திருப்பித் திருப்பி
ஒரு அலையை
மூடிக் கொள்கிறது
மற்றோர் அலை
கடுமையைக் கூட்டி
பரிதாபமான இசையாய்
ஓங்கி ஒலித்தபடி

உன்னிடம்
சேர்க்க முடியாமல்
உறைந்து போன
சொற்களோடு
என் சாம்பல் கனவுகளும்
என்னைத் தாண்டிப்போய்
கரைந்தழிகிறது
கடல் வெளியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்மொழி வாழ்த்து

ஒரு பூஞ்சை
நிராயுத பாணியை
வழி நடத்திச் செல்லும்
துப்பாக்கியைப் போல - அவள்
பாடிக் கொண்டிருந்தாள்.

வார்த்தைகளைக் கடந்த
அவ் இசை
ஞாபக அடுக்குகளில் படிந்த
இழப்புகள் அனைத்தினதும்
ஒற்றை மெட்டாக அமைந்திருந்தது.

தன் தாளக் கட்டாக
காத்திருப்பின் நம்பிக்கைகளையும்
ஏக்கங்களையும் கொண்டிருந்ததுடன் - நிகழும்
ஆன்ம வேதனைகளையும் வலிகளையும்
பிழிந்த துயரங்களின் சாரமாகவும் அது
இருந்தது

காலமற்ற காலக்கணமொன்றில்
தன்னிலை மறந்த போது
நோவுகளின் பிரதிநிதியான
அவளது உரத்த குரலோ
சன்னத்தையொத்து என் மனத்தைச் சீராய் நிறைந்தது.

(01.12.2002)

ஆழியாள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஞாபகம்

அது சமாதானத்தின் காலம்
எனவும்
போர்கள் எல்லாம் புறங்காட்டிப்
போன காலம் எனவும் பேசிக் கொண்டார்கள்.

நாங்கள் நுனி மர உச்சிகள் தாவி
காற்றைக் கடந்ததுடன்
இள முகில்களைக் கிளறி
வற்றாத கிணறுகளுக்காக
வானத்தைக் குடைந்த போது

நட்சத்திரங்கள் வெளிப்பட்டன
புதை குழிகளிலிருந்து
நாறிக் காய்ந்த பிணங்களின்
விலா என்புகளாய்.

(28.10.2002)

ஆழியாள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காதல் கதைகளும், சில காதலிகளும்

- க.கலாமோகன்

"எனது வயதைத் தெரிந்தும் ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கின்றீர்கள்?" என்றபடி தனது முதுகைச் சிரமப்பட்டு நிமிர்த்த எத்தனித்தார் திரு சிவலிங்கம்.

"நீங்கள் கடைசியாக வெளியிட்ட "காதல்" குறுநாவலை வாசித்தபோது ஓர் இளமைத்துடிப்பை ஒவ்வொரு வரிகளுக்குள்ளும் கண்டு நான் அதிர்ந்ததிற்கு உங்களது கடைசிப் பேட்டியை வாசித்து அதற்கூடாக உங்கள் வயதை அறிந்ததுதான் காரணம்."

"ஆம் அது ஓர் காதல்கதை. அதற்குள் வயோதிபப பாத்திரங்கள் எதுவுமே இல்லை."

"ஆனால் அதனை எழுதியவரோ வயோதிபர்."

"வயோதிபர்கள் காதல் கதைகளை எழுதக்கூடாதா?" என்றபடி தனது கண்ணாடியைக் கழட்டினார் திரு. சிவலிங்கம்.

"என்னிடம் அப்படி ஓர் கருத்து இல்லை. ஆனால் கதையின் இளமைவேகத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டதால்தான் அந்தக்கேள்வியைக் கேட்டேன். அது ஆபாசமான கேள்வியாகப்பட்டால் மன்னிக்கவும். நான் அதனை வாபஸ் பெற்றுக் கொள்கின்றேன்."

"முதலில் ஆபாசம் போலவே பட்டது. நான் அப்படி நினைததில் எந்த அர்த்தமுமே இல்லை என இப்போது நினைக்கின்றேன். ஆம் இந்த வயதிலும் என்னால் செக்ஸ் செய்ய முடிகின்றது."

"50 வருடங்களாக உங்களது மனைவியோடு வாழ்வதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். காதல் கலியாணமா?"

"இல்லை."

"பேசிச் செய்யப்படும் திருமணங்களிற்கு எதிராகப் பல கதைகளை எழுதிவரும் உங்களால் ஏன் ஓர் காதல் திருமணத்தைச் செய்யமுடியாமல் போயிற்று?"

"நான் திருமணத்திற்குப் பின்னரேயே எழுதத தொடங்கினேன்."

"எழுதுவதற்கு முன்னர் பேசிச் செய்யப்படும் திருமணங்களுக்கு எதிரான ஓர் கருத்து உங்களிடம் இருந்ததா?"

"இல்லை. அந்தக் கருத்து பின்னரேயே எனக்குள் ஏற்பட்டது."

"இதற்கு காரணம் எது?"

"எனது மனைவி. பல பெண்களின் கதைகளை அவள் தினம்தினம் சொன்னாள். அவை எனக்குத் தெரியாத விஷயங்களாக இருந்தன."

"திருமணத்திற்கு முந்திய உங்களது உலகம் ஆண்களினது உலகமாக இருந்தது எனக்கருதலாமா?"

"அப்படிக் கருதமுடியாது. நான் சமூகக் கேள்விகளுக்கு அந்நியமானவனாக இருந்தேன் என்பதே பொருத்தமானது."

"காதல் திருமணம் செய்யாததை யொட்டி நீங்கள் வருந்திய துண்டா?"

"எனது மனைவியோடு நடத்திய சம்பாஷனைகளுக்குப்பின்னர் அவளிற்கு ஏற்கனவே யாருடனாவது காதல் இருந்ததா எனக்கேட்டேன். ஆம் என்றாள். என்னை விவாகரத்துச்செய்து காதலித்தவரோடு சென்று வாழ்வதற்கு எனது முழு உதவியும் உள்ளது என்றேன். அவளோ மறுத்துவிட்டாள்."

"அவளது காதலன் வேறு ஒருத்தியைக் காதலித்தது காரணமாக இருக்கும் என நினைக்கின்றேன்."

"இல்லை. அவன் தற்கொலை செய்துவிட்டான்."

"திருமணத்திற்குமுன் உங்களுக்குக் காதல் உறவு ஏதாவது இருந்ததா?"

"இல்லை."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இருந்ததென்று வைத்து உங்கள் மனைவி உங்களை அவளோடு சென்று வாழ் எனக்கேட்டிருந்தால். . ."

"நான் முடியாது எனச் சொல்லியிருப்பேன்."

"ஏன்?"

"எனக்குக் காதலின் அர்த்தங்களையும் சுவைகளையும் காட்டியது அவளே."

"திருமணத்திற்குப்பின் நீங்கள் எந்தப் பெண்ணையும் காதலிக்க வில்லையா?"

"இந்தக் கேள்வியை எனது மனைவியிடம் கேளுங்கள்."

"உங்களது மனைவி தூங்குகின்றபடியால் நாளை வருகின்றேன்" என்றபடி அவருக்கு நன்றி சொல்லியபடி விடைபெற்றேன்.

□□□

மறுநாள் திருமதி சிவலிங்கத்தைக் கண்டபோது நான் அதிர்ந்து விட்டேன். திரு சிவலிங்கத்தைக் காட்டிலும் பத்து வயது குறைந்தபோதும் ஓர் குமரிக்களையை உடல் கட்டியிருந்தது.

"அவர் வெளியே போய்விட்டார். குடிப்பதற்கு ஏதாவது. . .?"

"எதுவும் வேண்டாம். நன்றி. எனது கேள்விகள் சிலவற்றிற்குப் பதில்தரச் சம்மதித்தமைக்காக நன்றி."

"கேள்விகள் எனக்கு அச்சத்தைத் தருவனவல்ல."

"உங்களது சொந்தப் பெயரை அறியலாமா?"

"ராசம்மா. அவர் என்னை ராசி என்றே அழைப்பதுண்டு."

"திருமணத்தின் பின்னர் யாரையாவது காதலித்தாரா எனும் கேள்வியை திரு சிவலிங்கத்திடம் கேட்டபோது இந்தக்கேள்வியை உங்களிடம் கேட்குமாறு கேட்டுக கொண்டார்."

"ஆம். அவருக்குப் பல காதலிகள் இருந்தனர்."

"இது எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"அவர் சொல்லியே."

"அவர் எந்தச் சந்தர்ப்பத்தில் இதனை உங்களிடம் சொன்னார்?"

"அவர் என்னை விரும்பியபோதும் அவர் என்னோடு அழகிய பெண்கள் பற்றி கூடுதலாகக் கதைத்தார்."

"இதற்கு அர்த்தம் நீங்கள் அழகியில்லை என்பதா?"

"எனது அழகை ரசித்தபோதும் வேறு கனிகள்முன் அவர் விழிகள் முன் அவருக்குள் ஏற்பட்ட சலனப் பூகம்பங்களை என்னால் விளங்க முடிகின்றது."

"திருமணத்தின் பின்னர் உங்களுக்கு வேறு ஆண்கள் மீது ஏதாவது ஈர்ப்பு ஏற்பட்டதுண்டா?"

"ஆம். இந்த ஈர்ப்பிற்கு அவர் மீதான நிராகரிப்பு எனக்கருதிவிடவேண்டாம்."

"இதனை சற்றே தெளிவாக விளங்கப்படுத்தமுடியுமா?"

"ஆண்கள் பெண்கள்மீது காட்டும் ஈர்ப்பு பகிரங்கமானது. பெண்கள் விஷயத்திலோ இது பொதுவாக ரகஸியமான ஒன்றாகவே இன்றும் உள்ளது."

"இந்த ரகஸியத்தின் மூலம் எது எனக்கருதுகின்றீர்கள்?"

"பால் வித்தியாசத்தை ஆண்கள் பார்க்கும் பார்வைகள் மீதான கேள்விகள் மீது ஆழமான விவாதங்கள் எதுவும் செய்யாமல் இந்த மூலத்தின் முடிச்சை அவிழ்த்தல் இலகுவான விஷயமல்ல."

"இந்த விவாதங்கள் சாத்தியமான வையா?"

"பால் கேள்விகளுக்குத் தரும் அக்கறையைக்காட்டிலும் உடல் கேள்விகளுக்குக் கூடுதல் அக்கறை தருவதால் சாத்தியமாகும் என்பது எனது அபிப்பிராயம்."

"உடல் விசாரணைகளும் பால் வித்தியாசங்களை சில சந்தர்ப்பங்களில் நிர்மாணிக்க எத்தனிக்கின்றனவே?"

"இது ஆண்பால் அதிகாரத்தை நிர்மாணிக்கும் கருத்தியலோடு சம்பந்தப்பட்ட விஷயம்."

"திரு சிவலிங்கம் எழுதும் காதல் கதைகள் பற்றிய தங்களது அபிப்பிராயம்?"

"அவரது கதைகள்மீது எனக்கு அபிப்பிராயங்கள் இல்லை. ரசனை மட்டுமே உள்ளது."

"இதற்கு அவர் உங்களது கணவர் என்பது காரணமா?"

"இல்லை."

"அவரது படைப்புகளுள் நீங்கள் எப்போதாவது பாத்திரமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளீர்களா?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"அவர் படைக்கின்ற காதல் தோட்டங்களுள் நான் ஒருபோதுமே என்னைக் கண்டதில்லை."

"இது உங்களுக்கு ஆச்சரியத் தைத் தந்ததில்லையா?"

"அவரது படைப்புலகத்தின் கோடிகளுக்குள் வாழும் பாத்திரங்கள் மீதான வாசிப்புகள் காரணமாகவே அவரது இன்னொரு காதல் உலகத்திற்கு அருகில் என்னால் வர முடிந்தது."

"இந்தப் பாத்திரங்கள் கற்பனையானவையா அல்லது நிஜமானவையா?"

"நிஜநிலத்தில் ஜனிப்பவைகளே கற்பனைப் பாத்திரங்கள் என்பது எனது அபிப்பிராயம். அவர் படைத்த பெண்பாத்திரங்களது உண்மையான முகங்கள் எவையென நான் அவரிடம் கேட்டபோதுதான் தனது கோடிகளை அவர் எனக்குக் காட்டினார்."

"அந்தப் பெண்களோடு அவருக்கு உடல் தொடர்பு இருந்ததா?"

"ஆம். சில பெண்களோடு."

"இதனை அறிந்தபோது உங்களுக்குப் பொறாமை வரவில்லையா?"

"இல்லை."

"அந்தப் பெண்களில் எவரையாவது நீங்கள் சந்தித்ததுண்டா?"

"ஆம். வாசுகி எனது சிநேகிதியாகவே வந்துவிட்டாள்."

"இது எப்படிச் சாத்தியமாகியது?"

"இந்தக் கேள்வியை நீங்கள் வாசுகியிடம் கேட்பது நல்லது."

"எனது கேள்விகளுக்குப் பதில்கள் தந்தமைக்காக மிகவும் நன்றி."

☐☐☐

நான் கேற்றின்முன் வந்தபோது ஓர் இளம்பெண் நிலத்தைக் கூட்டிக்கொண்டிருந்தாள். அவள் வாசுகியின் மகளாக இருக்கலாம் என நான் நினைத்து "வாசுகி வீட்டில் இருக்கின்றாரா?" எனக்கேட்டபோது "அது நானே!" என்றாள்.

"நான் ராசம்மா சார்பில் உங்களைச் சந்திக்க வந்துள்ளேன். நான் உங்களிடம் சில கேள்விகளைக் கேட்க விரும்புகின்றேன். இதில் உங்களுக்கு எந்த ஆட்சேபனை யும் இல்லையா?"

"இல்லை. உள்ளே வாருங்கள்!"

"நான் இங்கே வருவதற்கு முன்னர் ராசம்மாவிடம் உங்கள் வயதைக் கேட்கவில்லை."

"எனக்கும் ராசம்மாவின் வயது என நீங்கள் நினைத்திருக்கலாம்."

"நீங்கள் சொல்வது சரி."

"என்னிடம் நீங்கள் தயக்க மில்லாமலும் கூச்சமில்லாமலும் எந்தக் கேள்விகளையும் கேட்கலாம்."

"திரு சிவலிங்கத்தினது படைப்புகளுள் நீங்கள் உங்களைப் பாத்திரமாக அடையாளம் கண்டுள்ளீர்களா?"

"ஆம். பல படைப்புகளுள்."

"உங்களைத் தவிர வேறு பெண்களையும் அங்கே அடையாளம் கண்டீர்களா?"

"பெண்களைமட்டுமல்ல ஆண்களையும்கூட."

"உங்களைத் திரு சிவலிங்கத்தின் எழுத்துக்குள் கண்டபின்னரா அல்லது காண்பதற்கு முன்பா உங்களுக்குள் தொடர்பு ஏற்பட்டது?"

"நான் அவரை முதலாவது தடவையாகக் கண்டேன். அதற்குப் பின்னர் பாத்திரமாக நான் என்னை அவரது படைப்புக்குள் கண்டேன்."

"கூட்டத்திலே நீங்கள் அவரோடு பேசியதுண்டா?"

"இல்லை. நான் தூரத்தில் இருந்தேன்."

"அவரது விழிகள் உங்கள் மீது விழுந்தனவா?"

"என்னால் அவரைப் பார்க்கமுடிந்தது. அவராலும் என்னைப் பார்க்கமுடியும் என்பதை என்னால் பின்பே அறியமுடிந்தது."

"உங்களைப் பாத்திரமாக அவர் படைப்புக்குள் கண்டபோது உங்கள் நிலை எப்படியாக இருந்தது? நீங்கள் எவ்வாறு அவர் படைப்புக்குள் பாத்திரமாகச் சித்திரிக்கப்பட்டிருந்தீர்கள்?"

"எனது உடலை அவர் தனது பேனாவால் கீறியதை வாசித்தபோது எனக்குள் ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது."

"ஏன்?"

"நான் மிகவும் தூரத்தில் இருந்தேன். நான் கூட்டிக்கட்டிய கூந்தல் சிறிதாகக் கலைந்தி ருந்ததை அவர் வரைந்ததுபோல கோயாகூட வரைவாரா என்பதில் எனக்குச் சந்தேகம் உள்ளது."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"கோயா ஓவியன். அவனது மாயா ஓர் சித்திரம்."

"எழுதுபவனும் ஓர் ஓவியனே."

"உங்களைத் தேடிவந்தது அவரா அல்லது அவரைத் தேடிச்சென்றது நீங்களா?"

"நானே அவரைத் தேடிச சென்றேன்."

"அவரின்மீது உங்களுக்குக் காதல் வந்தது எனக்கருதலாமா?"

"நான் அவரைச் தேடிச்சென்றது காதல் மோகத்திலல்ல. அவர் பாத்திரமாகப் படைத்தது நானா என எனக்குள் ஏற்பட்ட சந்தேகத்தைத் தெளிவு செய்யவே."

"அவர் படைத்த பாத்திரம் நீங்கள்தான் எனும் உண்மையைச் சொன்னாரா?"

"ஆம். எனது முகத்தால் தான் வசீகரிக்கப்பட்டுவிட்டதாகவும் எனது முகத்தை அவவப்போது பார்க்கும் சந்தர்ப்பத்தைத் தர முடியுமாவென்றும் கெஞ்சினார்."

"தரமுடியும் எனச் சொன்னீர்களா?"

"தரமாட்டேன் எனச் சொன்னேன். மீண்டும் கெஞ்சினார். நானோ மறுத்தேன்."

"உங்கள் மறுப்புக்கு அவரது வயது ஓர் காரணமா?"

"இல்லை."

"அவரது எழுத்துகள் போலியானவை என நீங்கள் கருதினீர்களா?"

"அவரது எழுத்துகளினது முதலாவது வாசகியாக இருக்க வேண்டும் எனத் துடித்தவள் நான்."

"அப்படியானால் ஏன் இந்த மறுப்பு?"

"இது எனது ஆண்கள் பற்றியதும் செக்ஸ் பற்றியதுமான தனிப்பட்ட பார்வைகளோடு சம்பந்தப்பட்ட ஓர் விஷயமானபடியால் பதில் சொல்ல விரும்பவில்லை."

"முதலில் மறுப்பு. பின்னரோ அங்கீகரிப்பு. இதனை நீங்கள் தராத பதிலுக்கூடாக அறிந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன்."

"நீங்கள் சொல்வது சரி."

"எனக்குத் தெரியாத பதில் திரு சிவலிங்கத்திற்குத் தெரியுமா?"

"தெரியும். ஆனால் அதை அவர் ஒருபோதுமே உங்களுக்குச் சொல்லமாட்டார். அவர் ரகஸியங்களுக்கு அதீத மரியாதை கொடுப்பவர்."

"ஆனால் இலக்கிய உலகில் இந்த ரகஸியம் ரகஸியமாகக் கதைக்கப்படுகின்றதென்ற உண்மை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும். இந்த ரகஸியத்திற கூடாக நாங்கள் வாழ்கின்ற சுவையான பக்கங்கள் அவர்களுக்குத் தெரியாது."

"இதனை நீங்கள் ஏன் ஒழித்து வைத்திருக்க விரும்புகின்றீர்கள்?"

"இது எங்களது தனிப்பட்ட தெரிவு."

"நவகாலத்திலும் இந்தத் தெரிவு அவசியமானதா?"

"நாம் உண்மையிலேயே நவகாலத் தில் தான வாழ்கின்றோமா என்பதில் எனக்கு நிறையச் சந்தேகங்கள் உள்ளன."

"நீங்கள் அவரோடு வாழ்வது ஓர் காதல் கதையா?"

"ஆம். நான் அவரை ஒவ்வொரு தினமும் சந்திப்பதில்லை. ஆனால் சந்திக்கின்ற தினங்கள் ஒவ்வொன்றும் புதிய காதல் தினங்கள்."

"உங்கள் தலையீட்டால் ராசம்மா கலங்கியதில்லையா?"

"எங்கள் தொடர்பைச் அவளிடம் சொல்லுமாறு அவரிடம் கேட்டதே நான்தான். அவருக்கு சிக்கலான விஷயங்களையும் இலகுவாகச் சொல்லும் கலை தெரியும். ராசம்மாவின் உலகு குறுகியதல்ல என்பதை அவருக்கூடாக அறிந்தபடியால்தான் அவளிடம் சொல்லுமாறு சொன்னேன்."

"அவரைத் திருமணம செய்யவேண்டும் என்கின்ற ஆசை உங்களுக்குள ஒருபோதுமே வந்ததில்லையா?"

"அவரையும் ராசம்மாவையும் பிரித்தபின்னர் என்னால் அவரோடு காதல் கதைகளை வாசிக்க முடியாது."

"அவருக்கு வேறு காதலிகளும் உள்ளனர் என்பது உங்களுக்குத தெரியுமா?

"தெரியும்."

"இந்தத் தொடர்புகள உங்களுக்குள் பொறாமையை ஏற்படுத்தியதில்லையா?"

"பெண்களிடம் பொறாமை இயல்பு உள்ளதென்பது உண்மை தான். அவர் உண்மைகளைச் சொல்வதால் எனது இயல்பும மாறியதென்பது தான் உண்மை."

"இந்த இயல்பினை ஓர் பாலியல் அடக்குமுறையின் விளைவு எனக்கருதும் போக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளதல்லவா?"

"அந்தப்போக்கினை நான் மறுக்கவில்லை. ஆனால் என்னால் பெண்மையை மறுதலித்து பெணவிமோஷனத்தைப் பார்க்கமுடியால் உள்ளது."

"பெண்ணியக் கொள்கைகளில் சில பெண்மைக்கு எதிரான அர்தங்களைத் தருகின்றனவே! இது ஏன்?"

"ஆண் உடலுக்குள் பெண்மையில்லை என்றும் பெண் உடலுக்குள் ஆண்மை இல்லை என்றும் என்னால் திடமாகச் சொல்லமுடியாது."

"அவருக்குள் நீங்கள் பெண்மையைக் கண்டீர்களா?"

"அதை அவரிடம் கேளுங்கள்."

"உங்களுக்குள் நீங்கள் ஆண்மையைக் கண்டீர்களா?"

"ஆம். இது வித்தியாசமானது. பெண்ணின் உடல் அழகிலிருந்து கக்கும் அதிகாரத்துடன் சம்பந்தப்பட்டது."

"இந்த அதிகாரம் ஆண் அதிகாரத்திற்கு ஒப்பீடானதா?"

"அதனைக் காட்டிலும் மேலானது."

"இதனைப் பற்றி சற்று விரிவாகச் சொல்லமுடியுமா?"

"இது ஓர் சத்தியத்துடன் சம்பந்தப்பட்டதால் சொல்ல விரும்பவில்லை."

"அவருக்குப் பல பெண்களுடன் தொடர்பு இருந்ததைவைத்து பெண்கள் விஷயத்தில் பலவீனமானவர் எனும் முடிவுக்கு வரலாமா?"

"பலபெண்களுடன் ஒருவருக்குத் தொடர்பு உள்ளதென்றால் இதற்கு அர்த்தம் அவர் பலவீனமாவர் என்பதல்ல, பலமானவர் என்பதேயாகும்."

"காதல் உலகம் வெள்ளையானதா கறுப்பானதா?"

"அதனது நிறங்கள் பல."

"ஓர் இலக்கியவாதியின் கள்ளக்காதலியாகப் பல வருடங்களாக இருக்கின்றீர்கள். உங்களுக்கு எழுதும் ஆசை எப்போதாவது வந்ததுண்டா? புனைபெயர்களில் எழுதியுள்ளீர்களா?"

"நான் சொன்னால் நம்பமாட்டீர்கள். எனக்கு உண்மையிலேயே எழுதத்தெரியாது."

"உங்களோடு பேசியபின்னர் என்னால் நீங்கள் சொல்லுவதை விழுங்கமுடியாமல் உள்ளது."

"நான் சொல்வது பொய்யென நினைக்கின்றீர்களா?"

"இல்லை. ஆனால்..."

"வாழ்வின் உண்மைகளை விளங்க எமக்கு மெல்லிய புத்தகங்களோ மொத்தப் புத்தகங்களோ தேவையில்லை. கடலின் அலைகளுக்குள்ளேயே எனது பள்ளி உள்ளது."

☐☐☐

ரேவதியின் முகத்திலே நிறைய நளினங்கள் இருந்தன.

"என்னோடு சம்பாஷிக்கச் சம்மதித்தமைக்காக நன்றி."

"பத்திரிகையாளர்களுக்கு எதனையும் கீறிக்கிழித்துப் பார்ப்பதில் ஓர் பேரானந்தம் உள்ளது."

"நீங்கள் சொல்வது சரி. ஆனால் என்னை நீங்கள் நம்பலாம். திரு சிவலிங்கம் மீதான புத்தகத்தில் தொழில்ரகசியத்திற்கு மதிப பளித்து உங்கள் சுய அடையாளம் எந்த இடத்திலும் வெளிவராது என்பதற்கு நான் உறுதிமொழி தருகின்றேன்."

"எனக்கு எனது அடையாளம் வெளியே வருவதில் வெட்கம் எதுவும் இல்லை."

"உங்களை அவர் தனது காதலி என்கின்றார். உங்களிடம் இன்பம் தேடி வருகின்ற அனைத்து ஆண்களையும் நீங்கள் உங்களது காதலர்களாகக் கருதுகின்றீர்களா?"

"இல்லை. ஆம் அவர் எனது காதலர்."

"ஏனையோர் வாடிக்கையாளர்களாக இருக்க இவரால்மட்டும் எப்படி உங்களது காதலராக வரமுடிந்தது.?"

"எனது வீட்டின் கதவை அவர் முதல் தடவையாகத் தட்டியபோது நான் அவரை ஓர் வாடிக்கையாளராகவே வரவேற்றேன். எனது உடலின் கவர்ச்சியைக்காட்டி கட்டிலை நோக்கி அழைத்தபோது -எனக்கு உனது உடல் தேவையில்லை மொழிகளே தேவை- என்றார். எனது உடலுக்காகவே எல்லோரும் என்னைத்தேடி வருகின்றவர்கள். இவரோ வித்தியாசமாகப்பட்டதால் பைத்தியமோ என எனக்குள் ஓர் ஐயம் ஏற்பட்டது. -என்னிடம் மொழி இல்லை உடல் மட்டுமே உள்ளது- என்றேன். -உனது உடலுக்குள் ஓர் மொழி உள்ளது அதுவே எனக்குத் தேவை- என்றவேளையில் ஓர் முதலாளியின் முகம் தெரிந்ததால் -போ!- என அவரைத் துரத்திவிட்டேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"அதற்குப் பின்னர் என்ன நடந்தது? அவர் உங்களைத்தேடி வந்தாரா?"

"பல தடவைகள் வந்தார். ஆனால் நான் தனியாக இல்லாதுள்ளேன் என்பதை வாசல் பூட்டப்பட்டிருப பதைக் கண்டு திரும்பிப்போய விட்டார்."

"அவர் வந்ததும் போனதும் உங்களுக்கு எப்படித்தெரியும்?"

"எனது வீட்டிற்கு முன்னால் வசிக்கும் எனது சிநேகிதியிடம் அவருடன் ஏற்பட்ட முதலாவது தினத்தைப் பற்றிப் பேசியபோது அந்த முதலாவது தினத்தில் நான் அவருடன் பேசிக கொண்டிருந்ததைக் கண்டதாக வும் அவர் முகம் தனது நினை வில் இருப்பதாகவும் எனது வாசல் கதவு பூட்டப்பட்டுக் கிடந்தவேளைகளில் அவரது முகத்தைப் பல தடவைகள் கண்டதாகவும் சொன்னாள்."

"உங்கள் வீட்டு வாசலைக் காப்பதா அவளின் தொழில்?"

"அவளின் தொழிலும் எனது தொழிலே. ஆனால் நானோ தேன். நான் ஈகளைத் தேடிப் போவதில்லை. அவள் ஈகளைத் தேட தனது வாசல் கதவின் நிற்கவேண்டியுள்ளது."

"ஏன்?"

"நான் அவளைக்காட்டிலும் கவர்ச்சியானவள் என நினைக்கின்றேன்."

"உங்களது கவர்ச்சிதான் அவரை உங்கள் வீடுவரை அழைத்தது என நினைக்கின்றீர்களா?"

"அதில் எனக்குச் சந்தேகங்கள் உள்ளன. இதற்கு அவர் மொழியத்தேடியே என்னிடம் வந்ததாக என்னிடம் முதலாவது தடவையில் சொன்னதே காரணம்."

"நீங்கள் உங்களைத் தேன் எனச் சொன்னவரிகளால் ஏனைய பெண்கள் உங்கள் மீது பொறாமைப் படாதிருக்க மாட்டார்களா?"

"அவர்கள் பொறாமைப்பட்டால் அது அவர்களது பிரச்சனை. எனக்கோ என்னைக் கவர்ச்சயாகக் காட்டுவதிலும் என் உடல் கவர்ச்சியின் பின்னே ஆண்கள் வண்டுகளாகச் சுற்றுவதும் விருப்பத்திற்குரியது."

"உங்களது பதில் மீது நிறையக் கேள்விகளைக் கேட்க எனக்கு விருப்பம். ஆனால் அதற்குத் தோதான தருணம் இதுவல்ல. சரி, திரு. சிவலிங்கம் எப்போது உங்களது வீட்டுக்குள் வந்தார்?"

"அது ஓர் வெள்ளிக்கிழமை காலை. நான் குளித்துக் கொண்டிருந்தேன். தலைவாசல் கதவு தட்டப்பட்டது. கிணற்றுக்குள் இருந்து வெளியே வந்த தண்ணீர் நிரம்பிய வாளியை தொட்டிலின் அருகே வைத்துவிட்டு எட்டிப்பார்த்தேன். வாசலில் அவர் அரை நிர்வாணமாகச் சென்று அவரை -வாருங்கள்- என வரவேற்றேன்."

"அவர் உங்களது கால்களின் கீழ் மயங்கி விழுந்திருப்பாரே?"

"இல்லை. ஆனால் எனது கால்களையே பார்த்துக் கொண்டிருந்தார். பின்னர் -நீ முன்னால் தூக்கிவிட்ட நீள் கூந்தலிலிருந்து சொட்டும் நீர்த்துளிகள் உனது விரல்களில் விழும் கோலத்தை வரைய வேண்டும் என்கின்ற துடிப்பு எனக்குள். ஆனால் நான் ஓவியன் அல்லன், எழுத்தாளன்- என்றார்."

"அன்று அவர் உங்களுடன் உடலுறவு செய்தாரா?"

"ஏன் இதுபோன்ற ஆபாசமான கேள்விகளைக் கேட்கின்றீர்கள்?"

"இது ஆபாசமான கேள்வியாகக் கருதப்படலாம் என்பது எனக்குத் தெரியும். விபச்சாரிகளின் விடுதிகளே அவரது விடுதிகள். என இலக்கிய வட்டங்களில் கதை கூடுதலாக அடிபட்டுள்ளது."

"அவர் ஓர் விபச்சாரியுடன் உடலுறவு செய்தால் அது தப்பா?"

"நான் அப்படி நினைக்கவில்லை. ஆனால் எமது சமூகப்பார்வை பற்றி உங்களுக்குத் தெரியும தானே."

"சந்திக்குச் சந்தி தப்பைக் காண்பதே எமது சமூகம்."

"நானும் அவரும் ஒருபோதுமே உடலுறவு செய்ததில்லை."

"இந்த வாக்குமூலம் நான் திரு. சிவலிங்கம் மீது தயாரித்துக கொண்டுள்ள பேட்டிப புத்தகத்துக்கு மிகவும் முக்கிய மானது. ஆனால் எமது இலக்கிய வட்டங்கள் இதனை நம்புவார்கள் என நான் நினைக்கவில்லை. அவரது பிரதான வைப்பாட்டி நீங்கள் என்பதே அவர்களது நம்பிக்கை."

"சரி அவரது பிரதான வைப் பாட்டியாக நான் இருக்கின்றேன் என்று வைத்துக்கொள்வோம். இது ஏன் இலக்கிய வட்டங்களிற்குள் ஓர் கேள்வியாக இருக்கவேண்டும்?"

"வட்டங்களுக்குள் இலக்கியம் பேசுவதற்கு எதுவும் இல்லாத வேளைகளில் படைப்பாளியின் படைப்பைத் தூக்கி எறிந்துவிட்டு படைப்பாளி செக்ஸில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீக்கானவனா அல்லது வீக்கில்லாதவனா என்பதை ஆய்வு செய்வதே அதனது தொழில்."

"உங்களுக்கு எனக்குக் கிடைத்த ஓர் அனுபவத்தைச் சொல்ல விரும்புகின்றேன். சில மாதங்களின் முன்னர் ஒருவர் எனது கதவைத் தட்டினார். நான் கதவைத் திறந்தேன். தன்னை ஓர் மிகப்பெரும் எழுத்தாளர் என்றபடி தனது பெயரைச் சொன்னார். நான் ஓர் மிகப்பெரிய இலக்கியவாசகி. ஆனால் அன்றுதான் அவரது பெயரை முதல் தடவையாகக் கேட்டேன். -மன்னிக்கவும், நான் ஓர் விபச்சாரி மட்டுமல்ல இலக்கியப்பிரிகையும் கூட. ஆனால் உங்கள் பெயரை ஒருபோதுமே கேட்டதில்லை. உங்கள் பெயரில் எந்தப் புத்தகங்களையும் புத்தக சாலைகளில் கண்டதுமில்லை- என்றேன். தனது புத்தகங்கள் வந்த இரு தினங்களிலேயே விற்கப்பட்டுவிடுவதென்றபடி தான் சிவலிங்கதைவிடப் பெரிய எழுத்தாளன் என்றார். பெரிது சிறிது பார்த்து நான் எழுத்தைப் படிக்கின்றவலல்ல. சிவலிங்கம் ஒருதடவை கூடத் தன்னைப் பெரிய எழுத்தாளர் என்று சொன்னதில்லை. பின்னர் அவருக்கு எழுத்தெரியாது என்றும் தான் ஓர் கோடீஸ்வரன் என்றபடியும் என் முன் ஓர் தங்கச் சங்கிலியை நீட்டினார். நான் அதனைத் தூக்கி எறிந்து அவரை அனுப்பிவிட்டேன்."

"ஏன்?"

"சிவலிங்கத்தை அவமானம் செய்கின்ற எவருக்குமே நான் எனது எனது உடலைக் கொடுக்கமாட்டேன். நான் பணத்துக்காகவும் விரும்பியுமே இந்தத்தொழிலைச் செய் கின்றேன். ஆனால் பணமே வாழ்வு என்கின்ற குருட்டு நம்பிக்கை என்னிடம் இல்லை. சில வருடங்களாக ஓர் வயோதிபக் குருடன் எனது வாசல்முன் இரவில் வந்து நிற்பதையும் பின்னர் போவதையும் அவதானித்து அவன்முன் சென்று சில தாள்களைக் கொடுத்தேன். ஓவ்வொரு தடவையும் அவன் அதனை மறுத்தான். நேற்றும் மறுத்தான். ஏன் என்று முதலாவது தடவையாகக் கேட்டேன். எனக்கு உனது தாள்கள் தேவையில்லை என்றான். உனக்கு என்னிடம் இருந்து என்ன தேவை எனக் கேட்டேன். உனது உடல் என்றான். -எனது உடலைப பார்க்கும் சந்தர்ப்பம் உனக்குக் கிடைக்காது போய்விட்டதற்காக வருந்துகின்றேன்- என்றபோது, -உனது உடலைப் பார்க்கத் தேவையில்லை. பலரது உதடுகளாலும் உனது உடலின் வர்ணங்களைக் கேட்டுள்ளேன். அதுவே எனக்குத்தேவை- என்றான். -உன்னிடம் பணம் உள்ளதா?- எனக் கேட்டேன். -எனிடம் பணம் இருக்குமாயின் நீ என்னிடம் ஏன் தாள்களைப் பல தடவைகள் நீட்டினாய்? ஏழைகளுக்கு உனது உடல் ஓர் கானல் கனவா?- என அவன் கேட்டபோது என்னிடம் எந்தப் பதில்களுமே இருக்கவில்லை. அவனை வாசல் முன் நிர்வாண மாக்கி எனது கட்டிலில் கிடத்தி னேன். அன்று ஓர் வெளிச்சமான காட்டுக்காமக்கோலங்களை நான் அவனோடு வாழ்ந்தேன்."

"திரு. சிவலிங்கத்தோடு உங்களுக்கு ஏற்பட்ட உறவின் மூல அர்த்தம் எது?"

"அவர் என்னிடம் எனது உடலை உடைத்துக்காட்டுமாறு கேட்டார். நான் அவரிடம் அவரது மொழியை உடைக்குமாறு கேட்டேன். பின்னர் எனது மொழியும் அவரது மொழியும் உடைக்கப்பட்டன. இது காரணமாகவே நான் அவரது காதலியானேன்."

"ரேவதி, நன்றி! நீங்கள் விரும்பினால் உங்களை மீண்டும் தனியாக ஓர் சம்பாஷனைக்காகச் சந்திக்க விரும்புகின்றேன்."

"நீங்கள் எந்தத்தினத்தில் விரும்புகின்றீர்களோ அந்தத் தினத்தில் எனது கதவை நீங்கள் தட்டத்தேவையில்லை. அது திறந்தே இருக்கும்."

"மீண்டும் உங்களுக்கு நன்றி".

□□□

நான் ரேவதிக்கு விடை கொடுத்துவிட்டு வீதியில் இறங்கி நடந்து கொண்டிருந்தபோது ஓர் நொண்டிப்பெண் எனக்கு வணக்கம் சொல்லி என்னைத் தன்முன் நிறுத்தினாள்.

"அவரை எனக்கும் தெரியும் என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது. ஆனால் என்னிடம் நீங்கள் இப்படிக் கேட்பது எனக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது. எனக்கு அவரைத் தெரியும் என்பது எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"அவரை எனக்கு எப்படித் தெரியும் என்பது எப்படி உங்களுக்குத்தெரியாதோ அதுபோல உங்களுக்கும் அவரைத்தெரியும் என்பது எனக்கு எப்படித் தெரியும் என்பது பற்றி என்னைக் குடையாமல் நீங்கள் என்னிடம் கேள்விகள் சிலவற்றைக் கேட்பதை விரும்புகின்றேன்."

"இது சற்றே கடினமானது."

"கேளுங்கள்! எந்தக் கேள்விகளாக இருந்தாலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவைகளை நிர்வாணமாகக் கேளுங்கள்!"

"அவர் தொடர்புவைத்திருந்த சிலபெண்களை நான் சந்தித்து சம்பாஷித்துக் கொண்டுள்ளேன். உங்களையும் அவர் காதலித்தாரா?"

"இல்லை, நான் தான் அவரைக் காதலித்தேன்."

"உங்களது காதலை அவர் ஏற்றாரா?"

"அவர் எனது காதலை ஏற்றார். ஆனால் என்னால் அவரது மனைவியாக முடியவில்லை."
"இன்றும் அவர் உங்களைக் காதலிக்கின்றாரா?"

"ஆம்."
"அவரின் மீது நீங்கள் கொண்டுள்ள காதல் கூடிக்கொண்டுள்ளதா அல்லது குறைகின்றதா?"

"அது கூடிக்கொண்டே செல்லும்."

"ஏன்?"

"நான் இன்று நொண்டி நொண்டியாவது நடப்பதற்கு அவர்தான் காரணம்."

"நான் நினைக்கின்றேன் அவர் உங்கள்மீது வைத்திருப்பது காதல் அல்ல இரக்கம்."

"நான் நொண்டியாக இருப்பதால் பலரும் இப்படித்தான் நினைப்பர் என்பது எனக்குத் தெரியும். ஆனால் உண்மை அதுவல்ல. அவர் உறவால் எனக்குப் பொய்க்கால் மட்டும் கிடைக்க வில்லை உடல் சந்தோஷமும் கிடைத்தது. நான் ஓர் குழந்தைக்கும் தாய்." எனச் சொல்லிவிட்டு அவள் திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

நான் அவள் மீது எனது பார்வையை வீசினேன். அவள் ஓர் புள்ளியாகி என்முன் மறைந்தாள். ●

பாரிஸ் 27-06-03

# பெருவாழ்வு



பாளையங்கோட்டை சிதம்பர சுப்பிரமணி எனப்பெறும் சைவ சித்தாந்தப் பெருநாவலர் சி.சு.மணி குமர குருபரர் திருமரபில், பழுத்த தமிழ்ப் புலமை பாலித்த குடும்பத்தில் பிறந்தவர். ஆங்கிலத்தில் ஒன்றும் தமிழில் பன்னிரண்டும் ஆகப்பதின்மூன்று நூல்களின் ஆசிரியர்.

பொருளியற் பட்டமும் அஞ்சல் துறைப் பணியுமான வாழ்க்கையினூடே மாதவச் சிவஞான முனிவரின் திராவிட மாபாடியத்திற்கு எளிய நடையில் பொருள் விளக்கம் செய்துள்ள அவரது பணி, பல்கலைக்கழகங்கள் மட்டுமே செய்யக் கூடியதாகும்.

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கிற்கும் உரை எழுதிய அவரது பங்களிப்பு திராவிட இயக்கச் சிந்தனைகள், தொழிற்சங்கம் எனப்பல துறைகளிலும் முத்திரை பதித்ததாகும்.

குன்றக்குடித் திருமடத்தின் மெய்கண்ட செல்வம் பட்டய விருதோடு சென்னை, கோவை, தூத்துக்குடி சைவப் பெருமன்ற விருதுகள், மறுமலர்ச்சி தி.மு.க. இலக்கிய அணியின் திருவள்ளுவர் விருது எனப்பெருமை பல பெற்ற தமிழ் ஆலமரம் இவர்.

சைவமும் தமிழும் என்பது தமிழ்நாட்டு சைவர்களின் முழக்கமாகும். இவை இரண்டில் சைவத்தை விட தமிழின் பக்கம் சாய்ந்தவர்கள் அதிகம் உண்டு. அதாவது சைவ அடையாளத்தைவிட தமிழ் அடையாளமே முதன்மையானது என்று கருதியவர்கள் இவர்கள். இவர்களின் கடைசி கொழுந்து சி.சு.மணி. இவரால் உருவாக்கப் பெற்றவர்கள் யாரும் சைவ உலகம் சாய்ந்தவர்கள் இல்லை என்பதே இதற்கு சான்று. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பழசின் புதுசு . . .

-ரவி - (சுவிஸ்) 11.05.03

தீயின் செந்நாக்கை நான்
தூசித்துத் துரத்திய நாட்களின் மீது
கடத்தி வரப்பட்டேன்
இருபத்தியிரண்டு ஆண்டுகள்
புத்தகங்களின் சாம்பலால்
தூசிப்படுத்தப்பட்டதாய் எம்
அறிஞர்களும்
அலுக்காது
சொல்லிக்கொண்டிருந்தார்கள்.
எரிபாடுகளின் குவியலில் எஞ்சிய
நூல்களும் களவாடப்பட்டிருந்தன.

யாழின்
நூல்நிலைய எரிசிதைவுகளை
தீ விட்டுச்சென்றது -
வரலாற்றின் பதிவுக்காய்.
அதுவும் இப்போ அழிக்கப்பட்டாயிற்று.
அதன் சுவடுகளை சுத்தப்படுத்தி
மீண்டும்
எழுந்தது நூல்நிலையம் - பழசின்
புதுசாய்.

வெள்ளைநிறப் பூச்சின் பின்னால்
பேதங்கள் மறைக்கப்பட்ட சங்கதியில்
ஒழுக்கு விழுந்தது.
விடுதலைத் தீயில் சாதிவெறி
வதங்கியதான

ஒரு மாயைப் பொழுதில்
அவர்கள் வந்து காவலாளியிடம்
திறப்பைப் பறித்துச் சென்றனர்.
பிறகொருநாள்
பூட்டிய தனி அறைக்குள்
சுமூகமாய்
பேச்சுவார்த்தை நடத்தினர் - வாயில்
ஆயுதவெடில் நாற.

புதிய நூலகத் திறப்பில்
சாதிக் கறல் படிந்தது.
நூலக வரலாற்றின் பதிவில்
செல்லன் கந்தையன் என்ற பெயர்
தீண்டத்தகாததாயிற்று.
எழுத்தறிவிப்போர் சாதியை எழுதி
அறிவைக் கற்பிக்க
ஊர்வலம் வந்தனர்.
நூலகத்தைத் திறவாதே !
இதைவிட வெட்கம் எதுவென நகைத்தது
முன்னவன் இட்ட தீ

மெழுகுதிரியையும் பெருந்தீ நகைத்தது -
யுத்த இரவுகளில்
படித்தலின் இறுதிமூச்சை நீ ஏந்தியதாய்
பெருமைப்பட்டதைப் பார் என்று.
தீமூட்டும் வேலை இனி
தேவையில்லை என்பதாய், அது தன்
கொள்ளியை எம்மிடமே
தந்துவிட்டுப் போயிருக்கிறது. ●

குறிப்பு

செல்லன் கந்தையன் - ஒரு தலித், யாழ் மேயர் பதவியிலிருந்தார் 1981 இல் யாழ் நூல்நிலையம் அரச பயங்கரவாதத்தால் எரியூட்டப்பட்டது. 14.02.2003 யாழ் நூல்நிலைய புதிய கட்டடம் திறக்கப்பட இருந்தது ; தடுக்கப்பட்டது. தடுத்த முக்கிய சமூகசக்திகள் - புலிகள், ஆசிரியர் சங்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மூதூர் முஸ்லிம் இளைஞர்கள் காணாமல் போனமை தொடர்பான அறிக்கை

**- தயாரிப்பு முஸ்லிம் தகவல் நிலையம் - ஸ்ரீலங்கா**

31.03.2003 திங்கட்கிழமை இரவு 7.30 மணியளவில் மூதூர் நெய்தல் நகரைச் சேர்ந்த மக்பூல் நயீம் (28), அப்துல் ரஸ்ஸாக் ஜாபிர்(28) ஆகிய இருவரும் மீன்பிடி தொழிலுக்காக வீட்டிலிருந்து வெளியேறியுள்ளனர். வழமையாக இவ்வாறு மாலை வேளையில் மீன் பிடிக்கச் செல்வார்கள். நள்ளிரவிலோ அதிகாலையிலோ வீடு திரும்புவது வழக்கம். ஆனால் இவ்விரு நபர்களும் அடுத்த நாள் காலையில் கூட வீடு திரும்பாததையிட்டு உறவினர்களும் நண்பர்களும் இவர்களைத் தேட ஆரம்பித்தனர்.

ஏனைய சக கடற்றொழிலாளர்கள் இவ்விருவரும் சம்பூர் பகுதியை நோக்கி வள்ளத்தில் சென்றதாகக் குறிப்பிட்டனர். சம்பூர் பகுதி நூறு வீத தமிழர்கள் வாழும் பிரதேசமாக இருப்பினும் மரம், கருவாடு, கஞ்சா போன்ற வியாபாரத்தில் ஈடுபடும் தொழிலாளர்கள் இப்பகுதிக்கு சென்றுவருவது வழமை.

இவ்வகையில் இவ்விரு நபர்களும் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசமான சம்பூர் கடற்கரைச்சேனையில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் விடுதலைப் புலிகளின் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளதாகவும் அப்பகுதியிலுள்ள தமிழ் நண்பர்கள் மூலம் காணாமல்போனவர்களின் உறவினர்களுக்கு தகவல் அனுப்பப்பட்டது. பின்னர் அவ்விரு நபர்களையும் விடுதலைப் புலிகள் மூதூர் பொலிஸாரிடம் கையளிக்கவுள்ளதாகவும் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன.

ஆனால் மூதூர் பிரதேச பிரமுகர்களும் முக்கியஸ்தர்களும் பல்வேறு வழிகளில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டு இவ்விடயம் தொடர்பில் விசாரித்தபோது தாம் எத்தகைய நபர்களையும் கைதுசெய்யவில்லையென அறிவித்திருந்தனர். எனினும் விடுதலைப்புலிகளின் உத்தியோக பூர்வமற்ற தரப்புச் செய்திகளும் பொதுமக்கள் தரப்புச் செய்திகளும் அவ்விருநபர்களும் விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தன.

எனவே பொதுமக்களும் உறவினரும் விசாரணையின் பின்னர் விடுதலைப் புலிகளால் இந்நபர்கள் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டதாக நிருபிக்கப்பட்டால் பொலிசாரிடம் ஒப்படைக்கப்படுவர் இல்லாவிட்டால் அவ்விருவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என எதிர்பார்த்திருந்தனர். இந்த வகையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அல்லது காணாமற் போனதாக நம்பப்படும் ஜாபிர் என்ற நபரின் தாயார் தனது மகனின் மீதுள்ள தீவிர அன்பின் காரணமாக தினமும் சம்பூரிலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்துக்குச் சென்று தனது மகனின் இருப்பை உறுதிப்படுத்தும் வகையில் தனது மகனை காட்டும்படி விடுதலைப் புலி உறுப்பினர்களிடம் உருக்கமான வேண்டுகோள் விடுத்து வந்தார். இரண்டு கிழமைகள் கழிந்த பின்னரும் தனது மகனைப் பற்றிய எந்தத் தகவலையும் பெறமுடியாத நிலையில் விடுதலைப்புலிகளுடன் தினமும் பேசி முழு நம்பிக்கையையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இழந்த நிலையில் திருகோணமலை மாவட்ட யுத்த நிறுத்த கண்காணிப்பு குழு உறுப்பினர் அக்பரிடம் தான் தற்கொலை செய்து கொள்ளப்போவதாக ஏற்கனவே குறிப்பிட்டது போன்று 15-04-2003 செவ்வாக்கிழமை காலை 6 மணியளவில் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

இதன் காரணமா இருநபர்களும் காணாமற் போனதையிட்டு மூதூர் நகரில் தமிழ்-முஸ்லிம் இனங்களுக்கிடையே நிலவிய பதற்றமும் முறுகல் நிலையும் மேலும் அதிகரித்தன. உணர்ச்சி மேலீட்டின் காரணமாக மூதூரிலுள்ள முஸ்லிம் இளைஞர்கள் கொதித்துக் கொண்டிருந்தனர். கடைகள் அரசு நிறுவனங்கள், பாடசாலைகள், வங்கிகள் முற்றாக மூடப்பட்டு வாகனப் போக்குவரத்தும் தடைசெய்யப்பட்டிருந்தது. பதற்றத்தை தனிக்கும் வகையிலும் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ஏ.ஆர்.எம்.ஏ.காதர், ஏ.எச்.எம். அஸ்வர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எம்.மஹ்ரூப், கே.எம்.தௌபீக், எம்.எஸ்.தௌபீக் பொலிஸ் மா அதிபர், யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு தலைவர் மற்றும் அரச உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளும் ஸ்லத்திற்கு விரைந்தனர்.

எனினும் முஸ்லிம் தரப்பு அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் காணாமற் போனவர்கள் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுப்பதிலும் பார்க்க அரசியல் ரீதியாக மோதிக்கொண்டமை முஸ்லிம் மக்களுக்கு பெரும் வேதனையளிக்கும் விடயமாகக் காணப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற் பிரிவு அறிக்கையொன்றை விடுத்திருந்தது. அவ்வறிக்கையில் இளைஞர்கள் காணாமற் போனமைக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என அறிவித்திருந்ததுடன் காணாமற் போனதாகக் கருதப்படும் இளைஞரின் தாயாரின் மரணம் குறித்து கவலையடைவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் சமாதானத்தைக் குழப்பும் வகையில் இப்பகுதியில் மூன்றாம் சக்தியொன்று செயற்படுவதாகவும் அச்சக்தியை இட்டு எச்சரிக்கையாக இருக்குமாறும் அவர்களை அடையாளம் காணுமாறும் தமது அறிக்கையில் இரு சமூகங்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இவ்வறிக்கையை மூதூர் பகுதி முஸ்லிம் தனிநபர்களோ அல்லது அமைப்புக்களின் பிரதிநிதிகளோ, மக்கள் பிரதிநிதிகளோ ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக இச்சம்பவம் தொடர்பில் பெரும்பாலானவர்கள் விடுதலைப் புலிகளையே குற்றஞ் சாட்டினர். இதற்கு அவர்கள் பின்வரும் நியாயங்களை முன்வைத்தனர்.

◆இளைஞர்கள் காணாமற் போனதாகக் கருதப்படும் சம்பூர்ப் பகுதி விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டு பிரதேசமாகும். இங்கு சட்டமும் ஒழுங்கும் விடுதலைப் புலிகளாலேயே நிர்வகிக்கப்படுகின்றது.

◆இப்பகுதி விடுதலைப் புலிகளின் கடற்பயிற்சி மையம், காவல் துறை, விடுதலைப் புலிகளின் நீதி மன்றம், மாவீரர் துயிலும் இல்லம் போன்றன அமைந்து காணப்படும் உயர்பாதுகாப்பு வலையமாகும்.

◆1990-களின் பின்னர் இப்பகுதியிலுள்ள ஏனைய தமிழ் அமைப்புகளின் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளதுடன் அவர்களின் நடமாட்டமும் முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

◆விடுதலைப் புலிகளின் தொடர்ந்தேர்ச்சியான தாக்குதல்களின் காரணமாக இப்பகுதியிலுள்ள கட்டைபறிச்சான் இராணுவ முகாம் கூட மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

◆இத்தகைய கள நிலவரங்களை வைத்துப்பார்க்கும் போது விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டு பிரதேசமான சம்பூர் பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டை மீறியோ அவர்களுக்குத் தெரியாமலோ எந்தவொரு சம்பவமும் நிகழ்வதற்கான சாத்தியக் கூறுகள் மிகவும் அரிதானது. இப்பின்னணியில் விடுதலைப் புலிகளுக்கும் இச்சம்பவத்திற்கும் எத்தகைய தொடர்பும் இல்லையெனவும் இச்சம்பவத்தின் பின்னணியில் மூன்றாம் சக்தி செயற்படுவதாக விடுதலைப் புலிகள் கூறுவதை ஏற்க முடியாதெனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

7மேலும் விடுதலைப் புலிகள் குறிப்பிடுவதுபோல் சமாதானத்தைக் குழப்பும் மூன்றாம் சக்தியோ அல்லது தமிழ் முஸ்லிம் சமூக ஒற்றுமைக்கு விரோதமாக இயங்கும் மூன்றாம் சக்தியோ இப்பகுதியில் செயற்படுவதாக இதுவரை இனங்காணப்படவில்லை. இதனை எந்தவொரு இராணுவ புலனாய்வு அறிக்கைகளும் உறுதிப்படுத்தவுமில்லை. அத்துடன் காணாமற்போன நபர்களுக்கு அவர்களைக் கடத்தி நீண்ட நாட்களுக்கு தடுத்து வைத்து பராமரிக்குமளவிற்கு பலம் வாய்ந்த விரோதிகளோ எதிரிகளோ இருப்பதாகவும் அறியப்படவில்லை.

எனவே சட்டத்தையும் ஒழுங்கையும் அரசால் நிலைநிறுத்த முடியாத விடுதலைப் புலிகளின் கீழ் சட்டமும் ஒழுங்கும் நிர்வகிக்கப்படும் தனது பூரண கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவத்தையிட்டு வெறுமனே அறிக்கைகளை விடுவதன் மூலம் இச்சம்பவம் தொடர்பான உண்மை நிலையினை கண்டறியும் தமது பொறுப்பிலிருந்து விடுதலைப் புலிகள் விலகி நிற்க முடியாது. மாறாக காணாமற் போனவர்களை தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபடுவதும் சம்பவத்தில் தொடர்புடைய நபர்களை அல்லது விடுதலைப் புலிகள் குறிப்பிடும் மூன்றாம் சக்தியை கண்டுபிடிப்பதும் இச்சம்வம் தொடர்பில் பொறுப்புச் சொல்வதும் விடுதலைப் புலிகளின் தார்மீகக் கடமையாகும்.

அதேநேரம் இச்சம்பவத்துடன் விடுதலைப் புலிகளே நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளமைக்கு பலமான ஆதாரங்களும் தடயங்களும் இருப்பதையும் விடுதலைப் புலிகளின் அண்மைக்கால நடவடிக்கைகள் மேலும் இதனை உறுதிப்படுத்துவதையும் பலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் தடையுத்தரவை மீறியமைக்காக தண்டனை வழங்குதல்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான சம்பூர்ப் பகுதியில் சமாதான நடவடிக்கைகளின் காரணமாக அண்மைக்காலமாக சுதந்திரமாக நடமாடுவதற்கு முஸ்லிம்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இக்கால வேளையில் முஸ்லிம்கள் இதற்கு முன்னர் தாம் இழந்ததும், காணாமற் போனதும் உடமைகளை இப்பகுதியில் அடையாளம் கண்டு அவற்றைப் பெற்றுத் தருமாறு யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டு பெற்றுக் கொள்ளவும் செய்தனர். இது விடுதலைப் புலிகளின் நிர்வாகத்திற்கு பெரும் தலையிடியாக மாறியது. இப்பின்னணியில் இப்பகுதிக்கு முஸ்லிம்கள் வருவதற்கு தடை விதித்ததுடன் தடையை மீறி வருபவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனவும் எச்சரிக்கப்பட்டனர்.

எனவே விடுதலைப் புலிகளின் எச்சரிக்கையையும் தடையையும் மீறி அவர்களின் கட்டுப்பாட்டு பகுதியில் நுழைந்த முஸ்லிம் நபர்களை தண்டனைக்குட்படுத்துவதற்காக விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டிருக்க முடியும்.

◆ காணாமற் போன நபர்கள் முஸ்லிம் ஆயுதக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற குற்றச்சாட்டு

◆ விடுதலைப்புலிகள் உட்பட ஏனைய தமிழ் அமைப்புகளும், தமிழ் ஊடகங்களும் அண்மைக்காலமாக முஸ்லிம்கள் மத்தியில் ஆயுதக் குழுக்கள் இயங்குவதாகவும் குறிப்பாக மூதூர்ப் பகுதியில் இயங்குவதாகவும் குற்றஞ்சுமத்தி வருகின்றன. காணாமற்போனதாகக் கருதப்படும் நபர்களில் ஒருவர் மேற்படி குற்றஞ்சாட்டப்படும் ஆயுதக்குழுவைச் சேர்ந்த நபர்களில் ஒருவர் என விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த தகவலை அடுத்து அந்நபர்களை கைதுசெய்து மேலதிக தகவல்களைப் பெறும் வகையில் சித்திரவதைக்குட்படுத்தியதன் பின்னர் கொலை செய்துள்ளதாக உள்ளூர் தமிழ் நண்பர்கள் குறிப்பிட்டதாக பெயர் குறிப்பிட விரும்பாத பலர் தெரிவிக்கின்றனர்.

சில விடுதலைப் புலி உறுப்பினர்கள் "இன்னும் பலர் பிடிக்கப்படவுள்ளனர், கவனமாக இருங்கள், கைது செய்யப்படவேண்டியவர்களின் பட்டியல் எம்மிடம் இருக்கின்றது" என மிரட்டல் பாணியில் இச்சம்பவத்தையடுத்து கருத்துத் தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் தமிழ்-முஸ்லிம் உறவை விரும்பும் தமிழ் நண்பர்கள் முஸ்லிம் இளைஞர்கள் தமிழ்ப் பகுதிக்குள் வருவதனை தவிர்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தி வந்தமையும் இச்சந்தேகத்தை வலுப்படுத்துவதாகவுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணாமற் போனதாக கருதப்படுபவர்கள் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டமைக்கு விடுதலைப்புலிகளே ஆதாரம்.

◆ காணாமற் போனதாகக் கருதப்படும் நபர் ஒருவரின் தாயார் தற்கொலை செய்துகொண்டதையடுத்து 15 நாட்களின் பின்னரே தமக்கும் இச்சம்பவத்துக்கும் தொடர்பில்லையென விடுதலைப் புலிகள் உத்தியோக பூர்வமாக அறிக்கைவிட்டனர். அதுகாலவரைக்கும் அவர்கள் விடுதலைப் புலிகளின் தடுப்புக் காவலில் இருப்பதாகவே நம்பப்பட்டது.

◆ இலக்கந்தைக் காட்டுப்பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் இராணுவ முகாமில் வைத்து அவர்கள் விசாரணக்குட்படுத்தப்பட்டு வருவதாக காட்டுப் பகுதிக்கு விறகு எடுக்கச் செல்லும் தொழிலாளர்கள் குறிப்பிட்டமை அவர்கள் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டமைக்கு தெளிவான ஆதாரமாகும்.

மேலும் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினரான சபேசன் தற்கொலை செய்து கொண்டு மரணமான காணாமற் போனதாகக் கருதப்படும் நபரின் தாயாரிடமும், குறிப்பிட்ட சில பொதுமக்களிடமும் குறித்த நபர்களை விடுதலைப் புலிகளே கைது செய்துள்ளதாகவும் அவர்களை பொலிஸாரிடம் கையளிக்க உள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தமை, காணாமற் போனதாகக் கருதப்படுபவர்கள் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளமைக்கு தக்க சான்றாகும். சபேசனின் இக்கூற்றை அமைச்சர் ஹக்கீம் பி.பி.சிக்கு அளித்த செவ்வியில் மேற்கோள் காட்டியுள்ளார்.

**காணமற்போனவர்களைக் கண்டறியும் முயற்சியில் விடுதலைப் புலிகள் காட்டிய அசிரத்தை**

காணமல் போனவர்கள் பற்றி தகவல் அறியும் வகையில் மூதூர் பிரமுகர்களும் பொதுமக்களும் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டபோதும் அவர்களது அலுவலகத்திற்குச் சென்றபோதும் உறுதியான தகவல் தெரிவிக்காது நலுவல் போக்கையே கடைப்பிடித்து வந்தனர். உரிய பொறுப்பாளர்கள் முஸ்லிம் தரப்பில் எவரையும் சந்திப்பதில் தவிர்த்தே வந்தனர். இதனால் காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை பல மணித்தியாலங்கள் விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் காத்திருந்து பல தடவைகள் முயற்சித்தும் முஸ்லிம் பிரமுகர்கள் ஏமாற்றத்துடனேயே திரும்பினர். யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு உறுப்பினர்களைக் கூட விடுதலைப் புலிகள் இவ்விடயத்தில் உதாசீனப்படுத்தியே நடந்து கொண்டனர். இதன் காரணமாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமையகத்துடன் தொடர்புகொள்ள முயற்சித்தமையும் குறிப்பிடத்தக்கது.

சிலபோது விடுதலைப் புலிகளை வற்புறுத்திக் கேட்டபோது "மேலிடத்து ஓடர்" "பொறுப்பார் எவரையும் சந்திக்க முடியாது சொன்னது விளங்கவில்லையா தமிழில்தானே சொல்கிறோம்" எனக் கடுமையான தொனிகளில் பதிலளித்த பல சந்தர்ப்பங்களும் உள்ளன.

உண்மையில் விடுதலைப்புலிகள் இச்சம்பவத்தில் தொடர்படாத குற்றமற்றவர்களாகக் காணப்பட்டிருந்தால் இவ்விடயம் தொடர்பில் அவர்களை சந்திக்க முயன்றவர்களை அன்புடன் உபசரித்திருக்க முடியும். தமது குற்றமற்ற தன்மையை விளக்கி விபரித்திருக்க முடியும். மேலும் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கான உத்தரவாதங்களை வழங்கியிருக்க முடியும். பல கூட்டுமுயற்சிகளிலும் நடவடிக்கைகளிலும் கூட இறங்கி இருக்க முடியும்.

இவற்றுக்கொல்லாம் மாறாக விடுதலைப் புலிகள் எதிர்மறைப்பாணியில் நடந்துகொண்டமை விடுதலைப் புலிகள் தாம் செய்த குற்றத்தை மூடி மறைத்து செயற்கைத் தனமாக நடந்துகொள்ள முடியாமற் போனமையையே சுட்டிக்காட்டுகின்றது.

**விடுதலைப் புலிகளின் அண்மைக்கால முஸ்லிம் விரோத நடவடிக்கைகள்**

05-04.2003 சனிக்கிழமை காலை 10.15 மணியளவில் தோப்பூருக்கு அண்மையிலுள்ள உப்பூரல் ஆற்றில் மீன் பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இரு முஸ்லிம் நபர்கள் எவ்வித காரணமுமின்றி விடுதலைப் புலி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உறுப்பினர்களால் பலமாகத் தாக்கப்பட்டு மோசமான வார்த்தைகளால் தூசிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சென்ற வல்லமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதே தினத்தில் பகல் வேளையில் இதே பகுதியில் சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த முஸ்லிம் மாணவர் குழு ஒன்றும் இதே நபர்களால் தாக்கப்பட்டது. இத்ததாக்குதலில் ஈடுபட்ட காந்தன் எனப்படும் விடுதலைப் புலி உறுப்பினர் அடுத்தநாள் 06.04.2003 ஞாயிறு இவரால் தாக்குதலுக்குள்ளான நபர்களால் தோப்பூர் நகரத்தில் இனங்காணப்பட்டு பலமாகத் தாக்கப்பட்டமை விடுதலைப்புலிகளின் முஸ்லிம் விரோத நடவடிக்கைகளை உறுதிப்படுத்துகிறது.

உப்பூரல் பகுதியில் எவ்வித நியாயமான காரணங்களுமின்றி விடுதலைப்புலிகள் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்துவதற்குப் பின்னால் பல பொருளாதார புவுயியல் இராணுவக் காரணங்கள் இருப்பதையும் பலர் சுட்டிக் காட்டுகின்றனர். இப்பகுதி மண்ணும் மிக வளமானதாகும். கடல் வளமும் இயற்கைத் துறைமுக அமைப்புக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இத்தகைய பொருளாதார இராணுவ புலியியல் ரீதியான அபரிமிதமான வளங்களைக் கொண்ட இப்பகுதியில் இருந்து 87 களின் பின்னர் முஸ்லிம்கள் இனப்பிரச்சினைகளின் காரணமாக வெளியேறினர். அதன் பின்னர் மீள் குடியேற்றத்திற்காக முஸ்லிம்கள் எடுத்த அனைத்து முயற்சிகளும் ஏதோ ஒரு வகையில் தடுக்கப்பட்டு வந்தன. அண்மைக் கால சமாதான சூழலைப் பயன்படுத்தி மீண்டும் இப்பகுதி முஸ்லிம்கள் மீள் குடியேற்ற முயற்சியில் ஈடுபட்டபோது நிலக்கண்ணிவெடிகளைக் காரணமாகக் காட்டி அம்முயற்சியும் தடுக்கப்பட்டது. இந்நிலையிலேயே முஸ்லிம்கள் தமது கிராமத்தைப் பார்வையிடவும் தொழில் முயற்சியில் ஈடுபடவும் சென்றபோது தாக்குதலுக்குள்ளாயினர். அதே நேரம் இப்பகுதியில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பல ஏக்கர் காணிகளை பல தமிழ் அமைப்புகளும், தனிநபர்களும் வாங்குவதற்கு முயற்சித்தமையும் குறிப்பிடத்தக்கது. ரவி சந்திரமோகன் என்ற நபர் ஒரு முஸ்லிம் நபருக்குச் சொந்தமான 35 ஏக்கர் காணியை வாங்க முயற்சித்தமை இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

மேற்குறித்த கருத்துக்களையும் கள நிலவரங்களையும் விடுதலைப் புலிகளின் முஸ்லிம் விரோத நடவடிக்கைகளையும் வைத்துப் பார்க்கும்போது இளைஞர்கள் காணாமற் போனமைக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான தொடர்பை இலகுவில் நிராகரித்துவிட முடியாது.

இவ்விவகாரம் மிகப் பரவலாகப் பேசப்பட்டு இரு சமூகங்களுக்கிடையே வன்முறைகளைத் தோற்றுவிக்கக்கூடிய காரணியாக இருக்கும் போது ஒரு சில தனி நபர்கள் அல்லது ஒரு குழுவினர் வேற்று சமூகத்தைச் சேர்ந்த நபர்களைக் கடத்தி நீண்ட நாட்களுக்கு மறைத்து வைத்து அல்லது கொலை செய்துவிட்டு மூடி மறைப்பது இலகுவான காரியமல்ல. நீதியும் நேர்மையும் மனிதாபிமானமும் மிக்க மனிதர்கள் இத்தகைய நடவடிக்கைகளை எவ்வகையிலும் அங்கீகரிக்கப் போவதில்லை.

எனவே விடுதலைப் புலிகள் இவ் விடயம் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்காது நீண்ட நாட்கள் மௌனம் சாதித்தமை அவர்களது நேர்மைத் தன்மையிலும் சமாதான நாட்டத்திலும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இம் மௌனமானது தமிழ் முஸ்லிம் சமூகத்திற்கிடையிலான பிளவை ஊக்குவிப்பதற்குத் துணை புரிந்துள்ளது.

மாறாக விடுதலைப்புலிகள் நிலைமையின் பாரதூரத்தன்மையை உணர்ந்து இரு சமூககங்களுக்கிடையிலான முறுகல் நிலையினை நீக்கி அச்சத்தையும் பதற்றத்தையும் தணிக்கும் வகையில் உடனடி சமாதான நடவடிக்கைகளில் இறங்கி இருப்பார்களானால் பின்னைய தோப்பூர்-மூதூர் தமிழ் முஸ்லிம் கலவரங்கள் ஏற்படாமல் தவிர்க்க முடிந்திருப்பதோடு தமிழ் முஸ்லிம் உறவில் மீண்டும் ஒரு கறை படிந்த அத்தியாயம் இடம்பெறாமல் தடுத்த வரலாற்றுப் பெருமையை அடைந்திருக்க முடியும். ●

Date of publication : 28.04.2003



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சத்திரியம்

– *சக்கரவர்த்தி*

"SEELING" இதுதான் அந்தக் கருவியின் பெயர். பெயரே எத்தனை அழகு. ஒரு அழகிய நதி ஒன்றின் பெயரைப் போலவே பூக்களும் பசும் சோலைகளும் நிறைந்த பள்ளத்தாக்கொன்றின் பெயரைப் பேலவா அல்லது கோடை கால பெண் ஒருத்தியின் தோற்றம் போன்றும் எப்படி ஒரு ரம்மியத்தைக் கொடுக்கின்றது இந்தப் பெயர்.

இக்கருவியின் தொழிற்பாட்டை எப்படி வார்த்தையால் வடிவமைப்பது என்பதுவே என் இப்போதைய கவலை. தொழிற்பாட்டை வைத்தே கருவியும் கண்டுபிடிக்கப்பட்டது என்பது சாலப் பொருத்தமான உண்மைதான். இப்படிப் பாருங்கள்,

தண்ணீர் அள்ள பயன்படும் கருவி என்ன? வாளி. தண்ணீர் குடிக்கப் பயன்படும் கருவி எது? குவளை. கூர்மையாக இருக்கும் வெட்டப் பயன்படும் - கத்தி. கூர்மையாக இருக்கும். நீளமாக இருக்கும். இரவும் வெட்டப் பயன்படும் - வாள். மக்களைக் கொல்ல (மோசமான) ராணுவம் வைத்திருப்பது? துப்பாக்கி! மக்களைக் காப்பாற்ற போராளிகள் வைத்திருப்பது? அதுவும் துப்பாக்கி! கிருஷ்ணன் கருவி? அருச்சுனன்.

உலோகம் கண்டுபிடிக்கப்பட்ட பின்பும் மரத்தால் ஆன கருவியான கழுமரங்கள் சைவர்களின் கொடூரத்தின் உச்சம் எனலாம். சிலுவையும் கூட அப்படியே. சம்பந்த சம்பந்தம் இல்லாது எதற்கோ கண்டுபிடிக்கப்பட்டு எதற்கோ பயன்பட்டுப் போன மின் கம்பமும் ஈழத்தில் கருவியாகிப் போனது.

இப்படி எல்லாக் கருவிக்கும் ஒரு அற்புதமான தொழிற்பாடு உண்டு. Selling-க்கும் ஒரு அற்புதமான தொழிற்பாடு உண்டு. ஆனால் அதை எப்படி வார்த்தையில் வடிவமைப்பது என்பதே கவலை.

உறங்க - உடல் உறவு கொள்ள - சுய இன்பம் கொள்ள எடுத்துக் கொள்கின்ற காலம் தவிர்த்து மற்றய நேரம் எல்லாம் கடந்த ஆரேழு மாதங்களாக இக் கருவியை எப்படி வார்த்தைக்குள் கொண்டு வருவது என்பது பற்றியே எண்ணிக் கொண்டிருக்கின்றேன். எப்படி புரியவைப்பேன் இக் கருவியின் தொழிலை.

கிட்டத்தட்ட இப்படிதான் இருக்கும் இந்தக் கருவியின் வடிவம். ஒரு உள்ளங்கை அகலம்தான் இருக்கும். இக்கருவியின் வாய் பகுதியில் இருக்கும் பகுதி ஒரு வகை நெகிழும் உலோகத்தால் ஆனது. கீழே இருக்கும் வட்டப் பகுதி இறுக்கமான உலோகத்தால் ஆனது. மிகவும் உறுதிய உடையாத, நெகிழாத, ஒழுங்காக கட்டி உலோகம் மொத்த கருவியின் எடையே 200 கிராமுக்கு உட்பட்டுத்தான் இருக்கும்.

ஒரு முழம் இடைவெளி விட்டுவிட்டு இக்கருவிகள் நெடிதொரு சங்கிலியில் இணைக்கப் பட்டிருக்கும். ஆயிரத்திற்கு மேற்பட்ட கருவிகள். தரையில் இருந்து 5¾ அடி உயரத்தில் தொங்கும் இக்கருவிகள் அரைந்து நரைகின்றபோது உண்டாக்கும் ஓசை இருக்கிறதே அப்பப்பபா... என்ன ஒர ரம்மியமான ஓசை.

இடையறாது ஓசை எழுப்பிய வண்ணம் நகர்ந்து கொண்டே இருக்கும் இக் கருவிகளின் தொழிற்பாட்டை ஒற்றை வரிக்குள் அடக்கிவிட முடியாது.. ஆனாலும் அதுவே எனது இப்போதைய தேவையும்கூட.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Selling எனப் பெயர் கொண்ட இக் கருவியின் தொழிற் பாடு என்ன வெனில் கோழியின் கழுத்தை நசிக்கிப் பிடிப்பது.

நான்கு டெயிலர்கள் ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கிக் கிடக்கிற ஒரு டெயிலரில் மூவாயிரம் கோழிகள். இன்றும் இரண்டு அல்லது ஒன்று டெயிலர்கள் வரலாம். கை இரண்டும் கழுன்று விழுவது போன்றதொரு வலி. இன்றும் மூன்று மணி நேரம் வழக்கமான வருமான வரிக்கு உட்பட்ட சம்பளம். அப்புறம் விருப்பம் எனில் கறுப்புக் காசுக்கு வேலை பார்க்கலாம் மரணம் நிச்சயம் என்றபின் முதலில் செத்துப் போவது வார்த்தைதான் டெயிலரில் இருந்து இறங்கும் ஒவ்வொரு சிறு பெட்டிக்குள்ளும் 25 கோழிகள் இருக்கும் பெட்டியின் எல்லா இடத்திலும் பரந்து கிடக்க வேண்டியவைகள் ஒரு மூலையில் மட்டுமே எல்லார் கோழிகளும் முடங்கிக் கிடக்கும்.

லேசான நடுக்கத்துடன் சிறு சத்தம்கூட இல்லாது அடங்கி மூலையில் கிடப்பதை பார்க்கையில் அவைகளுக்கு மரணம் தெரிந்து விட்டது என்பது நமக்குப் புரியும்.

பெட்டியின் உள் கைவிட்டு கோழிகளை பிடிக்கையில் எந்த எதிர்ப்புமின்றி கையில் அடங்கும்.

கையில் கிடைத்த கோழியை கருவியின் வாய் பகுதியில் வைத்து அமுக்க அப்பகுதி விரிந்து கொடுத்து கோழியின் கழுத்தை உள்வாங்கும். உள்வாங்கப்பட்ட கழுத்தை கீழ் உள்ள வட்டப் பகுதி இறுக்கிப் பிடிக்கும்.

கழுத்து இறுக்கப்பட்டதும் இறக்கை இரண்டும் அகல விரியும். இறக்கை இரண்டும் அகல விரிந்தலும் கால்கள் இரண்டும் ஒன்றன் பின் ஒன்றாக மேலும் கீழுமாய் வேகமும் இல்லது மெதுவும் இல்லது ஏறி இறங்கும்.

இறுகிய முகத்துடன் சுகாதார அதிகாரி மார்புக்கு குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டு அகலகால் பிரித்து நிற்பான்.

இந்த கோழிகள் கருவியில் மாட்டுற இடத்தில் நம்மட பொடியன் ஒருவன் வேல பாத்தான் அவன் ஒரு நாள் என்னட்ட சொன்னான். "இந்த இன்ஸ்பெக்ட்டரையும் எங்கட சூப்பவைசரையும் ஒரு நாளைக்கு இந்த கருவியில் தூக்கி மாட்ட வேணும் எண்டு"

இவர்கள் ரெண்டு பேரையும் தூக்கி மாட்டுற அளவிற்கு அவ்வளவு பெரிய கருவிக்கு நாம நாம எங்க போறது? என்று நான் கேட்க - "சரி இந்த கோழிகளையாவது அவன்களை நினைப்பம்" எண்டான். கருவியில் கழுத்து கவ்வப்பட இறக்கையை விரித்து கால்களை மேலும் கீழுமாக அசைத்துக் கொண்டு என்னை நோக்கி வரிசையில் வரும் ஒன்றன் பின் ஒன்றாய் மிக மிக கூரிய -பாரமற்ற- அரையடிக்கும் குறைவான நீளம் கொண்ட கத்தி என்னிடம் இருக்கும் கோழி நகர்ந்து கொண்டு இருக்கையிலேயே அதன் குரல் வளையை வேகமாக அறுக்க இரத்தம் சீறும். இறக்கைகள் சற்று வேகமாக அசையும் கால்களும் வேகமாக அசையும். பின் இறந்து விடும்.

என் தொழில் கொலை. கோழிகளை கொல்பவன்

கழுத்தில் கத்தி பட்டதும் பத்து செக்கனுக்குள் கோழி செத்துப் போகும் அப்படித்தான் சாகவைக்க வேண்டும் என்பது சட்டம்.

என்னைப் போல் இன்னம் மூன்று பேர், மற்ற மூவரும் அரபுக்காரர்கள். நான் மட்டும் தமிழ்.

மூன்று அரபுக்காரர்கள் வேலை செய்வதற்கும் ஒருகாரணம் உண்டு. ஒரு தமிழனாகி நான் வேலை செய்வதற்கும் ஒரு காரணம் உண்டு. (அது உள் அரசியல்)

கழுத்து வெட்டுகின்ற பதவிக்கு வருவரென்பது ஒன்றும் அவ்வளவு லேசுபட்ட வேலை கிடையாது. நிறைய அரசியல் பண்ணியாக வேண்டும்.

உயிர் விட்ட கோழிகள் அடுத்ததாக கொதிக்கும் நீர் கிடங்குக்குள் இறங்கும் ஒரு நிமிடம் அளவுக்கு சுடு நீரில் அமுங்கி வெளிவரும் கோழிகள் செல்லும் இடம் இரப்பர் பட்டி. அவ் இரப்பர்பட்டிகள் கோழிகளை ஒரு வகையாய் உதறு உதறு என உதற இறக்கைகள் எல்லாம் உரித்து சிதறும். ஐந்து வருடங்களுக்கு முன்பு எனக்கு இந்த இடத்தில் தான் வேலை. உதிர்ந்து விழும் இறக்கைகளை கூட்டி அள்ளி அதற்கான இடத்தில் கொட்ட வேண்டும். $7.25 தான் ஒரு மணி நேரச் சம்பளம். எதுகை மோனை இல்லாது கோழிச் செட்டைகள் சிதறி அடிக்கும் உடம்பின் எல்லாப் பகுதியிலும் கோழிப்பேன் ஊரும். தெறிக்கும் நீரில் உடல் வேறு நனையும் குறிப்பிட நேரத்தின் பின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூக்கு மணக்கும் தன்மையை மரத்துப் போக பண்ணிவிடும்.

கூட்டி அள்ளி முடிந்து நிமிர-மறுபடி இறக்கையாய் நிறைந்து கிடக்கும் அவ்விடம்.

நத்தார் காலம்தான் எமக்க வாழ்வு. புனித விடுமுறை யான 15 நாட்களிலும் $ 2000 மாவது சம்பாதித்து விடலாம். வழக்கமான சம்பாத்தியம் அது தனி.

சர்ர்... சர்ர்... சர்ர்... இதே வேகத்தில் ஒவ்வொரு கோழியின் குரல்வளையை அறுக்க அறுக்க ஓயாது வந்து கொண்டே இருக்கும் கோழிகள் ஆயிரத்துக்கு குறையாது ஒவ்வொரு ஆளும் வெட்ட வேண்டும். அரபுக் காரர்கள் காலை ஐந்து மணியில் இருந்து பதினொரு மணிவரைதான் வெட்டுவார்கள் நான் அப்படியெல்லாம் கிடையாது. எனக்கு நேரம்காலம் எதுவும் கிடையாது. வெட்ட வெட்டக் காசு உடல் நோகாத வேலை. கைதான் இருக்கும். உதறி விட்டு விட்டு வெட்ட சரியாய் போய்விடும்.

இந்த வேலைக்கு வந்த பிற்பாடு ஒரே ஒரு கவலைதான் இந்த கனடா மக்களோட மெயின் சாப்பாடு கழுதை இந்த கோழிதான் , எனக்கு அந்தக் கொடுப்பினை இல்லாது போய்விட்டது கோழிக் கறி என்றால் வாந்திரான். KFC எந்த இடத்தில் இருந்தாலும் அந்தப் பாதையை தவித்து சுற்றிப் போகின்றேன் என் மனைவிக்கு கோழி என்றால் உயிர். மனசுக்குள் கறுவிக் கொண்டு அவளும் தவிர்த்து விட்டாள்.

இறக்கை அள்ளும் வேலையில் நான் திறமைசாலி என்பதை உணர்ந்த கங்காணி எனக்கு பதவி உயர்வு தந்து பத்து சத சம்பள உயர்வும் தந்து குடல் அள்ளும் பிரிவுக்கு மாற்றம் வேறு தந்தான்.

செட்டைகளை உதித்த பின் கோழிகள் மறுபடி 5¾ அடிக்கு உயர வரும். முன்னே நிற்பவன் ஒரு செட்டை உதித்த இறக்(கை)யை வெட்டுவான். அடுத்து நிற்பவன் மற்ற செட்டை உதித்த இறக்(கை)யை வெட்டுவான். அடுத்து நிற்பவன் இடது காலை வெட்டி எடுப்பான். அடுத்து நிற்பவன் வலது காலை வெட்டி எடுப்பான். அடுத்ததாய் நிற்பவன் மார்புச் சதையை வார்ந்தெடுப்பான். அடுத்தவன் மார்பைக் கீறிவர அடுத்ததாய் உள்ளவன் பிளந்த மார்புக்குள் இருந்து குடலை உருவி கீழே வீழ்த்துவான். வீழ்ந்த குடலை நான் வாரி அள்ளி அதற்கான இடத்தில் கொட்டி - அது நிரம்பியதும் வேறு பெரிய இடத்தில் நிரப்ப வேண்டும்.

இந்த பதவியில் உள்ளவனுக்கு கோழிக்கறி ஆசை நியாயமா? இப்படி இறக்கை அள்ளி- குடல் அள்ளி - காலை வெட்டி - மார்பைக் கீறி இன்று குரல்வளை அறுக்கின்றேன்.

“எனக்கு இவனுகளோட சிஸ்டம் கொஞ்சமும் விளங்கல்ல. கஸ்டமான குடல் அள்ளுற - கால் வெட்டுற வேலைக்கெல்லாம் கொஞ்ச சம்பளம். கழுத்து வெட்டுற வேலைக்கு கணக்கயா சம்பளம்”.

எங்களோட முதலாளியோட பொஞ்சாதி சரியான வடிவு. அவளில எனக்கொரு கண்ணு. (எனக்கு மட்டுமில்ல) அவள தள்ளிக் கொண்டு போற மாதிரி நினைக்கிறது எண்டால் எனக்கு அலாதி பிரியம். வேலை செய்யேக்க நான் எப்பவும் அவளத்தான் நினைப்பான். வேல இன்றஸ்டிங்கா அலுப்பில்லாம போகும். அரபுக்காரனுகள் அப்பிடியில்ல எண்டு நினைக்கிறேன். ஏனெண்டா ஒவ்வொரு கோழியோட கழுத்த வெட்டக்கயும் ‘அல்லாகு அக்பர்’ எண்டு முணு முணுத்துக் கொண்டுதான் வெட்டுவானுகள்.

என்னட்டயும் கனதரம் சொன்னவனுகள். ஒவ்வொரு கழுத்த அறுக்கேக்கயும் அல்லாகு அக்பர் எண்டு சொல்லி அறு எண்டு. நான் ஓம் எண்டு போட்டு முதலாளியோட பொஞ்சாதிய நினைச்சுக் கொண்டு எண்ட வேலய பாப்பன். அவன் செய்யுறது கலாலாம் நான் செய்யறது கறாமாம். எனக்கு எல்லாம் ஒண்டுதான்.

இந்தப் பதவி கனபேருக்கு கிடைத்தும் மறுத்துவிட்டனர். ஏனோ இந்த வேலை செய்ய அதிகம் பேர் விரும்புவதில்லை. நான் இந்த பதவியை அடைய எடுத்துக் கொண்ட பிரயத்தனம் கொஞ்சம் நஞ்சம் அல்ல.

கிறிஸ்மஸ் சொப்பிங் செய்ய வேண்டும். நாளை மறுநாள் கிறிஸ்மஸ் 12 மணி வரை கடைகள் திறந்திருக்கும். மனைவி தயாராக இருக்க வேண்டுமே. கோழி வெட்டும் இடத்தில் இருந்து மிசிசாகா செல்ல ஒரு மணி நேரம் எடுக்கும். காட்டுப் பாதை. வீதி வெளிச்சம் இருக்காது. மான் மரை வேறு குறுக்கே பாயும். ம்... சிறு சண்ட போட்டு விட்டு தூங்க வேண்டியதுதான்.

முன் இராக்காலம். ஐந்து மணிக்கே கும்மிருட்டாகிவிடும். முன்னால வாகனம் இல்ல. பின்னாடியும் இல்ல. கண்ணுக்கெட்டிய தூரம் வரை எனது வாகனத்தை தவிர வேறு எதையுமே காணோம். போகவும் வரவும் என இருவழிப் பாதை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அக்ஸிலேட்டரை அடிவரை அமுக்கினேன். 140-க்கு அப்பால் முள் நகரவில்லை.

கெட்லைட் வெளிச்சத்தில் தூரத்தில் எதுவோ அசைவது போலத் தெரிந்தது. உருப்படியான மிருகம் ஒன்றின் மலம் போல் அது தெரிந்தது. வெளிச்சம் கிட்டத்தில் போக அது பிராணி என்று தெரிந்தது. இன்னும் கிட்டப் போக . . . அட அது "ஸ்கங்". நான் காரின் ஒலியை எழுப்பினேன். வெளிச்சம் வந்த திசை பார்த்து அது வாலை உயர்த்தியது. எனக்குப் புரிந்து விட்டது. ஸ்கங் தன் எதிரி என நினைத்து காரை நோக்கி அந்த கெட்ட வாடை கொண்ட வஸ்துவை பீச்சுகிறது என்று.

"இந்த ஸ்கங் மீது வண்டியை ஏற்றினால் என்ன"?

"சே பாவம். அது அதுபாட்டுக்கு போகிறது"

"அவர் ஏன் எனது வழிக்கு வர வேண்டும்?"

"அதுதான் அதன் வழி. அது பாட்டுக்கு போகிறது"

"இல்லை. இது எனது வழி கொல்வேன்"

"சரி கொல்"

"இல்லை வேண்டாம்"

"இல்லை கொல்"

"சரி"

"கொல்லாதே"

"சடார்"

ய்ய்யாஆ . . .

அவன் இடது கை வீரன். இடது கை நாணை பின்நோக்கி இழுக்க அவன் புஜம் குப்பென வீங்கியது. வலது கை இறுக்கிப் பிடித்தது. வளையும் வில்லை அம்பின் முன் பகுதி விசத்தில் நனைந்திருக்க பின் பகுதி நாணில் பொறுத்திருந்தது. அவனது கண் துல்லியமாக மிக மிக நுணுக்கமாக அளவெடுத்தது. புத்தி கணக்குப் பண்ணி மூடிய - இடது கை சட்டென விட்டது அம்பை மின்னல் வேகம். காற்றைக் கிழித்து பின் அந்த பன்றியின் வயிற்றில் சுரீரென பாய்ந்தது வேடன் ஏவிய அம்பு.

"ஐயோ என் பிள்ளைகளே . . ."

பன்றியின் அவலக் குரல் காட்டின் எல்லாத் திசையிலும்.

பன்றி தடுமாறி விழுந்தது. உயிர் பிரியவில்லை. அதற்கு 22 குட்டிகள். மரணத்தை அதனால் ஏற்க முடியவில்லை. அதன் குட்டிகள் யாவும் மிக மிக சின்னவைகள். கானகம் புரியாத பருவம். பால்குடி இன்னும் மறக்கவில்லை. சிங்கம், புலி, ஓநாய் போன்ற கொடிய மிருகங்களிடம் இருந்து அந்தச் சிறு குட்டிகளை யார் காப்பார்? பால்குடி மாறாத பாலகக் குட்டிகள். பசியால் துடித்து சாகுமே! பன்றியால் மரணம் கொள்ள முடியவில்லை.

தடுமாறி எழுந்தது. அதன் முலைவாயில் இருந்து பால் கசிந்தது.

"ஐயோ என் பிள்ளைகளே"

படு வேகமாக மற்ற அம்பை ஏவினான் வேடன். நெற்றிப் பொட்டில் குத்திட்டு நின்றது அம்பு. செங்குத்தாய் பீச்சியடித்தது குருதி.

"ஐயோ என் பிள்ளைகளே" செத்து வீழ்ந்தது பன்றி.

கிட்டத்தில் ஓநாயின் ஊளை. நடு நிசியாயிற்று. அம்மாவைக் காணோம். பசி. கொடிய மிருகங்கள் நடமாட்டம். பயம். குட்டிகள் எல்லாம் வீல் வீல் என கத்திக் கொண்டே இருந்தன. அம்மா வரவில்லை.

"ஐயோ என் பிள்ளைகளே. . ."

"என்னங்க . . . என்னங்க . . ."

அறை முழுவதும் இருட்டு. எனக்கு விழிப்பு வந்துவிட்டது. அளவுக்கு அதிகமாக மூச்சு வாங்கியது. உடல் வியர்த்துக் கொட்டியது. தொப்பமாய் நனைந்திருந்தேன்.

"என்னங்க . . . என்னங்காச்சு"

கேட்டுக் கொண்டே எழுந்து லைட்டைப் போட்டாள்.

தலையை ஆட்டிவிட்டு தண்ணீரை எடுத்துக் குடிக்க கொஞ்சம் அது ஆசுவாசமாகியது.

"என்னங்க ஆச்சு? கனவா பிள்ளைங்களுக்கு எதுவும் கெடுதல் நடக்கிற மாதிரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கனவு கண்டீங்களா?"

நான் திரும்பவும் தலையை ஆட்டினேன்.

"ஐயோ என் பிள்ளைங்களே அப்பிடின்னு சத்தம் போட்டீக"

"அது நான் இல்ல பண்டி"

"பண்ணியா? உளறாதீங்க"

"பண்டிய வேடன் கொண்டுத்தான். அதோட குட்டியள் எல்லாம் கிடந்து கத்துதுகள் பாலுக்கு"

சிவபெருமான் வந்து பண்ணிக்குட்டிக்கெல்லாம் பால் குடுப்பாரு. "நீங்க இப்போ தூங்குங்க"

எரிச்சலுடன் விளக்கை அணைத்தாள். பின் சலித்துக் கொண்டாள். "தெனம் இதே வேலையாப் போச்சு உங்க கூட".

நான் அடித்துக் கொன்ற ஸ்கங்குக்கு குட்டியள் இருக்குமோ? இப்போது அந்தக் குட்டிகள் தம் தாயைத் தேடி அழக்கூடுமே. பன்றிக் குட்டிகளுக்கு சிவன் வந்து பால் கொடுத்தது போன்று ஸ்கங் குட்டிகளுக்கும் ஏதேனும் கடவுளர் வந்து பால் கொடுப்பாங்களோ. அதற்கு ஒரு துணை இருந்திருப்பின் அது இப்போது காத்துக் கிடக்குமோ. நமது ஒரு அரை மணி நேரம் தாமதம். ஆனால் மனம் எப்படிக் கிடந்து அடித்துக் கொள்கிறது. அதன் துணை இப்போது எப்படியெல்லாம் பதறிக் கொள்கிறதோ.

இருதயம் சும்மா எகிறித் துடித்தது. முத்தாய் வியர்வையில் நனைந்து போனேன். என் கை தன்னிச்சையாய் வெளிச்சத்தைப் போட்டது.

"என்னங்க ஆச்சு" கண்கள் கூசக் கேட்டாள்.

"இருட்டு பயமா இருக்கு"

"நீங்க சரியில்லீங்க"

"நான் ஒரு ஸ்கங்க காரால அடிச்சு கொண்டுட்டன்"

"அதுக்கு என்னங்க இப்போ?"

"அது பாவம் இல்லையா?"

"தூங்குங்க காலையில பேசிக்கலாம்". லைட்டை அணைத்து படுத்துவிட்டாள். பூட்டிய ஜன்னலுக்கு அப்பால் தூரத்தில் எங்கோ கிறிஸ்மஸ் கரோல் கேட்டது.

"அது பாவம் இல்லையா?"

"எது பாவம்?"

"நான் ஸ்கங்கை கொன்றது பாவம் தானே?"

"ஒரு நாளைக்கு மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கோழிகளை நீ கொல்வது பாவம் இல்லையா?"

"இல்லை. அது பாவம் இல்லை. அவை கொல்வதற்காகவே படைக்கப் பட்டவைகள்"

"அப்படியென்று உனக்கு யாரோ சொல்லிக் கொடுத்ததை நீ நம்பியிருக்கிறாய். உன் மனதை வசப்படுத்தி வைத்திருக்கிறார்கள். நான் கேட்கிறேன் கொல்வதற்காக படைக்கப்பட்ட கோழிகளுக்கு வலி கிடையாது என்கிறாயா?"

"அது எனக்குத் தெரியாது. அந்தக் கோழிகள் கொல்வதற்காக படைக்கப்பட்டவைகள் என்பது மட்டுமே எனக்குத் தெரியும்".

"உன்னை ஏமாற்றி இருக்கிறாங்கள்"

"யார்?"

"அதிகாரத்தில் உள்ளவர்கள்"

"யார் அதிகாரம் உடையவர்கள்?"

"அதுவும் உன் மனம்தான் அறியும். உன் அப்பாவாகவும் இருக்கலாம். உன் குருவாகவும் இருக்கலாம். உன் அரசனாகவும் இருக்கலாம். உன் அடுத்த வீட்டுக்காரனாகவும் இருக்கலாம். கோழி வெட்ட உன்னை வேலைக்கு அமர்த்தியவனாகவும் இருக்கலாம்"

"எது பாவம்?"

"எதுவும் பாவம் இல்லை"

"அப்படியாயின் எல்லாமே புண்ணியம் தானே"

"புண்ணியம் எனில் புண்ணியம்"

"பாவம் எனில் பாவமா?"

"அதை நான் சொல்ல மாட்டேன்"

"அப்படியாயின் கொலை பாவமா புண்ணியமா"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"அது. நீ யாரை சார்ந்து இருக்கிறாய் என்பதைப் பொறுத்தது"

"புரியவில்லை"

"புரிய வேண்டாம். உன் மனம் நான் சொல்வதை நம்ப ஆரம்பிக்கிறது"

"அதை நான் அப்புறம் தீர்மானிக்கிறேன். சொல், கொலை பாவமா? புண்ணியமா?"

"சத்திரியன் எனில் கொலை புண்ணியம்"

"இன்னமும் புரியவில்லை யார் சாத்திரியர்"

"கொலை செய்பவர்கள் எவர் எவரெல்லாம் உனக்கு சத்திரியர் என சொல்லப்படுகிறாரோ அதை நீ எவ்வளவு தூரம் ஏற்றுக் கொள்கின்றாயோ அவ்வளவுக்கு அவ்வளவு கொலைகள் எல்லாம் புண்ணியமாகும்"

புரியவில்லை யார் சத்திரியர் . . .

"புஸ் சத்திரியன். சதாம் சத்திரியன். பிரபாகரன் சத்திரியன், பிரேமதாஸா சத்திரியன். பின்லேடன் சத்திரியன், டொனி பிளேயர் சத்திரியன்"

"புரியவில்லை"

"இவர்களில் யாரையேனும் நீ ஆதரிப்பாயாக இருந்தால் இவர்களின் கொலைகளும் உன்னால் அங்கீகரிக்கப்படும். கொலை எங்கெல்லாம் அங்கீகரிக்கப் படுகிறதோ அங்கெல்லாம் அது புண்ணியம். உனக்கு அப்படித்தான் கற்றுத் தந்திருக்கிறார்கள்."

"யார் கற்றுத் தந்தார்?"

"வேண்டாம். நான் ஸ்கங்கை கொன்றது பாவமா? புண்ணியமா?"

"எதுவும் இல்லை"

"இல்லை. அது பாவம்"

"யார் உனக்கு சொன்னார்கள். அது பாவம் என்று"

"நானே சொல்கிறேன். அதன் குட்டிகள் துணை எல்லாம் கிடந்து தவிக்குமே"

"தவிக்கட்டுமே"

"அது பாவம் இல்லையா"

"இல்லை"

"எப்படி?"

"அதன் குட்டிகளை ஏதேனும் மிருகம் பிடித்துச் சாப்பிடும்"

"அந்தக் குட்டிகள் பாவம்தானே"

"இல்லை. அந்தக் குட்டிகள் ஏதோ மிருகத்தின் உணவுக்காக படைக்கப் பட்டவைகள். அவைகள் கொல்வதற்காகவே படைக்கப்பட்டவைகள்"

"அதன் துணை"

"இன்னோர் துணையை நாடும்"

"இது"

"இதுதான் உயிரியல் சக்கரம்"

"நான் ஸ்கங்கைக் கொன்றது பாவம் என்றே தோன்றுகிறது"

"அது உன் பாதைக்கு குறுக்கே வந்தது. நீ கொன்றாய். விட்டுத் தள்ளு,"

"இல்லை அதன் பாதை அதுதான்"

"இப் பூமியில் பாவம் புண்ணியம் என்று ஒன்று இல்லை. நீ உன் மனதை நம்ப வைப்பதைப் பொறுத்தே எல்லாம். சித்தி மகளைக்கூட மறுத்த அதே சமூகம்தான். மாமன் மகளை கூடச் சொல்லி கற்றுத் தந்திருக்கிறது. இது வரை காலமும் உனக்கு கற்றுத் தந்தவைகளை மறு . . . அல்லது மறுபலிசீலனை செய் . . ."

என்னால் முடியவில்லை. நான் ஸ்கங்கை கொன்றது சரியா? பிழையா?

"சரி"

"எப்படி?"

"நீ மதத்தை நம்புபவனா?"


"ஆம்"

ஆண்டவன் சொன்னான் அருணாச்சலம் செய்தான். நான் ஒரு கருவி சொல்லிவிட்டு போய்க் கொண்டே இரு. நீ லௌகீகத்தை சந்தோசமாக அனுபவிக்க வேண்டும் எனில் ஸ்கங்கை நீ கொன்றது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரி. கோழிகளை நீ கொல்வற்கான காரணங்கள் உன்னிடம் இருப்பது போன்று ஸ்கங்கை கொன்றதுக்கான காரணங்களை உருவாக்கிக் கொள். உன் மனதை நம்ப வை.

அது என் பாதைக்கு குறுக்கே வந்தது.

அது என்னை நோக்கி விச திரவத்தை வீசியது.

இந்த விச திரவத்தால் மனித குலமே அழியும் சாத்தியம் உண்டு. இது அழகிய வண்ணத்துப் பூச்சிகளைப் பிடித்து சாப்பிடுகிறது. இதன் தோற்றம் எனக்குப் பிடிக்கவில்லை.

இந்த ஸ்கங்கை என்னை காதலித்த எனது பழயகாதலிக்கு பிடிக்கும். இதனால் இந்த இனமே அழிக்கப்பட வேண்டும்.

பேறு காலங்களில் இந்த பிராணி ஊர்மனைக்குள் வந்து புகை கூண்டுக்குள் குட்டி போட்டுவிடுகிறது. இதை இப்படியே அனுமதித்தால் மனித இனத்தை விரட்டிவிட்டு இவைகளே எங்கள் வீடுகளில் குடியேறிவிடும்.

இவைகள் ஆண் அணில்களைப் போல் இருப்பதால் பெண் அணில்கள் இவற்றிடம் கற்பை இழக்கும் சாத்தியமும் உண்டு.

ஸ்கங் கொல்லப்பட வேண்டிய கொடிய மிருகம். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திருத்தவே மாட்டாத யாழ்ப்பாணியமும் திறக்கும் முன்பே மூடப்பட்ட யாழ் நூலகமும்



**வரலாறு**

1933-ல் கே.எம்.செல்லப்பா என்பவரினால் தமது வீட்டின் ஒரு புறத்தே ஆரம்பிக்கப்பட்டதுதான் இந்த நூலகம். பின்பு அதை விஸ்தரிக்க விரும்பிய அவரது நண்பர்களினால் ஒரு நூலகக் குழு அமைக்கப்பட்டு அதன் ஆலோசனைப்படி 1934 ஆகஸ்ட் முதலாம் திகதி யாழ் ஆஸ்பத்திரிக்கு அருகில் ஒரு தனி அறையில் நூலகம் உருவாக்கப்பட்டது.

கால ஓட்டத்தில் ஏற்பட்ட வளர்ச்சி நூலகத்தை விரிவாக்க வேண்டிய தேவையை வேண்டி நின்றது. 1959-ல் மாநகரத்துக்குரிய பொது நூலகமாக அதனைத் திறக்க வழியும் கோலியது. அன்றைய யாழ் மாநகர முதல்வர் அல்பர்ட் துரையப்பாவினால் அக்டோபர் 11-ம் தேதி யாழ் பொது நூலகம் திறந்துவைக்கப்பட்டது. அன்றிலிருந்து சிறந்த முறையில் இயங்கி வந்த நூலகம் தென்னாசியாவிலேயே சிறப்பானதொன்றென மதிக்கப்பட்டு வந்தது. 1981-ல் சிங்கள பேரினவாத அமைச்சர்கள் சிலரது திட்டமிடப்பட்ட தாக்குதலினால் வெறித்தனமாக இந்நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. அன்றிலிருந்து சுமார் பதினைந்து வருட காலம் சிதைந்து கிடந்த நூலகத்தினை 1996-ல் ஆட்சிக்கு வந்த சந்திரிகா புனரமைக்க ஆரம்பித்தார்.

**யாழ்ப்பாணியம்**

2001-ல் துணை மேயராகவும் தொடர்ந்து 16.01.2002-ல் மேயராகவும் திரு. செல்லன் கந்தையன் பதவியேற்றார். இவரது தலைமையில் இயங்கிய மாநகர சபை 120 மில்லியன் ரூபாய் செலவில் பொது நூலகத்தின் புனர் நிர்மாணப் பணிகளை நிறைவேற்ற ஆரம்பித்தது. 90சதவீத வேலைகள் பூர்த்தியான நிலையில் திறப்புவிழாவிற்கான திகதியை ஒன்றுகூடித் தீர்மானித்திருந்தனர்.

போரின் உக்கிரம் இனமுரண்பாடுகளை அதிகரிக்கச் செய்திருப்பதினால் மக்களுக்கிடையேயான சாதிய வேறுபாடுகளும் அது சார்ந்த முரண்பாடுகளும் மறைந்து கிடக்கின்றன. மாறாக ஒழிந்து விடவில்லை.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதன் காரணமாகத்தான் முப்பது வருடத் தமிழ்த் தேசிய அலைக்குள்ளும் உறைந்து கிடக்கும் சாதி வெறி அவ்வப்போது தலை காட்டவும் தவறுவதில்லை. வட்டுக் கோட்டை (1998), புத்தூர் (2000), பழுகாமம் (2002), . . . அவ்வப்போது இது போன்ற வெறியாட்டங்கள் நிகழ்த்தப்பட்டாலும் அது குறித்துப் பேசுவதற்குக் கூட தமிழ் வெகுஜன ஊடகங்கள் மறுத்தே வந்திருக்கின்றன. தமிழர் ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கக்கூடும் என்கின்ற காரணத்தினால் இம்முரண்பாடுகள் மறைக்கப்பட்டு வருகின்றன. இப்பிரச்சினைகளின் காரணங்கள் பேசுப் பொருளாக்கப்படுவது மறுக்கப்பட்டு குறைந்த பட்ச பத்திரிகையாளனின் கடமைகள் கூட தம் தம் சார்பில் தணிக்கைக்குட்பட்டு வந்திருக்கின்றன.

இவ்வகையில் இன்று இந்த சாதி வெறிக்கு யாழ்ப்பாண நகரபிதா திரு செல்லன் கந்தையன் அவர்கள் பலியாக்கப்பட்டு இருக்கிறார்கள். நூலகத் திறப்பு விழா புலிகளால் தடுக்கப்பட்டிருக்கிறது. வழமை போல் இது குறித்துப் பேசுவதற்கும் பல தமிழ் மீடியாக்கள் முடிந்தவரை மௌனம் சாதித்திருக்கின்றன. முடியாத போது சாதிய வெறிக்கு வக்காலத்து வாங்கவும் செய்திருக்கின்றன.

**அரளைப் பெயர்ந்த வயதிலும் அடங்காத சாதித் திமிர்/பேராசிரியர் சிவத்தம்பிக்கு தேவையா இந்த வம்பு**



திறப்பு விழா புலிகளால் தடுக்கப்பட்டமை குறித்து அனைத்துவித தமிழ் மீடியாக்களும் அடக்கி வாசிக்க ஓரிரு மாற்றுக் கருத்துக் கொண்ட இணையத் தளங்கள், மல்லிகை, புதிய சமதர்மம் தவிர புகலிடத்தில் Non போன்றவை தவிர இதனை ஓர் தலித் பிரச்சினை அல்ல என்றே பலரும் சாதித்தனர். நிலை அப்படி இருக்க வழமைபோல் யாழ் சைவ வேளாள ஆதிக்கத்தின் புத்திஜீவி குழலூதி சிவத்தம்பி இம்முறையும் களத்தில் இறங்கியுள்ளார். நூலகம் திறக்கப்படக்கூடாதென்பதற்கு அவர் கூறும் காரணம் பின்வருமாறு. "தமிழ் மக்களை அடக்கி ஆளுவதன் குறியீடாக எரிக்கப்பட்ட யாழ் நூலகம் இருக்க வேண்டும்" (வீரகேசரி 16.03.2003)

"அரசியல் தீர்வுக்கு முந்தி புனருத்தாரணம் குறித்து பேசுவது தேவையற்றது". அப்படியானால் 1996-ல் தொடங்கி இன்று வரை இதன் கட்டிடப் பணிகள் ஆரம்பித்து சுமார் ஏழு வருடங்கள் பேராசிரியர் எங்கே போயிருந்தார். சுமார் இரண்டு வருடங்கள் நெருங்குகின்ற சமாதானப் பேச்சில் அரசியல் தீர்வை முற்றாக மறந்தேவிட்டு தங்களுக்கான வரி, வெளிநாட்டு உதவிகள், கப்பம் . . . என்றும் புனருத்தாரணம், மீள்குடியேற்றம், அபிவிருத்தித் திட்டங்கள் என்றும் ஓடியோடி பணத்தில் கண்ணாயிருக்கும் புலிகளிடம் இது வரை சிவத்தம்பி இது குறித்து ஏன் பேசவில்லை.

சரி இவற்றையெல்லாம் சிவத்தம்பியின் வழமையான குளறுபடிகள் என விட்டுவிட்டாலும் வரலாற்றையே திருப்பிப் போட்டு "நூலகத்தைத் திறக்கவிடாமல் தடுப்பதற்கு (பாருங்கள் இங்கே கூட புலிகள் தடுத்ததற்கு என்று சொல்ல அவருக்கு வராது) யாழ் நகர மேயரின் சாதியை காரணம் கூற முடியாது" என்கிறார். "அதே வேளை யாழ்ப்பாணத்தில் சாதி அழிந்துவிட்டது எனக் கூறவும் முடியாது", "எந்தக் காலத்திலும் அது அழிந்துவிடக்கூடியதும் அல்ல", "ஆனால் அரசியல் சிந்தனையில் சாதி இல்லை". இவை தான் அவரது வாக்குமூலங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலும் "நல்லையாவை செனட்டராகவும், ராஜலிங்கத்தை உடுப்பிட்டியிலும் தேர்ந்தெடுத்த கட்சியிலிருந்து வந்த மேயர் சாதியைக் காரணம் கூறலாமா? அப்படியானால் அவர் மேயராகவே வந்திருக்க முடியாதே?" என்று கேட்கிறார் சிவத்தம்பி.

எப்படியிருக்கிறது சிவத்தம்பியின் சேஷ்டை. யாழ்ப்பாணத்தில் சாதி இருக்கிறதாம். அது அழியவும் மாட்டாதாம். ஆனால் அரசியல் சிந்தனையில் அது இல்லையாம். ஒரு சமூகவியல் பேராசிரியரின் கண்டுபிடிப்பு சமூகத்தினுடைய யதார்த்தம் எவ்வாறு அரசியல் சிந்தனையில் தாக்கம் செலுத்தாமல் இருக்க முடியும்? என்பது எமக்குப் புரியவில்லை. இவரை வருகைப் பேராசிரியராக வரித்துக் கொண்ட இந்தியப் பல்கலைகக் கழகங்களும் புலிகளும் இணைந்து இவருக்கு சமூகவியல் ஆய்வுக்கான நோபல் பரிசுக்கு சிபாரிசு செய்யலாம்.

அட புலிகளின் பக்தியில்தான் இவ்வாறு தன் படிப்பிற்கும் வயசுக்கும் எள்ளளவும் பொருந்தாமல் வெகுளிக் கதைகளை சொல்லித் திரியும் இந்த (மா?)மனிதன் (அதை இறக்கும் முன்பே உறுதி செய்யும் முயற்சி) கேடுகெட்ட தமிழரசு கட்சியினரையும்கூட தலித் போராளிகளாகக் காட்டும் நடவடிக்கைகளை நாம் எப்படியும் பொறுத்துக் கொள்ள முடியாது. கடைசியாக ஈபில் டவரில் ஏறி குதிப்பதைத்தவிர சிவத்தம்பியை நினைத்தால் எமக்கு வேறு வழியே தெரியவில்லை. நல்லையாவினதும் ராஜலிங்கத்தினதும் தெரிவு அந்த வரலாற்றுக் கதைகள் போன்றவற்றை வயது வந்த இந்த பெரிசுகள் இப்படியும் திரிப்பார்களா?

**நாமறிந்த வரலாறு இதுதான்**

தலித்துகளின் விடுதலைக்காக இயங்கி வந்த சிறுபான்மை தமிழர் மகா சபை கம்யூனிஸ்டுகளின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த காலம் அது. 1956-ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம், அதைத் தொடர்ந்த தமிழ்த் தேசியவாதிகளின் சத்தியாகிரகப் போராட்டம் என்பன சி. த. மகா சபைக்குள்ளும் தாக்கத்தை ஏற்படுத்தின. கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்திலிருந்து விடுபடவேண்டிய அவசியம், அதே நேரம் தமிழ்த் தேசிய உணர்வு, தமிழரசுக் கட்சியின்பால் இருந்த நம்பிக்கை போன்றவற்றின் தாக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்த பலர் சி. த. மகா சபையை விட்டு வெளியேறினர். குறிப்பாக த.மா.செல்லத்துரை, பு. நல்லையா; த. கணபதிநாதன், க. மு. முருகேசு போன்றோர்களைக் குறிப்பிடலாம். மாறாக எம்.சி.சுப்பிரமணியம் போன்றோர்களின் தலைமையில் எஞ்சியிருந்த சி. த. மகா. சபை கம்யூனிஸ்டுக் கட்சியினரின் முழுக் கட்டுப்பாட்டில் வந்தது.



கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும் தமிழரசுக் கட்சியினரான தேசியவாதிகளுக்கும் இடையில் பனிப்போர் நிகழ்ந்து கொண்டிருந்தது.

இதைத் தொடர்ந்து வந்த 1957-ன் தேர்தல் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எம்.சி. சுப்பிரமணியத்தை செனட் உறுப்பினர் போட்டிக்கு எதிர் கொண்டது. அது ஏற்படுத்திய நெருக்கடியை தவிர்க்கவே தமிழரசுக் கட்சியினரும் ஒரு தலித்தை எம்.சி. சுப்பிரமணியத்துக்குப் போட்டியாக நிறுத்த வேண்டிய இக்கட்டான நிலைக்கு உள்ளனர். அங்கேதான் நல்லையா தெரிவு செய்யப்படுகிறார். தலித்துகளுக்காகப் போராடிய சி.த.மகா சபையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிதைத்து கம்யூனிஸ்ட் கட்சியினரும் தமிழரசுக் கட்சியினருமாகப் பங்கு போட்டுக் கொண்டது மட்டுமன்றி தலித்துகளுக்கு விரோதமாகத் தலித்தையே களம் இறக்கிய தமிழரசுக் கட்சியினரின் பிரித்தாளும் சூழ்ச்சி அரங்கேறியது. இதில்தான் நல்லையா பலியாக்கப்பட்டார். தேர்விலும் குறைந்தபட்ச வாக்குகளால் வெற்றி ஈட்டினார். இதுதான் செனட்டரான நல்லையாவின் கதை.

ராஜலிங்கம் எப்படி எம்.பி.யானார்? இது இன்னும் சுவாரசியமானது. 1966-ல் சங்கானைத் தேநீர் கடைப் போராட்டம் மிக உக்கிரமாக நடந்து கொண்டிருந்தபோது (சுமார் இரண்டு வருடங்கள் தொடர்ச்சியாக) அதனை வியட்நாமின் சங்காய் என்று கிண்டலடித்த அமிர்தலிங்கத்தினது தமிழரசுக் கட்சியினரின் துரோக வரலாற்றிற்கு 1970-ல் நடந்த தேர்வில் தலித்துகள் நல்ல பாடம் கற்பித்தனர் (சங்கானை தலித் போராட்டப் பகுதி) வட்டுக்கோட்டையில் இருந்து தளபதி அமிர்தலிங்கத்தையும் உடுப்பிட்டித் தொகுதியிலிருந்து (கரவெட்டி - கன்பொல்லை தலித் போராட்ட பிரதேசங்கள்) சிவசிதம்பரத்தையும் தோற்கடித்தது தலித்துகளின் வாக்குகளே.

இந்நிலையில்தான் 1977 தேர்தலில் அமிர்தலிங்கம் இறந்து போன தந்தை செல்வாவின் வாக்குகளைப் பெற காகேசன் துறைக்கு ஓடியதும் உடுப்பிட்டி சிங்கம் சிவசிதம்பரம் நல்லூருக்கு ஓடி சங்கிலியனின் வாரிசுகளைத் தேடியதும் நடந்தது. உடுப்பிட்டி தொகுதி தலித் வாக்குகளைக் கவர தமிழர் விடுதலைக் கூட்டணி போட்ட தந்திரத்தில் தலித் ராசலிங்கம் வீழ்த்தப்பட்டார். அது அவரை எம்.பி. ஆக்கியது. இதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் புரட்சிகர தலித் வரலாறு. சிவத்தம்பி அவர்களே வீணாக வயசுப் போன காலத்திலாவது உங்கள் கழிசடை வரலாற்றுத் திரிபுகளையும் புரட்டல்களையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். தலித் விரோதிகளான தமிழ்த் தேசியவாதிகளின் வெட்கம் கெட்ட வரலாற்றிற்கு புரட்சிகர சாயம் பூச முயல வேண்டாம். இறக்கும் தறுவாயில் நீங்கள் "மாமனிதர்" பதவிக்கு படும்பாடு புரிகிறது. அதற்காக புலிகளின் சாதி வெறியை மறைத்து செல்லன் கந்தையன் மீதான பழிவாங்கலுக்கு சும்மா குப்பைக் காரணங்களைக் கொட்டுவது கொஞ்சமும் அழகல்ல.

பொது நூலகத் திறப்பு விழா தடுக்கப்பட்டது குறித்து Thenee.com என்கின்ற இணையத் தளத்தில் வெளியான மேலதிகத் தகவல்கள் வாசகர்களின் பயன் கருதி

**பொது நூலகம் திறப்பு விழாவை தடுத்தது வரலாற்றுத் தவறு**

*யாழ்ப்பாண சமூக அமைப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் பெருமையை பெறும் சந்தர்ப்பத்தை பறிப்பது மனச்சாட்சி உள்ள எந்த ஒரு மனிதனாலும் ஏற்றுக் கொள்ள முடியாது.*

- ஆனந்த சங்கரி

பொது நூலகம் திறப்பு விழாவை புலிகள் தடுத்து நிறுத்தியதைத் தொடர்ந்து யாழ் மேயர் செ. கந்தையன் உட்பட உறுப்பினர்கள் பதவி துறந்ததையடுத்து கூட்டணித் தலைவர் வீ. ஆனந்த சங்கரி வெளியிட்ட அறிக்கை.

யாழ்ப்பாணம் பொது நூல் நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டு இன்றைய தினம் (14.02.2003) வைபவ ரீதியாக அங்குராப்பணம் செய்து பொதுமக்களுக்கு அர்ப்பணிப்பு செய்யப்படவிருந்தது அனைவரும் அறிந்த விடயமே.

1981-ஆம் ஆண்டு தீக்கிரையாக்கப்பட்ட இந்நூல் நிலையம் கடந்த 20 ஆண்டு காலத்தில் ஏற்கனவே புனரமைப்பு செய்யப்பட்டு மக்களுக்கு அர்ப்பணிப்பு செய்யப்பட்டு இருந்தால் கடந்த சில ஆண்டுகளாக உயர் வகுப்பு மாணவர்கள் ஒரு தக்க சூழலில் தங்கள் கல்வியையும், ஆய்வுகளையும் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். தற்போது இதற்குப் பதிலாக இயங்கிக் கொண்டு இருக்கும் நூல்நிலையத்தில் அதற்கான வாய்ப்புக்களும் வசதிகளும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போதியளவு இருக்கவில்லை. இதன் விளைவால் அண்மைக் காலத்தில் பல்கலைக்கழக அனுமதியில் மாவட்ட அடிப்படையிலான ஒதுக்கப்பட்ட இடங்களைக்கூட நிரப்புவதற்கு மாணவர்களால் உரிய புள்ளிகளைப் பெற முடியவில்லை. ஆனால், இதே தமிழ் மாணவர்கள்தான் ஒரு காலத்தில் உச்சப் புள்ளிகளைப் பெற்று உலகத்திற்கு முன்மாதிரியாக இருந்தார்கள் என்பதை நினைக்கும் போது இப்போதுள்ள நிலைமையை எண்ணி என் மனம் வேதனை அடைகின்றது. எத்தனையோ மாணவர்களின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கக்கூடியதாக புனரமைக்கப்பட்ட நூல்நிலையம் 99 சதவீத கட்டட வேலைகள் பூர்த்தியாகி இருந்தும் தொடர்ந்தும் திறக்கப்படாமல் இருப்பது யாழ் மாணவர்களுக்கு செய்யும் துரோகமாகும்.

பல ஆண்டுகளாக ஆசிரியராகக் கடமையாற்றியவன் என்ற காரணத்தினாலும் நூல் நிலையத்தில் மட்டுமே படித்து சட்டக் கல்லூரியில் தேர்ச்சி பெற்றவன் என்ற காரணத்தினாலும் நூல் நிலையத்தின் தேவையை நன்கு உணர்ந்தவன் நான்.

இந்த நூல் நிலையம் திறக்கக்கூடாது என்று ஆர்ப்பாட்டம் செய்பவர்களில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தை மன்னிக்கலாம். ஆனால், மாணவர்களுக்கு அறிவூட்டுவதையே கடமையாகக் கொண்ட ஆசிரியசங்கம் இதை ஆட்சேபிப்பது மிகவும் வேதனையான விடயமாகும். அடிப்படை வசதிகள் இல்லாத காலத்தில் வன்னிப் பகுதியில் ஆசிரியராகக் கடமையாற்றியவன் நான். குறிப்பாக உயர்வகுப்பு மாணவர்களின் தேவையை அறிந்தே பல நூல் நிலையங்களையும் பல பாடசாலைகளையும் கட்டி, தரமுயர்த்தி, தனி மாவட்டத்தை உருவாக்கி கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து முதன் முதலாக மாணவர்களைப் பல்கலைக்கழகத்துக்கு போகவைத்தவன் என்பதையும் பல்கலைக்கழக மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் இப்போதும் மரநிழல்களிலும், தரையிலும் இருந்து கல்வி கற்கின்ற மாணவச் செல்வங்களின் அவலங்களை நேரில் கண்டுவந்த வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினர் இன்று ஓர் அடுக்குமாடிக்கு லிப்ட் வசதியும் குளிரூட்டி வசதியும் சிற்றுண்டிச்சாலை வசதியும் இல்லாமல் நூல் நிலையத்தைத் திறக்கலாமா? என்று கேட்பது சரிதானா? இதற்கு ஒரு போராட்டம் அவசியந்தானா?

குப்பி விளக்கிலும் கொட்டில்களிலும் தங்கள் கல்வியைக் கற்று உச்சப் பதவியை வகித்தது எமது தமிழ் சமூகம் என்பதை உலகம் பாராட்டுவதை இவர்கள் உணர வேண்டும். இவற்றுடன் "யாழ்ப்பாண சமூக அமைப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு சமூகத்தைச் சேர்ந்த ஒருவர், இந்த மாநகர சபை ஆயுட்காலம் முடியும் வேளையில் உலகமே மதிக்கத்தக்க ஒரு செயலை பூர்த்தி செய்து அதன் பெருமையை பெறும் சந்தர்ப்பத்தை பறிப்பது மனச்சாட்சி உள்ள எந்த ஒரு மனிதனாலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மாநகர சபையின் வளர்ச்சிக்கு மாநகர முதல்வர் செ. கந்தையன் செய்த சேவையை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது. இந்தப் பெருமையை பெறவிடாது செல்லன் கந்தையன் அவர்களைத் தடுக்கும் வரலாற்று தவறு என்றாவது ஒருநாள் இவர்களை உணர வைக்கும்".

நூல் நிலையத்தை திறப்பதற்கு நான் வலிந்து கேட்டவனுமல்ல, எதிர்பார்த்தவனுமல்ல. கடந்த காலங்களில் அரசியலில் மிகவும் வன்மையாக என்னால் விமர்சிக்கப்பட்ட மூன்று அரசியல் கட்சிகளின் 14 பிரதிநிதிகளுடன் எமது கட்சி உறுப்பினர் ஒன்பது பேர் சேர்ந்தே ஏகமனதாக நான் நூல் நிலையத்தை திறக்க வேண்டுமென தீர்மானம் எடுத்தனரே அன்றி நான் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவன் என்பதால் அல்ல என்பதைப் புரிய வேண்டியவர்கள் புரிந்து கொண்டால் சரி.

வெறும் மடு போன்ற விடயத்தை பெரிய மலையாக்கி அர்த்தமில்லாத – ஏற்றுக் கொள்ள முடியாத – காரணங்களைச் சொல்லி, இந்நிகழ்வை அரசின் சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் ஏற்பட்டுவிடும் என்று சர்வதேசமயப்படுத்தி தடுப்பதால் ஓர் இரத்தக்களரி உருவாக நான் காரணமாக இருக்க விரும்பவில்லை என்பதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாநகரசபை முதல்வர் செ.கந்தையனுக்கும் மாநகர சபை உறுப்பினர்களுக்கும் தெளிவுபடுத்தி இந்நிகழ்வின் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்கள் இந்நிகழ்வினை இரத்துச் செய்வதெனத் தீர்மானித்துள்ளனர்.

எனது கோரிக்கையை மறுபரிசீலனை செய்து சூழ்நிலைக்கு ஏற்றவாறு முடிவு எடுத்து நிகழ்வை இரத்துச் செய்த மாநகர சபை முதல்வருக்கும், கௌரவ உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பொது நூலகம் திறப்பு விழாவை புலிகள் தடுத்து நிறுத்தினர்**

யாழ் மேயர் உட்பட 23 கவுன்சிலர்கள் இராஜினாமா

பலத்த சர்ச்சைகளுக்குள்ளாகி, நாளை 14.02.2003 நடைபெற இருந்த யாழ் பொது நூல் நிலைய திறப்பு விழா புலிகளின் எதிர்ப்பையடுத்து கைவிடப்பட்டது. இதனையடுத்து யாழ் மேயர் செல்லன் கந்தையன் உட்பட மாநகர சபையின் உறுப்பினர்கள் 23 பேர் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளனர்.

யாழ் மாநகர சபை மொத்தம் 23 உறுப்பினர்களைக் கொண்டது. (TULF - 09, EPDP-06, PLOTE - 06, EPRLF-02), இவர்கள் அனைவரும் ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள், கடந்தவாரம் சபையில் கட்சிபேதமின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி TULF தலைவர் திரு.வீ. ஆனந்தசங்கரி இந்நூலகத்தைத் திறந்து வைப்பதாக இருந்தது. நூலகத்தின் 99% வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததாக கட்டட நிர்மாண பொறியியலாளர் (Construction Engineer) அறிக்கை சமர்ப்பித்திருந்தார். வேலைகள் பூரணப்படுத்தப்படவில்லை எனக்கூறி விழாவை ஒத்தி வைக்க வேண்டும் என புலிகள் நிர்ப்பந்தப்படுத்தியதால் தான் பதவி விலகுவதாக யாழ் மேயர் செல்லன் கந்தையன் பிபிசி தமிழோசைக்கு தெரிவித்துள்ளார்.

யாழ் மாநகர சபை பதவிக்காலம் எதிர்வரும் 17.02.2003 உடன் முடிவடைவது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மாநகர சபையின் காவலாளியைக் கட்டிவைத்துவிட்டு யாழ்ப்பாண பொது நூலகத்தின் சாவிக்கொத்து உட்பட சில பெறுமதியான பொருட்கள் நேற்றிரவு அபகரிக்கப்பட்டுள்ளது. புலிகளே இதனைச் செய்துள்ளதாக அறியப்படுகிறது. வன்னிப் பிரதேசத்திலிருந்து அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்தவரான புலிகளின் பிரமுகர் சொலமன். சூ. சிறில் மற்றும் புலிகளின் முன்னணி அமைப்பான சர்வதேச மாணவர் பேரவையின் தலைவர் எனப்படும் கஜேந்திரன் ஆகியோர் நேற்று யாழ்ப்பாண மாநகர அலுவலகத்திற்கு சென்று மாநகர முதல்வர் செல்லன் கந்தையனுடன் எச்சரிக்கும் தொனியில் பேசியிருந்தது தெரிந்ததே. யாழ் பொது நூலகம் நாளை திறக்கப்படக்கூடாது என்பதே இவர்களது பேச்சுவார்த்தையின் கருப்பொருளாக இருந்தது. இதே வேளை இன்று நண்பகலளவில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கமும் தமது பரிவாரங்களுடன் சென்று பொது நூலகத்தைத் திறக்க வேண்டாமென யாழ் மேயரை மிரட்டியுள்ளார்.

**மேயரும் உறுப்பினர்களும் ராஜினாமா**

**பொது நூலகத் திறப்பு விழா ரத்து**

**இன்றைய ஹர்த்தால், மறியல் போராட்டங்கள் கைவிடப்பட்டன**

யாழ் – பொது நூலகத்தை திறப்பது தொடர்பாக உருவாகிய சர்ச்சை நேற்று உச்சக்கட்டத்தை அடைந்தது. யாழ்.மாநகர முதல்வர் செல்லன் கந்தையனும் ஏனைய உறுப்பினர்கள் 7 பேரும் தங்கள் பதவிகளை திடீரென ராஜினாமாச் செய்தனர். இதனால் இன்று நடைபெறவிருந்த நூலகத் திறப்பு விழா ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. திறப்பு விழாவை ஆட்சேபித்து நடத்தப்படவிருந்த ஹர்த்தால் மற்றும் மறியல் போராட்டங்களும் கைவிடப்பட்டிருக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ் மாநகர சபை ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று மாலை கூட்டப்பட்ட செய்தியாளர் கூட்டத்தில் தங்களின் ராஜினாமா முடிவை முதல்வர் கந்தையனும், உறுப்பினர்களும் அறிவித்தனர்.

விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி மற்றும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர், பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினர் கேட்டுக் கொண்டதற்கு அமைய நூலகத் திறப்பு விழாவை கைவிடுவதாக முதல்வர் செல்லன் கந்தையன் தெரிவித்தார்.

நூலகத்தை திறக்கவிடாமல் தடுத்த செயல் ஜனநாயக மறுப்பு என்று மாநகர சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மேயரும் 7 உறுப்பினர்களும் கையெழுத்திட்டு விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: மக்களால் தெரிவு செய்யப்பட்ட நான்கு ஜனநாயக கட்சிகளின் உறுப்பினர்களைக் கொண்ட யாழ்.மாநகர சபை ஏகமனதாக தீர்மானங்களின் மூலம் செயல்பட்டு வந்தது. மாநகராட்சியின் அதிகாரத்துக்கு கீழ் வரும் நூல் நிலையத்தை திறப்பது பற்றி பல்வேறு விவாதங்கள், மக்கள் அபிப்பிராயங்கள் என்பவற்றின் அடிப்படையில் நாளைய தினம் அதனைத் திறந்து வைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. நூல் நிலையத்தின் புனரமைப்பிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட 120 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி சந்திரிகாவின் நிதியிலிருந்தும் தற்போதைய அரசின் புனர்வாழ்வு, புனரமைப்பு நிதியிலிருந்தும் முழுமையாகப் பெற்று கட்டட வேலை கிட்டத்தட்ட முழுமையடையும் நிலையில் உள்ளது.

ஷிலிப்ற், கன்ரின் போன்ற அமைப்பு வேலைகளுக்காக 21 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டு, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சிடம் கோரிக்கை விடப்பட்டு, அதற்குரிய நிதியைத் தருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. திறப்பு விழா ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இத்தருணத்தில் ஒன்றியங்கள் மூலமும், பத்திரிக்கைகள் மூலமும் தவறான தகவல்கள் வெளியிடப்பட்டன. யாழ் நூல் நிலையத்தின் திறப்புக்கள் அபகரிக்கப்பட்டன. ஊழியர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள், நகர பிதா, உறுப்பினர்கள்கூட கடுமையான அச்சுறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

மக்களுக்கு அவசியமான இந்த நூல்நிலையத்தை திறப்பதில் தமிழீழ அரசியல் பிரிவு இவ்வாறு தீவிரமாக செயல்படுவது துரதிஷ்டவசமானது ஆகும். அறிவுக் கருவூலமான நூல் நிலையத்தை திறப்பதற்கு மக்கள் அமைப்புக்கள் என்று கூறிக்கொள்பவர்கள் நடந்து கொண்ட முறையை யிட்டு நாங்கள் வேதனையடைகிறோம்.

ஜனநாயக நிறுவனமான மாநகராட்சி தன்னுடைய பராமரிப்பில் உள்ள நூல்நிலையத்தை திறப்பதற்கு முடியாத சூழ்நிலையில் உறுப்பினர்களாகத் தொடர்ந்தும் இருப்பதற்கு எந்த உறுப்பினரும் விரும்பவில்லை. குடா நாட்டில் உள்ள ஜனநாயக சூழ்நிலை இப்படித்தான் இருக்கிறது. இந்த நாடும், சர்வதேசமும் இதனை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்த ஜனநாயக மறுப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து உறுப்பினர்களாகிய நாங்கள் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்து கொள்கிறோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபை முதல்வரும் ஏனைய உறுப்பினர்களும் ராஜினாமாச் செய்ததை அடுத்து இன்று ஏற்பாடாகியிருந்த நூலகத் திறப்பு விழா இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றது.

நூலகத்தை திறப்பதை எதிர்த்து பொது அமைப்புக்களின் ஒன்றியம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை ஆகியவற்றினால் இன்று பொது நூலகம் முன்பாக நடத்தப்படவிருந்த மறியல் போராட்டமும்-மாநகர சபைப் பிரதேசத்தில் இடம்பெறவிருந்த கடையடைப்பும் கைவிடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ்மாநகர சபை நிர்வாகத்தின் பதவிக்காலம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் காலாவதியாகவிருந்தது. அதற்கு இரண்டு தினங்கள் முன்பாக முதல்வரும் உறுப்பினர்களும் பதவி துறந்திருக்கின்றனர்.

யாழ்.மாநகர சபையின் 24ஆவது முதல்வரான செல்லன் கந்தையன் கடந்த ஆண்டு ஜனவரி 16-ஆம் திகதி பதவியேற்றிருந்தார்.

மேயரினதும் உறுப்பினர்களிதும் பதவி விலகல் கடிதங்கள் இன்று யாழ்.தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அனுப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாநகர சபையின் நிர்வாகம் விசேட ஆணையாளரின் கீழ் கொண்டு வரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாநகர சபை முதல்வர் எச்சரிக்கப்பட்டார்.

யாழ் நூலகம் திட்டமிட்டபடி திறக்கப்படக்கூடாது. மீறினால் பாரியவிளைவுகளையும் உயிராபத்தையும் சந்திக்க வேண்டிவரும் என புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் நேற்று மாலை மாநகரசபை முதல்வரிடம் எச்சரித்துள்ளார்.

**யாழ் கண்காணிப்புக் குழு தலைவரிடம் மாநகர சபை உறுப்பினர்கள் முறைப்பாடு**

தமது மாநகர சபை உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்த உறுப்பினர்கள் தமது உயிருக்கு பாதுகாப்பில்லை, ஜனநாயக வழியில் செயற்பட முடியாமலுள்ளது என முதல்வர் செ. கந்தையன் தலைமையில் யாழ் கண்காணிப்புக்குழு தலைவரிடம் முறைப்பாடு செய்த பின்னர் யாழ் மாவட்ட பொலிஸ் அத்தியகட்சரிடமும் தமது பாதுகாப்புக் குறித்து முறைப்பாடு செய்துள்ளனர்.

**யாழ் மாநகர சபை உறுப்பினர்கள் அனைவரும் இராஜினாமா**

யாழ் பொது நூலக திறப்பு விழாவை நடத்த முடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. பொது அமைப்புகள் எனும் கோதாவில் விடுவிக்கப்பட்டு வரும் அச்சுறுத்தல்களின் மத்தியில் நாங்கள் சுதந்திரமாக ஜனநாயக வழியில் செயற்பட முடியாதுள்ளதென்பதை மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக எங்கள் பதவிகளை இராஜினாமா செய்கின்றோம் என யாழ் மாநகர சபை உறுப்பினர்கள் அனைவரும் அறிவித்துள்ளனர். கட்சி பேதமின்றி கூட்டணி, புளொட், ஈ.பி.டி.பி,. ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த அனைத்து மாநகர சபை உறுப்பினர்களும் இன்று மாலை இராஜினாமா செய்துள்ளார்கள். யாழ் பொது நூலகம் நாளை மீள திறக்கப்படவிருந்தது. ஆனால் புலிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். அதனையும் மீறி நாளை திறப்பதென மாநகர சபை தீர்மானித்துள்ளதாக யாழ் மேயர் செ. கந்தையன் முன்னர் அறிவித்திருந்தார். இதனால் தற்போது முளைவிட்டுள்ள சில பொது அமைப்புகளி(புலிகளின் பினாமிகளான)ன் பெயரால் நூலக திறப்புவிழாவிற்கு எதிர்ப்பும் அச்சுறுத்தலும் விடுவிக்கப்பட்டிருப்பதால நூலகம் நாளை திறக்கப்பட முடியாமலுள்ளதாக மேயர் இன்று மாலை அறிவித்துள்ளார்.

**யாழ் பல்கலைக்கழக மாணவர் வேதனை**

'நூலகத்தின் தேவையும் பெறுமதியும் அதனை பயன்படுத்துவோராலேயே உணர்ந்து கொள்ளப்படக்கூடியது பெயர்ப் பலகையில் பெயர் பதிக்க விரும்பும் பிரகிருதிகளினால் அல்ல' என யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒருவர் வேதனையுடன் தெரிவித்தார். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## "கொரில்லா"

# உள்ளும் புறமும்...

### - ஒரு குறிப்பு

ஷோபாசக்தியின் கொரில்லா நாவலிற்கான அடையாளத்தினை முன்னுரையில் சாதிக் கொடுக்கும் போது இந்த எதிர்பார்ப்பை தந்து நாவலுக்குள் அனுப்புகிறார். ஊத்தையர்களோடு ஊத்தையர்களாக... விளிம்புநிலை வாழ்வை வரித்துக் கொண்ட... என்றெல்லாம் அடையாளம் ஷோபாசக்தியை அறிமுகம் செய்கிறது. பொருளாதார ரீதியிலும் வசதிவாய்ப்புகளிலும் ஏன் வேலை இல்லாதவனுக்கும் சமூகநலன் உதவியும் சமூக உத்தரவாதமும் இருக்கும் ஒரு நாட்டில் ஊத்தையனாக இருந்து தன்னை விளிம்புநிலை மனிதனாக காட்டவேண்டிய தேவை இருப்பதாக தெரியவில்லை.

சமூக அனுபவம் என்ற பெரும் பிரிவுக குள்ளிருந்து இயக்க அனுபவம் என்ற பகுதிக்குள் நாவல் இழுத்துச் செல்கிறது. அதனால் இயக்க அனுபவம் வாய்க்கப் பெற்றவர்களிடம் இந்த நாவல் இன்னும் அதீதமாகப் பேசத்தான் செய்கிறது. அதற்குக் காரணம் ஆழ்மனதில் உறைந்து போயிருக்கும் இயக்க அனுபவங்கள் அதன் பேசப்படாத பக்கங்களையும் புரட்டுவதில் கொரில்லா ஒரு காவியாகச் செயற்படுகிறது. புதியதோர் உலகம் நாவலுக்குப்பின் செழியனின் நாட்குறிப்புகள் ஊடாக... இந்தத் தளத்தில் இயங்கிய இன்னொரு நாவலாக கொரில்லா இருப்பது அதீதமாகப் பேசப்படுவதற்கான ஒரு காரணம் என நினைக்கிறேன். சாதாரண ஆதரவாளனிலிருந்து இயக்கத்தின் மத்தியகுழு வரையிலுமுள்ள போராளிகளின் பல அனுபவங்கள் நாவலாக இதுவரை பதிவுசெய்யப்படவில்லை என்று கூறலாம். இந்த நீண்ட இடைவெளியுள் கொரில்லா இப்போ வந்திருப்பது கொரில்லாவை பேசுபொருளாக்கியிருக்கி றது.

ஒரே மூச்சில் அதன் முதல் பாகம் எழுதப்பட்டதுபோன்று வேகம் பெறுகிறது. அதற்கு ஷோபாசக்தியின் எழுத்துமுறையும் ஒரு காரணம். ஏற்கனவே அவரின் சிறுகதைகளில் இவ்வகை மொழிக் கையாள்கை வரப்பெற்றிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனாலும் கொரில்லா சமூகத் தளத்துள் விரிவடையாமல் போயிருக்கிறது என்றே சொல்லத் தோன்றுகிறது. இயக்க அனுபவச் செறிவும் நாவலில் இல்லை. இயக்கத்தில் பெயர் கொடுக்கும் நாளிலிருந்து இயக்கத்தில் ஊடாடும் இறுதிநாள் வரை அனுபவம் இன்னொரு உலகத்தில் விட்டிருக்கும். இதில் சுய அனுபவம் துளியாய்க் கரைவது. கொரில்லாவில் சுய அனுபவங்களினூடே -அதாவது தன்னைச் சுற்றியே- கதைசொல்லி பயணிக்கிறார். ஆனாலும் இது நாவலின் குறை பாடல்ல. நாவலின் செறிவைக் குறைத்திருந்தாலும் அற்புதமான நாவலாக வரையப்பட்டிருப்பது இலக்கியத் தளத்தில் கிடைத்த வெற்றிதான்.

கடற்கரையின் மண்அரிப்பைத் தடை செய்யும் நோக்கோடு தடைசெய்யப்பட்ட இடத்தில் மண்ணேற்றிய லொறிமீதான இழுபறியினை நாவல் ஒரு வேகத்தோடு சொல்கிறது. இது இயக்கத்துக்கு வேண்டியவர்கள் எடுத்துக்கொள்ளும் சலுகையை அழகாகவே படம்பிடித்துக் காட்டுகிறது. அதேபோல் ஊர்ச்சண்டியனாக இருந்த கொரில்லாவை எதிர்கொண்டதில் உள்ள இயக்க உள்பலவீனம் வெளிச்சம்போட்டுக் காட்டப்படுகிறது. இது ஊர்ச்சண்டியர்கள் விடயத்தில் மட்டுமல்ல தாக்குதல் சம்பவங்களின்போதும்கூட களத்தில் நடந்த பலவீனமான சம்பவங்கள் மறைக்கப்பட்டு வெளியில் (சனத்திடம்) சாகசமாக காட்டப்பட்டன. இவை உள்ளுக்குள் சொல்லிச்சொல்லி சிரிக்கும் சம்பவங்களாக போராளிகளுக்குள் உலவின. உதாரணமாக மட்டக்களப்பு சிறையுடைப்பை செய்த ஒரு போராளி சொன்னார்...கடவுள் செயலாலை தப்பினம்; சரியான பிளான் எதுவும் எம்மிடம்

**-ரவி- (சுவிஸ்)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கவில்லை; ஒரு குளறுபடியாக நடந்துமுடிந்தது என்று. ஆனால் வெளியில் அசலான ஒரு தாக்குதலாக சாகசப்படுத்தப்பட்டது.

கொரில்லாவின் சண்டித்தனக் கலாச்சார சூழலினுள் வாழ்ந்த அல்லது அதை எதிர்கொண்ட ரொக்கிராஜ் புலிகளின் விசுவாசமிக்க போராளியாக உருவெடுக்கிறான். தலைமை-மெயின்-குஞ்சன்வயல் என்ற பாதையினூடு போவதும் வருவதுமாக இருக்கும் நாவல் பின்னர் குஞ்சன்வயல்-கொழும்பு-வெளிநாடு என பயணித்துப் போகிறது. இயக்க அனுபவம் என்பது விரிந்தது. இயக்கத்துள் நிலவிய நிலையும் இயக்கம் பற்றி வெளியில் நிலவிய நிலையும் பல விதங்களில் முரண்பட்டு நின்றது என்பது காலம் தாழ்த்திக் கிடைத்த வரலாற்றுச் செய்திகள். இயக்க இரகசியம் என்ற மூடிமறைப்புகள்கூட காலப்போக்கில் கசிந்து முகாம்களுக்குள் வருவதும் சகல மட்டத்திலும் கால்கைமுளைத்தும்கூட பரவுவதும் ஏமாற்றமளிக்கும் ஜனநாயகசூழலும் உட்கொலைகளும் உளவியல்தாக்கங்களும்... என்றெல்லாம் ஒரு போராளியின் அனுபவம் விரிந்துசெல்லும். செய்திகள் காவப்படும். ஆனால் ரொக்கிராஜ் தனது சொந்த அனுபவங்களுக்குள் மட்டும் நாவலுள் உலாவுகிறார். ஏதோ தனிப்பட்டவர்கள் இயக்கத்துள் தமது அதிகாரத்தை தவறாகப் பாவித்தார்கள் என்பதுபோல் நாவலின் சாராம்சம் அமைந்துவிடுகிறது. இது இயக்கத்தின் போக்கை மூடுண்டதாக்கி ஒரு தற்காப்புநிலை எடுக்கும் முயற்சியோ என்று எண்ணத் தோன்றுகிறது.

பக்கம் 54 இலிருந்து பக் 56 வரையான நாவலின் நடுப்பகுதியில் உதயமாகிற போராளிகளில் ஒருவனாக இந்த நாவலின் ரொக்கிராஜும் இருக்கிறான். அவன் புலிகள் இயக்கத்தின் ஒரு விசுவாசப் போராளியாக -தலைவர் சத்தியமாக...என குரலெடுக்கும் போராளியாக- பரிணமிக்கிறான். மற்றைய இயக்கங்கள் புளொட் ஈரோஸ் ரெலோ ஈபிஆர்எல்எப் ரெனா... என ஒரு தட்டுதட்டிவிட்டுப் போகிறார் நாவலாசிரியர். விசுவாசிகளை உருவாக்கல் ஆட்சேர்ப்பை முக்கியப்படுத்தல் இந்திய அரசின் கரங்களுக்குள் சுகம்கொள்ள முனைதல்..என்பதற்கு எந்த இயக்கம் தப்பிக்கொண்டது. இலங்கை இராணுவத்தால் பாதிக்கப்பட்ட வெறியாலும் மாணவ பருவத்து துடிப்பாலும்... என்றெல்லாம் இயக்கங்களுக்கு போனவர்களும் ஏராளம்தான். இருந்தாலும் இவற்றிற்கும் அப்பால் சமூக நேசிப்பில் போராளியாகிப் போனவர்களை நாம் இருட்டடிப்புச் செய்யமுடியாது. போராட்டத்தின் வித்துக்களாகிப் போனவர்களே இவ்வகைப்பட்ட போராளிகள்தான். இன்று புலிகளின் மாவீரர்கள் என்ற பிரமாண்டத்தின் பின்னால் இவ்வகைப் போராளிகள் எல்லாம் இருட்டடிப்புச் செய்யப்படுவதுபோல் இந்த நாவலும் ஒரு விசுவாசப் பங்கை ஆற்றுகிறதா என்ற கேள்வி தவிர்க்கமுடியாமல் எழுகிறது. ஆனாலும் இந்த 54-56 வரையான பக்கங்கள் எழுதப்படவேண்டிய பல நாவல்களின் களனாக உள்ளதை கோடிட்டுச் செல்வதாகக் கொள்ளலாம்.

புலிகளினால் குருரிக்கப்பட்ட மாற்று இயக்கப் படுகொலைகள் ரயர் போட்டு எரிக்கப்பட்ட ஒரு சம்பவத்தோடு மட்டும் கடந்துசெல்லப்படுகிறது கொரில்லாவில். எந்தவித வரலாற்று அதிர்வுமின்றி வாசகனை அனுப்புகிறது. இந்த காலகட்டத்தில் மாற்று இயக்க போராளிகளை உயிருடன் ரயர் போட்டு எரித்து மனித விழுமியத்தையே பொசுக்கியது புலிகள் இயக்கம். அதுமட்டுமல்ல இதை செய்ய மறுத்த தனது இயக்க போராளிகளுக்கும் தண்டனை வழங்கியது. இந்தக் காலகட்டத்தில் ஷோபாசக்தி இயக்கத்தில் இருந்தார். புலம்பெயர்ந்தபின் அதிகாரங்கள் செயற்படும் நுண்களங்கள் பற்றியெல்லாம் பேசும் அவர் இதுபற்றிய சுயவிமர் சனத்தினை இடைவெளியாகவே விட்டுவைத்திருந் தார். கொரில்லாவில்கூட இயக்க விசுவாசம் இதை ஜீரணிக்கவைத்தது என்றளவில்கூட சொல்லாமலே சென்றது ஒன்றும் தற்செயலானதாகப் படவில்லை. அதுவும் தலித் சமூகத்திலிருந்து ஒப்பீட்டு ரீதியில் கணிசமானோரை உள்வாங்கியிருந்த ஈபிஆர்எல்எப் இயக்கப் போராளிகள் மீதான தலித் உணர்வை யாவது தலித்தியத்துக்கு குரல்கொடுக்கும் ஷோபாசக்தியிடமிருந்து கொரில்லா விட்டுவைக்காதது வேடிக்கையானதுதான்.

புனைவும் உண்மையும் கலந்து எழுதுவது தவறா சரியா என்றெல்லாம் விவாதங்கள் தொடர்கின்றன. அடிக்குறிப்புகளோடு உண்மைத் தகவல்களைக் கொடுத்து புனைவுகளையும் குழைத்துவிடும்போது புனைவுகளே உண்மை களாகவும் தோற்றம்பெற்றுவிடுகின்றன. வசதிக்கேற்ப உண்மைகளை புனைவுகளாக்கி தப்பித்துக் கொள்ளவும் அல்லது புனைவுகளை உண்மைகளாக்கி தனக்கு சாதகப்படுத்திக் கொள்ளவும் ஒருசிறு தயார்நிலை உருவாக்கப் படுகிறது. சபாலிங்கத்தை புலிகள் கொலைசெய்தது பற்றிய அடிக்குறிப்பை கொரில்லா தொலைத்துவிட்டது. அந்த நிகழ்தல் எந்தவித அதிர்வையும் ஏற்படுத்தாதவாறு விவரிக்கப்படுகிறது. பாரிஸ் பொலிஸ் கைதுசெய்தது சம்பந்தமான நிகழ்தல் ஏற்படுத்தும் பாதிப்பைக்கூட சபாலிங்கம் கொலையை கொரில்லா ஏற்படுத்தவில்லை. அதை இன்னும் இலேசுபடுத்தும் விதத்தில் சபாலிங்கத்தின் சமூக அக்கறையுள்ள அவரின் வேலைகளின் பக்கங்களும் எழுத்தின்மீதான அவரின் கரிசனையும் ஜனநாயகத்தின்மீதான அவரின் வேட்கையும் மறைக்கப்படுகின்றன. அரசியல்தஞ்சக் கோரிக் கைக்கான கேஸ் எழுதுபவராக குறுக்கப்பட்டுவிட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொரில்லா இயங்கும் தளம் என்று வருகிறபோது, புதியதோர் உலகம் நாவல் எடுத்தாளப்படுவது தவிர்க்க முடியாமல் ஆகிறது. ஈழப்போராட்டத்தின் குறிப்பிடத்தக்க நாவலாக - எண்பதுகளின் நடுப்பகுதியில்- இயக்கங்களின் உள்விவகாரங்களை சமூகத்துள் உதறிப்போட்டு அதிர்வை ஏற்படுத்திய நாவலாக புதியதோர் உலகம் அமைந்தது. (இந்த நாவலின் இரண்டாம் பதிப்பு 1996 இல் விடியல் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது) புதியதோர் உலகம் நாவல் இயக்கங்கள் சம்பந்தமாக மக்கள் மத்தியில் நிலவிவந்த மாயையை உடைத்தெறிவதில் மிக முக்கியமான பங்காற்றியது. (இந் நாவலை வெளிப்படையாக விநியோகிக்க முடியாத அளவுக்கு புளொட் இன் கண்காணிப்பு இருந்தது. இரவோடு இரவாக -பிரசுரங்கள் விநியோகிப்பதுபோல- வாசிகசாலைகள், புளொட் இல் இணைந்த போராளிகளின் வீடுகள் தோறும் வேலிக்குமேலால் இரகசியமாக வீசப்பட்டன.) தீப்பொறி குழுவினர் மக்கள் மத்தியில் வருவதற்கும் புளொட் அம்பலமாகிப் போனதிற்கும் மற்றை இயக்கங்களின்மீதான கேள்விகளை மக்களிடம் எழுப்பியதிலும் இந் நாவல் கணிசமான பங்கை ஆற்றியது. இதன்மூலம் புதியதோர் உலகம் இலக்கியத் தளத்தில் மட்டுமல்ல அரசியல் தளத்தில் இயங்கிய ஒரு காத்திரமான நாவலாக வெளிவந்தது. கொரில்லா இந்த இரண்டு தளங்களிலும் இயங்கும் ஒரு நாவலல்ல. அப்படி இயங்க வேண்டும் என்பதுமல்ல.

அதேபோல் கொரில்லா நாவலின் ரொக்கிராஜ்க்கும் சந்ததியாரினால் எழுதப்பட்ட வங்கம் தந்த பாடம் படிக்க கிடைத்த சந்தர்ப்பம் புதியதோர் உலகம் நாவலை படிக்க கிடைக்காமல் போனதோ என்னவோ தெரியவில்லை. அதைப்பற்றிய பதிவு எதுவுமே நாவலில் காணப்படவில்லை. அதேபோல் அந்த நாவலினை எழுதிய கோவிந்தன் 80 களின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வீடொன்றில் வைத்து புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டு பின்னர் கொன்றொழிக்கப்பட்ட நிகழ்வுகள் எதுவும் ரொக்கிராஜ்க்கு தெரியாமல் போய்விட்டது அல்லது கேள்விகளை எழுப்பாமல் போய்விட்டது வேடிக்கையானதுதான். புளொட் இயக்கத்தை இந்திய அரசின் 'அரவணைப்பிலிருந்து' பெயர்த்தெடுக்க வங்கம் தந்த பாடத்தை புலிகள் வாங்கி விநியோகித்ததுபோலவே, புளொட் இன் அராஜகப் போக்கினை அம்பலப்படுத்திய புதியதோர் உலகம் நாவலும்கூட புலிகளால் பெருமளவில் விநியோகிக்கப்பட்டன. அது குஞ்சன்வயலை எட்டாமல் போய்விட்டதோ என்னவோ!

புனைவுகள் உண்மைகள் இரண்டும் கலந்து கொடுக்கப்படுவது பற்றிய விவாதம் கிளம்புவதற்கு கொரில்லாவும் ஒரு காரணம்தான். அடிக்குறிப்புகள் எல்லாம் ஒரு வரலாற்றுப் பதிவுகள் போல கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏகே47, எஸ்.எம்.ஜி.. என்று ஆயுதங்களின் பயரிங் ரேஞ்ச் கில்லிங் ரேஞ்ச் எல்லாம் தப்புத்தப்பாகக் கொடுக்கப்பட்டிருப்பதுபோல் அடிக்குறிப்புகளின் உண்மைத் தன்மை கேள்விக்கிடமானதுதான். இதை கண்டறிவது நாவலை இலக்கியத் தளத்தில் வைத்து விமர்சிப்பதற்கு அவசியமற்றன என்பதே என் கருத்து. அதேநேரம் நாவல் இயங்கிய காலப்பகுதியான புலிகள் இயக்கத்தை வேறு இயக்கங்கள் விஞ்சிவிடாத படியும், கொரில்லாவின் ரொக்கிராஜ் அல்லது அந்தோனிதாசன் பாத்திரத்தை தனிநபர்கள் (எந்தக் கதாபாத்திரமோ அல்லது வந்து போனவர்களோ) விஞ்சிவிடாதபடியும் கையாளப் பட்டிருக்கிறார்கள். அதற்கு இந்தப் புனைவும் உண்மையும் கலந்த கலவை நாவலாசிரியருக்கு உதவித்தானிருக்கிறது. குஞ்சன்வயலில் மட்டுமல்ல பிரான்சிலும் இது சாதிக்கப்பட்டிருப்பது தற்செயலானதாகப்படவில்லை. உதாரணமாக சபாலிங்கத்தின் இலக்கிய அரசியல் பாத்திரங்கள் மறைக்கப்பட்டு ஒரு அரசியல் தஞ்சக் கேஸ் எழுதும் நபராக குறுக்கப்பட்டிருப்பதைச் சொல்லலாம். நான்காம் அகிலத்தின் தோழரை அகதிக் கடத்தலில் சம்பந்தப்படுத்துகிறார்; அதேபோல் கலாமோகனும் (நாவலில் பெயர் குறிப்பிடப்படவில்லை) தப்பவில்லை.

புலம்பெயர் இலக்கியத்தில் தம்மைப் பரபரப்பாக்கிக் கொள்பவர்கள் மத்தியில் ஒரு காத்திரமான படைப்பாளியாக ஆர்ப்பாட்டமில்லாமல் இருப்பவர் கலாமோகன். பிரெஞ்சுப் பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியில் பெரும்பாலான இலங்கைத் தமிழர்கள் உண்மையான அரசியல் அகதிகளல்ல என்ற சர்ச்சையை எடுத்து அந்தோனிதாசன் மூலம் வாங்கு வாங்குகிறார் ஷோபாசக்தி. இந்த நாட்டவனிடம் நாம் முண்டியடிச்சு நியாயப்படுத்துவதுபோல் எமக்குள் இந்த அபிப்பிராயத்தை அல்லது கருத்தை இலகுவாக நியாயப்படுத்த முடியாத அளவுக்கு விவாதப் பொருளாகவே இது இருந்துவருகிறது. இந்த விவாதம் இங்கு அவசியமற்றது. நான் ஷோபாசக்தியிடமே செல்கிறேன். நிறப்பிரிகையின் கடைசி இலக்கிய இணைப்பில் புலம்பெயர் இலக்கியம் சம்பந்தமான பேட்டியில் அவர்... 1987 இல் இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தபின்னரான காலப்பகுதியில் போராளியொருவன் புலம்பெயருகிறான் (இது அவராகத்தான் இருக்குமென ஊகம்) அதன்பின்னரே உண்மையான அரசியல்அகதிகள் புலம் பெயர்கிறார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். இதுவும் அந்தோனிதாசனுக்கு முந்தி இடம்பெயர்ந்த உண்மையான அரசியல் அகதிகளிடம் எப்படி பேசியிருக்கும் என்பது இந்த விமர்சனத்தின் பின்னிணைப்பு. அதேபோல் ஈழத் தமிழ்மக்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிரான ஒரு ஆக்கிரமிப்பு இராணுவமாக இந்திய இராணுவம் செயற்பட்டது என்ற பொதுமையை உள்ளங்கையால் பொத்திக்கொண்டு, முதன்முதலில் தலித்துகளுக்கு எதிராக இந்திய இராணுவம் செயற்பட்டதாக தாக்குதலொன்றை உதாரணம் காட்டி (இது எத்தனை பேருக்குத் தெரியும் என்று வினா எழுப்பியிருந்தார் நிறப்பிரிகை இலக்கிய இணைப்பில்) அதையே பொதுமையாக்க முனைந்தார் ஒரு கண்டுபிடிப்பாளன் போன்று. இந்த அரசியல் அப்பாவித்தனமாவது (பெருமளவு தலித்துகள் இணைந்து போராடிய) ஈபிஆர்எல்எப் இயக்கத்தின் மீது புலிகள் நடத்திய தாக்குதலின்மீது செயற்படாமல்போனது வியப்பாக இருக்கிறது. அடிக்குறிப்பிலோ அல்லது நாவலின் புனைவிலோ ஷோபாசக்தியின் தலித்தியக் குரலாக இது பதியப்படாமலே போய்விட்டதானது அவரது தலித்தியக் குரலை கேள்விகேட்க வைக்கிறது.

எனக்கு ராஜீவ் காந்தி சுடப்பட்டாலும் சரி, பிரபாகரன் சுடப்பட்டாலும் சரி என்பதுபோன்று நாவலின் இடையில் ஒரு வசனம் வந்துபோகிறது. இது ஏதோ துணிகரமானது போன்றோ விருப்புவெறுப்புகளற்ற நேர்மையான குரல் போன்றோ தெரியலாம். ஆனால் புலிகளின் தலைமையை நாவல் எட்டிக்கூடப் பார்க்கவில்லை என்றானபோது நாவலின் போக்கு இந்த ஒற்றை வரியை அடித்துச் சென்றுவிடுகிறது. ஏதோ பொறுப்பாளர்களாக் இருந்தவர்களின் குறைபாடுபோல குறுக்கப்பட்ட பார்வையைத் தவிர நாவலில் ஆழமான அரசியல் பார்வை இல்லை. இதன்மூலம் தனக்கான ஒரு தற்காப்புநிலையை எடுத்திருப்பது ஒன்றும் தற்செயலானதாகப் படவில்லை. ஒரு நாவலை விமர்சிக்க இங்கு போகவேண்டிய அவசியமில்லை என்று கருதுபவர்கள் ஷோபாசக்தியை ஒரு 'செயற்பாட்டாளராக' பிம்பப்படுத்துவதை அழித்துக்கொள்கிறார்கள் என்பதே அர்த்தம். என்றளவில், இலக்கியப் படைப்பாளி ஷோபாசக்தியால் எழுதப்பட்ட கொரில்லா நாவல் -இலக்கியத் தளத்தில்- பேசப்படக்கூடிய ஒரு நாவல்தான் என்பதை -காலந்தாழ்த்திய இந்த விமர்சனமும்- மறுக்கவில்லை. ●

---

## ● பாலையின் புதிர் ●

எப்படி
எப்படியோ வாழ்வின்
இழிந்த கணங்களின் வழியே
தனிமை
தீவுற மிவிரும்
அன்பின் வெளிறிய வெம்மை
சாம்பல் படலம் எங்கும் சூழ
நள்ளிரவின் பேயிருள்
வாழ்தலின் தினத்தை பருகினபடி
கனத்த வெறுமைகள் முடுகின்றன
உயிர்ப்பின் சுவாசம் கனமுற
மேலும் இருத்தல் சுமையென
இருண்ட பாலை வெளியின்
பெரும் பரப்பில் திக்கற்ற நடை
குழறவும்
தமனனத்தின் பெரும்படலம்
காற்று அறைய அறைய
வெரு வெரு
தொலையின் அப்பால் அடிவானம்
தொட்டு மிவிரும் ஒரு
நீ யென தாரகை
ஒளிரவோ உதிரவோ வென
புதிர் மையாய் ●

● ஹவி ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

ஜீவசுதா




"ஏனப்பா கிடங்கு வெட்டுறீங்கள்"

சுவாமிநாதனுக்கு அடிவயிற்றிலிருந்து அலை திரண்டுவந்ததுபோல், கண்ணீர் திரண்ட கண்களை அடைத்துக்கொண்டது. ஆனாலும் மண்வெட்டி

"தொப்பு தொப"வென்று மண்ணுக்குள் இறங்கியது.

பதிலுக்காக காத்திராமல் அவரின் 4 வயது நிரம்பிய கடைசிகன் தனது ஆட்டுக்குட்டியுடன் விளையாட ஓடினான்.

சுவாமிநாதனின் மூத்தவன் க. பொ. த. உயர்தரத்தில் சித்தியெய்திவிட்டு பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருக்கிறான். நடுவில் இரண்டு பெண்களும் ஒரு வருட வித்தியாசத்தில் பிறந்தவர்கள்.

ஒருதி 10ம் ஆண்டும் மற்றவள் 9ம் ஆண்டும் கல்விகற்கிறார்கள். மனைவி இன்மை வறுமை தெரியாத அப்பிராணி. சுவாமிநாதன் கணித ஆசிரியர்.

அவருடைய நோக்கம் கல்வியில் முன்னேற வேண்டும், கல்வியால் முன்னேற்ற வேண்டும் என்பதே.

ஆனாலும் தேசிய விடுதலைப் போராட்டம் எழுச்சி பெற்ற

வேளை, அது விரலுக்கு மிஞ்சிய வீக்கமாக பெருத்தவேளை அஞ்சியவர்களில், ஒதுங்கிப் போனவர்களில் சுவாமிநாதனும் ஒருவர்.

அவருக்கு, மனைவியையோ, பிள்ளைகளையோ நிமிர்ந்து பார்க்கும் திராணியற்றவராய் ஏன் தன்னையே நிமிர்ந்து பார்க்க திராணியற்றவராய் கைகள் மண்ணைத் தோண்டிக்கொண்டிருந்தது. மூத்தவன், மண்மீண்டும் குழிக்குள் விழுந்துவிடாதபடி மண்ணை கைகலாலும், கால்களாலும் தள்ளிக்கொண்டிருந்தான்.

தனது கடைசி மகனை மட்டும் வாஞ்சையோடு ஓரக்கண்ணால் பார்த்தார். அவன் ஆட்டுக் குட்டிக்கு பிலாவிலை எடுத்துக்கொடுத்து தின்னும்படி கட்டாயப்படுத்திக் கொண்டிருந்தான்.

சுவாமிநாதன் தனது இறுதித் தருவாயிலும் சின்னவனின் உலகத்திலேயே சஞ்சரிக்க விரும்பினார். மனைவியின் விசும்பலுடன், பெண் பிள்ளைகளின் கண்ணீரும் அவர் கண்களுக்கு முன்னால் நின்று கொண்டன.

பெண் பிள்ளைகள் இரண்டின் மேலும் அவருக்கு அளவு கடந்த பாசம். மூத்தவனுக்கு கோபத்தில் இரண்டு போட்டாலும், பெண்கள் என்ன குழப்படி செய்தாலும், சுவாமிநாதனுக்குப் பிடித்துக்கொள்ளும். மிஞ்சிப்போனால் வெறுத்துக் கொள்ளமாட்டார்.

இரண்டு பெண்களும் ஒன்றாகவே பெரியவர்கள் ஆனார்கள். மனைவி அவர்களுக்கு சாமத்தியச் சடங்கு செய்ய வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றாள்.

இந்த விடயத்தில் மூத்தவளுக்கு வெறுப்பு என்றாலும் இளையவளுக்கு கொஞ்சம் விருப்பம். சுவாமிநாதன் இருவருடனும் ஆற அமர இருந்து கதைத்து விளங்கப்படுத்தினார். மூத்தவள் தந்தையின் பக்கம் சாய, இளையவள் தாயின் பக்கம் நின்று கொண்டாள். இறுதியில் இளையவளின் விருப்பத்துக்கு ஏற்ப சின்னதாக அவளுக்கு சாமத்தியச் சடங்கு செய்தார்கள்.

கொஞ்சக்காலம் சென்றதும் இளையவள் வெக்கப்பட்டுக்கொண்டே "வெக்கமாகக் கிடக்கு" என்றாள்.
"ஏன்"
"அப்பா அன்டைக்குச்
சொல்லேக்க விளங்கேல்ல
இப்பதான் விளங்குது"
என்றாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவாமிநாதன் அண்ணாந்து

"தண்ணி" என்றார். அவருக்கு தலை சுற்றிக்கொண்டு வந்தது. இடையளவ மட்டம் கிடங்கு ஆழமாகவும் அகலமாகவும் தோண்டப்பட்டுவிட்டது. அவர் கிடங்கின் கரையோடு ஒட்டி நின்றுகொண்டார்.

மனைவி,

"தம்பி தண்ணி கொடுக்கட்டே"

"ம்"

மூத்தவன் கிடங்கில் குதித்து மண்வெட்டியை எடுத்தான். விரல்கள் சுண்டும் ஓசையைக் கேட்டு அண்ணாந்து பார்த்தான். சைகையின்படி மீண்டும் மேலேறிக் கொண்டான்.

செம்பு நிறையத் தண்ணீரைக் கொண்டு வந்தாள் பார்வதி. அவள் கைகள் நடுங்கிக் கொண்டே இருந்தது. கண்களில் இருந்து இடைவிடாது கண்ணீர் பெருகிக்கொண்டே இருந்தது. "பைத்தியக்காரி" சுவாமிநாதன் தனக்குள்ளேயே நினைத்துக்கொண்டார்.

"அம்மா பசிக்குது"

சின்னவன் தாயோடு ஒட்டிக்கொண்டு கேட்டான்.

"ஐஐயோ"

பார்வதி குழறி அழுதுகொண்டு, வெட்டிக் குவிக்கப்பட்ட மண்ணுக்குள் பொத்தென்று விழுந்தாள்.

"பிண்டையாண்டி"

என்ற சொல்லும், சுவாமிநாதன் உச்சம் தலையில் பொல்லின் அடியும் ஒன்றாகவே விழுந்தது. சுவாமிநாதன் சுருண்டு கிடங்கிற்குள் விழுந்தார். விழும்போது,

"அப்பா"

என்ற அலறல் கேட்டது. அது சுவாமிநாதனின் பிள்ளைகளின் அலறல். இளையவன் கண்களைக் கசக்கிக்கொண்டு ஓடிவந்திருக்க வேண்டும்.

பொல்லடி அடுத்து யாருக்கு விழுந்ததென்று உறுதியாக சுவாமிநாதனால் ஊகிக்க முடியவில்லை. மரண ஓலம் மட்டும் கேட்டுக்கொண்டே இருந்தது.

"அம்மா"

மூத்தவள்

"அம்மா"

இளையவள். அப்ப முதலில் கேட்டது மூத்தவனின் இறுதிச் சொல்லுத்தான். குரல்கள் தணிந்து ஒற்றைக் குரலும் ஒரு குட்டிக் குரலும் ஒலித்துக்கொண்டிருந்தது.

"அம்மாளாச்சியான நாங்கள் ஒன்றும் செய்யேல்லை, எங்கள விட்டுடுங்கோ, தம்மி, தம்பி நீங்கள் நல்லாயிருப்பியள் எங்கள விட்டுடுங்கோ"

"பைத்தியக்காரி, அவங்கள் இரங்குவாங்களே, அப்படி இரங்கியிருந்தால் ஆமி அழிச்சதெல்லோ கூடவாயிருக்கும்"

சுவாமிநாதனுக்கு வெப்பிராயம் மேலெழுந்தது.

"ஐயோ தம்பியவ, உங்கள யாரேனும் காட்டிக்கொடுக்கவும் வேணுமே. நீங்கள் தானே யூனிபோமோட திரியிறியளே, அநியாயமாக என்ர குடும்பத்தையே...."

"அறுதல் நாயே"

"அம்மாளே, ஐயோ தம்பியவ என்னையும் அவரையும் என்னவெண்டாலும் செய்யுங்கொ என்ர பிள்ளையள விட்டுடுங்கோ...."

"டே என்னடா பாத்துக்கொண்டிருக்கிறா, போடுறா"

"அம்மாளே"

பார்வதியின் ஈனக்குரல் மேலெழுந்து அடங்கிற்று. சுவாமிநாதனின் நினைவுகள் சுழன்றெழுந்து இங்கும் அங்குமாக அங்கலாய்த்து ஓடியது. ஆனால்,

"அம்மா"

ஈனக் குரல் சுவாமிநாதனின் உடல் உயிரற்றிருந்தும் ஒருகணம் சிலிர்த்தது.

"அடப்பாவிகளா பிள்ளையள் என்ன பாவம் செய்தது, ஐயோ 4 வயது பிள்ளைக்கு என்ன தெரியும்"

சுவாமிநாதன் விம்மி விம்மி அழத்தொடங்கினார். அவரால் எல்லாவற்றையும் உணரும் உணர்வு சக்தி மெல்ல மெல்ல மங்கத் தொடங்கியது.

பொத்தென்று பக்கத்தில் யாருடையோ உடல் விழுந்தது. யாரென்று பார்க்க அவரால் முடியவில்லை. அடுத்த உடலும் விழுந்தது. கைமட்டும் அவர் முதுகில். அது இளையவள் அவளுக்கு காப்பு என்றால் கொள்ளை ஆசை. அடுத்ததும் விழுந்தது பார்வதி. அவளுடைய மூச்சின் உஸ்ணம் அவர் உடலை துளைத்தது. மிச்சமிருப்பது மூத்தவன் அல்லது மூத்தவள். அதுவும் விழுந்தது. கடைசியாக சின்னப் பொதி யொன்றின் பாரத்தில் விழுந்தது. அது சின்னவன். அவனுடைய தலை சுவாமிநாதனின் முதுகைத் தொட்டபடி.

சுவாமிநாதன் கதறிக்கதறி அழுதார். "பூண்டோடு கைலாயம்"

"ஐயோ என்ன பாவம செய்தேனோ"

அவருடைய நினைவுகள் மேலும் கொஞ்சம் கொஞ்சமாக மங்கத் தொடங்கிக்கொண்டன. யாரோ அனுங்கிக்கொள்ளும் சத்தம் கேட்டது. மண் வாய்க்குள் விழத்தொடங்கின. முதுகில் சூடு வரவர அதிகரித்தது. பிசுபிசுத்த் சூடு. சின்னவன்ர ரத்தம் போல.●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புஷ்பராஜா கடிதமும்... ...எதிர்வினையும்

**கடிதம்**

சி. புஸ்பராஜா

ஆசிரியர் குழு,

எக்சில்

அன்புடையீர்,

14.06.2002-ம் திகதி பாரிசில் வைத்து அசோக் தாக்கப்பட்டது சம்பந்தமாக வருத்தமுற்று கண்டனம் தெரிவித்தவர்களில் நானும் ஒருவன். எமது கண்டனத்தின் பின்னணியில் பிரதேச வாதமோ, தனி நட்பு சம்மந்தமான தாக்கமோ, அல்லது குறிப்பாக ஏதாவது அமைப்புகளை அவமதிக்கும் நோக்கமோ இருக்கவில்லை என்பது உறுதியானது. முக்கியமாக நாம் கண்டனம் தெரிவித்ததில் வேறு பின்னணி எண்ணங்கள் இன்றி இலக்கியத்தில் ஆர்வமுள்ள, பொது வேலைகளில் ஈடுபடும் ஒருவர் தாக்கப்பட்டது சம்மந்தமாகவே கண்டனம் தெரிவித்தோம். இதற்காக உலகத்தில் தாக்கப்படும் எல்லோருக்காகவும் என்னால் குரல் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது. எமக்குத் தெரிந்த, நாம் நெருங்கிப் பழகிய, அல்லது எம்மை மதிக்கும், எமது வேலைகளில் பங்கு கொள்ளும், எமது வேலைகளுக்கு (பொது வேலைகள்) ஊக்கம் தரும் ஒருவர் தாக்கப்படும்போது நாம் குரல் கொடுக்க வேண்டியவர்களே. அத்துடன் எமது கண்டனம் தாக்கியவரையோ, தாக்கப்பட்டவரையோ சென்று ஏதாவது வினையை ஏற்படுத்தும் பட்சத்தில் எமது குரல் பயனுள்ளதாகிறது.

அசோக் தாக்கப்பட்டதற்கு ஒரு அமைப்பைச் சேர்ந்த இரு இளைஞர்கள் காரணம் என அறிந்த நாம் அதை எமது பொதுக் கண்டனத்தில் தெரிவித்தோமே தவிர அந்த அமைப்பை அவமதிப்பதோ, அல்லது அந்த அமைப்பின் வேலைகளை அவமதிப்பதோ, அல்லது அந்த அமைப்பு சார்ந்த பிரதேசத்தை அவமதிப்பதோ எமது நோக்கமுமல்ல. எமது கண்டனத்தில் அப்படியொரு விடயமும் இருக்கவுமில்லை. ஆனால் அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் என உரிமை கோரி 25.06.2002-ம் திகதி வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் எம்மைப் பிரதேசவாதிகள் என சொல்ல வந்து துண்டுப் பிரசுரமே வெறும் பிரதேசவாதத்தைக் கக்கியிருக்கிறது. முழு இலக்கியவாதிகளையும் பிரதேசவாதிகளாகவும், குறுங்குழுவாதி களாகவும் இந்த துண்டுப் பிரசுரம் குறிப்பிட்டுள்ளது.

எனது வேதனையெல்லாம் துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்கள் மீதோ அல்லது சம்மந்தப்பட்ட அமைப்பு மீதோ அல்ல. எம்மைத் தெரிந்த, எம்முடன் நீண்ட காலம் வேலை செய்த, எம்முடன் தனி உறவைக்கூட வளர்த்துக் கொண்ட எக்சில் சஞ்சிகையின் ஆசிரியர் குழு இந்த விடயத்தை சீர் தூக்கிப் பார்க்காது, தாக்கப்படுபவர் யாராகவிருந்தாலும் அவர் மீது அனுதாபம் கொள்ளாது. எமது கண்டனத்தில் எம்முடன் கை கோர்த்துக் கொள்ளாமல் தெருச்சண்டை (அரசியலான கதை) என எக்சில் 12-வது இதழில் எழுதியுள்ளார்கள். அசோக் போன்ற ஒருவர் தாக்கப்படுவது எக்சில் ஆசிரியர் குழுவுக்கு தெருச் சண்டையாகத் தெரிகிறது.

கண்டனம் தெரிவிக்க எமக்கு உரிமையுண்டு. கண்டனம் தன்மீதுதான் என சந்தேகப்படும் பட்சத்தில் அதற்கு விளக்கமளிக்கும் துண்டுப்பிரசுரம் வெளியிடும் உரிமை சம்மந்தப்பட்ட அமைப்புக்குண்டு. இதற்கிடையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சி.புஸ்பராஜா

அசோக் தாக்கப்பட்டதை தெருச் சண்டையென எழுதி ஏன்தான் எக்சில் கோபப்படுகிறது. எக்சில் ஒரு பிரதேசம் சார்ந்த சஞ்சிகையல்ல. அதன் ஆசிரியர் குழுவில்வட கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்க எக்சில் வார்த்தையின்படி சொல்வதானால் ஒரு தெருச்சண்டையில் எக்சில் ஏன் மூக்கை நுழைத்தது? ஒரு தெருச்சண்டையை எக்சில் ஏன் தனது பக்கங்களில் காவடியெடுத்தது? எழுத்துச் சுதந்திரம், பத்திரிக்கைச் சுதந்திரம் என்ற பெயரில் எதையும் எழுதலாம். யாரையும் உண்மைக்குப் புறம்பாக கொச்சைப்படுத்தலாம் என்பது நேர்மையான விடயமல்ல.

இப்படியாக ஒரு சூழலில் எனது ஆலோசனைக்குட்பட்ட புத்தக விற்பனை நிலையம் ஒன்றில் சம்மந்தப்பட்ட எக்சில் சஞ்சிகையை விற்க வேண்டாம் என கேட்டுக் கொண்டேன். ஆனால் இந்த நடவடிக்கையால் எக்சில் ஆசிரியர் குழு மிகவும் வருத்தத்திற்குள்ளாகியிருப்பதாக அறிந்தேன். ஆதலினால் அவர்களது வருத்தத்துக்கு மதிப்பளித்து, எனது வருத்தத்தை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இது போன்ற சந்தர்ப்பங்களில் எக்சில் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளும் என எதிர்பார்க்கின்றேன். எக்சில் வாசகர்களுடையது. எக்சில் ஆசிரியர் குழுவின் தனிப்பட்ட கோபங்களின், விரோதங்களின், பிளவுபாடுகளின் வெளிப்பாடுகள் வாசகர்களுக்குத் தேவையில்லாத ஒன்று. மீண்டும் எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு, ஆக்கபூர்வமான வேலைத் திட்டத்தை நோக்கி நகர்வோம் என நம்பிக்கை கொள்கிறேன்.

நன்றி.

21.05.2003

ஆசிரியர் குழு,
எக்சில்

அன்புடையீர்,

14.06.02 ம் திகதி பாரிசில் வைத்து அசோக் தாக்கப்பட்டது சம்மந்தமாக வருத்தமுற்று கண்டனம் தெரிவித்தவர்களில் நானும் ஒருவன். எமது கண்டனத்தின் பின்னணியில் பிரதேச வாதமோ, தனி நட்பு சம்மந்தமான தாக்கமோ, அல்லது குறிப்பாக ஏதாவது அமைப்புகளை அவமதிக்கும் நோக்கமோ இருக்கவில்லை என்பது உறுதியானது. முக்கியமாக நாம் கண்டனம் தெரிவித்ததில் வேறு பின்னணி எண்ணங்கள் இன்றி இலக்கியத்தில் ஆர்வமுள்ள, பொது வேலைகளில் ஈடுபடும் ஒருவர் தாக்கப்பட்டது சம்மந்தமாகவே கண்டனம் தெரிவித்தோம். இதற்காக உலகத்தில் தாக்கப்படும் எல்லோருக்காகவும் என்னால் குரல் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது. எமக்குத் தெரிந்த, நாம் நெருங்கிப் பழகிய, அல்லது எம்மை மதிக்கும், எமது வேலைகளில் பங்கு கொள்ளும், எமது வேலைகளுக்கு (பொது வேலைகள்) ஊக்கம் தரும் ஒருவர் தாக்கப்படும் போது நாம் குரல் கொடுக்க வேண்டியவர்களே, அத்துடன் எமது கண்டனம் தாக்கியவரையோ, தாக்கப்பட்டவரையோ சென்று ஏதாவது வினையை ஏற்படுத்தும் பட்சத்தில் எமது குரல் பயனுள்ளதாகிறது.

அசோக் தாக்கப்பட்டதற்கு ஒரு அமைப்பைச் சேர்ந்த இரு இளைஞர்கள் காரணம் என அறிந்த நாம் அதை எமது பொதுக்கண்டனத்தில் தெரிவித்தோமே தவிர அந்த அமைப்பை அவமதிப்பதோ, அல்லது அந்த அமைப்பின் வேலைகளை அவமதிப்பதோ, அல்லது அந்த அமைப்பு சார்ந்த பிரதேசத்தை அவமதிப்பதோ எமது நோக்கமுமல்ல, எமது கண்டனத்தில் அப்படியொரு விடயமும் இருக்கவுமில்லை. ஆனால் அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் என உரிமை கோரி 25.06.02 ம் திகதி வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் எம்மைப் பிரதேசவாதிகள் என சொல்ல வந்து துண்டுப்பிரசுரமே வெறும் பிரதேசவாதத்தைக் கக்கியிருக்கிறது. முழு இலக்கிய வாதிகளையும் பிரதேச வாதிகளாகவும், குறுங்குழு வாதிகளாகவும் இந்த துண்டுப்பிரசுரம் குறிப்பிட்டுள்ளது.

எனது வேதனையெல்லாம் துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்கள் மீதோ அல்லது சம்மந்தப்பட்ட அமைப்பு மீதோ அல்ல. எம்மைத் தெரிந்த, எம்முடன் நீண்ட காலம் வேலை செய்த, எம்முடன் தனி உறவைக் கூட வளர்த்துக் கொண்ட எக்சில் சஞ்சிகையின் ஆசிரியர் குழு இந்த விடயத்தை சீர் தூக்கிப்பார்க்காது, தாக்கப்பட்டுபவர் யாராகவிருந்தாலும் அவர் மீது அனுதாபம் கொள்ளாது, எமது கண்டனத்தில் எம்முடன் கை கோர்த்துக் கொள்ளாமல் தெருச்சண்டை (அரசியலான கதை) என எக்சில் 12வது இதழில் எழுதியுள்ளார்கள். அசோக் போன்ற ஒருவர் தாக்கப்படுவது எக்சில் ஆசிரியர் குழுவுக்கு தெருச்சண்டையாகத் தெரிகிறது.

கண்டனம் தெரிவிக்க எமக்கு உரிமையுண்டு. கண்டனம் தன்மீதுதான் என சந்தேகப்படும் பட்சத்தில் அதற்கு விளக்கமளிக்கும் துண்டுப்பிரசுரம் வெளியிடும் உரிமை சம்மந்தப்பட்ட அமைப்புக்குண்டு இதற்கிடையில் அசோக் தாக்கப்பட்டதை தெருச் சண்டையென எழுதி ஏன்தான் எக்சில் கோபப்படுகிறது. எக்சில் ஒரு பிரதேசம் சார்ந்த சஞ்சிகையல்ல, அதன் ஆசிரியர் குழுவில் வட கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்க எக்சில் வர்த்தையின் படி சொல்வதானால் ஒரு தெருச்சண்டையில் எக்சில் ஏன் மூக்கை நுழைத்தது?. ஒரு தெருச்சண்டையை எக்சில் ஏன் தனது பக்கங்களில் காவடியெடுத்தது?. எழுத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் என்ற பெயரில் எதையும் எழுதலாம், யாரையும் உண்மைக்குப் புறம்பாக கொச்சைப்படுத்தலாம் என்பது நேர்மையான விடயமல்ல.

இப்படியான ஒரு சூழலில் எனது ஆலோசனைக்குட்பட்ட புத்தக விற்பனை நிலையம் ஒன்றில் சம்மந்தப்பட்ட எக்சில் சஞ்சிகையை விற்க வேண்டாம் என கேட்டுக் கொண்டேன். ஆனால் இந்த நடவடிக்கையால் எக்சில் ஆசிரியர் குழு மிகவும் வருத்தத்திற்குள்ளாகியிருப்பதாக அறிந்தேன். ஆதலினால் அவர்களது வருத்தத்துக்கு மதிப்பளித்து, எனது வருத்தத்தை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இது போன்ற சந்தர்ப்பங்களில் எக்சில் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளும் என எதிர்பார்க்கிறேன். எக்சில் வாசகர்களுடையது. எக்சில் ஆசிரியர் குழுவின் தனிப்பட்ட கோபங்களின், விரோதங்களின், பிளவுபாடுகளின் வெளிப்பாடுகள் வாசகர்களுக்குத் தேவையில்லாத ஒன்று. மீண்டும் எனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு, ஆக்கபூர்வமான வேலைத்திட்டத்தை நோக்கி நகர்வோம் என நம்பிக்கை கொள்கிறேன்.

நன்றி.

21.05.2003



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எக்ஸில் தடைகுறித்து அதன் சூத்ரதாரி சி.புஷ்பராஜா விடமிருந்து இதழின் இறுதிக்கட்ட தயாரிப்பு நேரத்தில் எக்ஸிலுக்கு கிடைத்த கடிதமும் அதற்கான பதிலும்

முதலில் சி. புஷ்பராஜா சொல்ல வருகின்ற பொய்களையும், புரட்டுகளையும், முட்டாள் கேள்விகளையும் சுருக்கமாக வரிசைப்படுத்தி ஒவ்வொன்றாகப் பதிலிறுக்கிறோம்.

1. வன்முறை மீது கண்டனம் தெரிவிக்கும் உரிமை தமக்குண்டு.
2. கிழக்கிலங்கை கல்விக் கலாசார ஒன்றியத்தை அவமதிப்பது எங்கள் நோக்கமல்ல.
3. ஒன்றியத்தை அவமதிக்கத்தக்க விடயமேலும் கண்டனத்தில் இல்லை.
4. தங்கள் கண்டனத்தில் எக்ஸில் ஏன் சேர்ந்து கொள்ளவில்லை ?
5. தெருச் சண்டையில் எக்ஸில் ஏன் மூக்கை நுழைத்தது ? ஏன் கோபப்படுகிறது. ஏன் தன் பக்கங்களில் காவடி எடுத்தது ?
6. நான் எக்ஸிலை விற்க வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டேன்.
7. இது குறித்து எக்ஸில் ஆசிரியர் குழு வேதனை அடைந்ததாக அறிந்தேன். அதற்காக நான் மனவருத்தப்படுகிறேன்.
8. ஆக்கபூர்வமான வேலைத் திட்டத்தினை நோக்கி நகர்வோம்.

கடிதத்தின் முதலாவது பந்தியில், சி.புஷ்பராஜா சொல்ல வருவது, வன்முறை மீதான கண்டனம் தெரிவிக்கும் உரிமையும், கடமையும், தமக்கிருக்கிறது. குறித்த கண்டனத்தில் வேறு யாரையும் அல்லது அமைப்பையும், அவமதிக்கும் நோக்கம் இருக்கவில்லை என்கிறார்.

எக்ஸில் உங்களது கண்டனம் தெரிவிக்கும் உரிமையை எப்பொழுதும் மறக்க வில்லையே. இதனை எக்ஸில் 12வது இதழ் 104 ஆம் பக்கத்தில் ஓராம் பந்தியில் தெளிவாகக் காணலாம். வன்முறை ஒன்றின் மீது யாருக்கும் உள்ள கண்டிக்கும் உரிமையை யாரும் மறுப்பதற்கில்லை எனத் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறோம். இவ்விடயத்தில் நாம் புஷ்பராஜாலிடம் எவ்வித முரண்பாடு கொள்வதற்கில்லை.

ஒன்றியத்தை அவமதிப்பது உங்களது நோக்கமாக இருந்ததா' இல்லையா என்று எமக்குத் தெரியாது. ஆனால், அந்த அவமதிப்பு நடந்தேறி இருக்கிறது. அதை நீங்களே முன் நின்றும் செய்திருக்கிறீர்கள்.

துப்பாக்கி முனையில் மட்டக்களப்புச் சங்கத்தின் சார்பில் பணம் சேகரித்த இளைஞர்களால் தாக்கப்பட்டுள்ளார். (ஜெர்மன் இலக்கியச் சந்திப்பு நண்பர்கள் வெளியிட்ட பிரசுரம்) ஆயுதம் தாங்கிய காடையர்களினால் தாக்கப்பட்டுள்ளார். (Exilivre இணையத் தளம், பாரிஸ்) இப்படி செய்திகளை பரப்பினீர்கள். பிரசுரம், பத்திரிக்கைகள் ரேடியோக்கள் என செய்தி பரப்பி, அதனை உண்மையாக்கினீர்கள். இவையனைத்தும் உண்மையினால், அந்த துப்பாக்கி தாங்கிய இளைஞர் எப்படி இன்று வரை பாரீஸில் சாதாரணமாக உலா வர முடியும். இன்று சிறைச்சாலை கதவுகளுக்குள் அல்லவா அவர் முடக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது அவர் சார்ந்த அமைப்பு, துப்பாக்கி முனையில் பணம் சேகரித்தது உண்மையினால், அவ்வமைப்பு சட்டப்படி பிரான்சில் தடை செய்யப்பட்டிருக்க வேண்டுமே.

துண்டுப் பிரசுரம் விட வசதியிருக்கிறது, என்பதற்காக, இப்படியெல்லாம் கேவலமாக எழுதி, ஒரு பொது அமைப்பை, பகிரங்கமாக மக்கள் முன் இயங்க விடாமல் சீரழித்துவிட்டு அது பிழையென ஒப்புக் கொள்ளுங்கள். இது குறித்து அமைப்பு சார்பில் ஒன்றும், மட் / அம்பாறை / திரிகோண மலை நண்பர்கள் வட்டம் சார்பில் ஒன்றுமாக இரண்டு மாற்றுக் கருத்துக்கள் கொண்ட சுயவிமர்சனப் பிரசுரங்கள் வெளியானதே. அவற்றையெல்லாம் கவனமாக மறைத்துக் கொண்டு கைங்கர்யம் பண்ணியது யார் ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒற்றைத் தரப்புச் செய்திகளை ஊதிப் பெருக்க வைத்து, கண்டன மாநாடு வரை நடத்தினீர்கள். தெருச்சண்டையில் அடிபடுபவனை எல்லாம் தியாகியாக்க முனைந்தீர்கள்.

இப்படி இருக்க, ஒன்றியத்தை அவமதிப்பது உங்கள் நோக்கமல்ல என்றும், அவ்வாறு அவமதிக்கத்தக்க விடயங்கள் கண்டனத்தில் இல்லையென்றும் சும்மா கதைவிட வேண்டாம். இந்த லட்சணத்தில் எக்ஸில் ஏன் கண்டனத்தில் தங்களுடன் கைகோர்க்க வில்லை என்ற கேள்வி வேறு.

இந்தக் கேள்வியில் இருந்தே, நாம் விலகியிருந்தோம் என்பது வெளிப்படையாகிறது. ஆனாலும் அடுத்தக் கேள்வில் எக்ஸில் ஏன் தெருச்சண்டையில் மூக்கை நுழைத்தது என புஷ்பராஜா கோபப்படுகிறார். ஆக நாம் இந்தத் தெருச் சண்டையில் இருந்து விலகியேதான் இருந்தோம். ஒன்றும் மூக்கை நுழைக்கவில்லை. ஆனால் தெருச்சண்டையிலல்ல அதை வைத்து நீங்கள் நிறைவேற்றிய ஆதிக்க அரசியலில், நாம் மூக்கை நுழைத்தோம்.

தெருச் சண்டையில், சம்பந்தப்பட்ட பையன், குறித்த ஒன்றியத்து உறுப்பினன் என்பதற்காக, அதை ஒரு அரசியல் தாக்குதலாக பரிணமிக்க வைத்து ஒன்றியத்தின் மீது காடையர் கூட்டம், பணச்சேகரிப்பு, ஆயுதக்கும்பல் என்று வாய்க்கு வந்தபடி உருக்கொண்டு ஆடியது நீங்கள்

உங்கள் தாண்டவத்தில் ஒன்றியமும், வட்டமும் விட்ட சுயவிளக்கங்கள் எடுபடவில்லை. அவர்கள் சுட்டிக்காட்டிய உங்களது சேறுபூசல்களும் வெளியே வரவில்லை அவை மூடிமறைக்கப்பட்டன. அப்பிரசுரங்களை நீங்கள் ஒரு பொருட்டாகக் கூட மதிக்கவில்லை. இந்நிலையில் தான் சுமார் இரண்டு மாத கால இடைவெளியின் பின் எக்ஸில் வெளியானது. குறிப்பாக ஒன்றியத்தின் மீது நீங்கள் நடத்திய சேறுபூசல்கள் மன்னிக்க முடியாதவை. மாறாத வடுக்கள் அவை. இவை குறித்து மாற்றுக் கருத்துப் பிரசுரங்கள் இரண்டும் மறைக்கப்பட்டது. கிழக்கின் மீதான உங்கள் யாழ்ப்பாணத் திமிர் அதில் ஏறிநின்று கூத்தாடியது. அப்பொழுதுதான் நாம் கோபப்பட்டோம்.

உங்கள் ஆதிக்க அரசியல் மீது, செத்த பாம்பை அடிப்பது போல் கிழக்கு ஒன்றியத்தை அடித்து மிதித்துவிட்டு கொக்கரித்துக் கொண்டிருந்தது. உங்கள் ஆதிக்கக் குணம். அதற்கு முன் உங்கள் வண்டவாளங்களை அம்பலப்படுத்த கி.க.க.ஒன்றியத்தால் முடியவில்லை. பாவம் அவர்கள். இந்த உங்களது அகோர தாண்டவத்தினை தணிக்கத்தான் நாமும் காவடி எடுத்து ஆட நிர்பந்திக்கப்பட்டோம். அவர்களுக்காக நாம் குரல் கொடுத்தோம். உங்களை அம்பலப்படுத்தினோம். உங்களால் மூடி மறைக்கப்பட்ட ஒன்றியத்துக்கு சார்பான பிரசுரத்தை மீள வெளியிட்டோம். அது மட்டுமின்றி வெளிப்படையான இந்த சேறு பூசுதலுக்குச் சம்பந்தப்பட்ட இலக்கியச் சந்திப்பு நண்பர்கள் மீது கண்டனம் தெரிவித்தோம். இதுதான் எக்ஸில் தனது பக்கங்கள் சிலவற்றில் உங்கள் வண்டவாளங்களை காவடி எடுக்க நிர்பந்திக்கப்பட்ட கதை.

அ தொடங்கி ஃன்னா வரை 1008 பழைய மாணவர் சங்கங்கள் ஐரோப்பா எங்கும் இயங்கி வருகின்றன. யாழ்ப்பாணத்து ஒவ்வொரு குச்சொழுங்கைகளை நினைவுபடுத்தும் அச்சங்கங்கள் குறித்து யாரும் இதுவரை பேசியதில்லை. நாளுக்குநாள் லாச் சப்பலில் நடக்கும் தெருச் சண்டைகளில் பங்கெடுக்கும் இளைஞர்கள் அச்சங்கங்களின் உறுப்பினர்கள் தானே. அவர்களது தனிநபர் நடக்கைகளை, அவர் சார்ந்த அமைப்புகள் கட்டுப்படுத்த முடிகறிதா? அதை மீறித்தானே இவ்வளவும் நடக்கிறது. அதற்காக குறித்த இளைஞர்கள் சார்ந்த பழைய மாண்வர்கள் சங்கங்களை இப்படிக் கேவலப்படுத்த முடிந்ததா புஷ்பராஜா அவர்களே.

கல்வி ரீதியாகப் பிற்படுத்தப்பட்ட கிழக்கு மாகாணத்தின் பெயரால் ஐரோப்பா எங்குமே கல்வி வளர்ச்சிக்காக, இதுவரை, ஒரு அமைப்பு கூட உருவாகியிருக்கவில்லை. முதன்முதலாக பிரான்சில் உருவாக்கப்பட்ட கி.க.க. ஒன்றியம், உங்கள் குறுங்குழுவாத திமிரினால் சீரழிக்கப்பட்டு விட்டது. வாய்க்கு வந்தபடி அது குறித்து உலகெங்கும் நீங்கள் பரப்பிய கேவலமான செய்திகள், இன்றோ, நாளைய அவ்வொன்றியத்தை கலையும் தருவாயில் கொண்டு நிறுத்தியிருப்பது உங்களுக்குத் தெரியுமா ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வளவையும் பண்ணிவிட்டு, நாங்கள் கண்டனம் தெரிவித்தோம். அவ்வளவுதானே என்று ஒன்றும் வாய்க்குள் விரலை வைத்தால் கடிக்கத் தெரியாத குழந்தையாக நடிக்க வேண்டாம்.

எக்ஸிலை தடை செய்து விட்டு விற்பனை செய்ய வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டேன் என அழகு தமிழில் எழுதிவிடுவதால் அதன் பாதிப்பு குறைந்து விடுமா என்ன ? நீங்கள் செய்திருக்க வேண்டியது. ஒன்றியம் கேட்டுக் கொண்ட படி சேறுபூசல்களை நிறுத்தி மன்னிப்புக் கோருவது, அதை விடுத்து, பொய்யை, உண்மையாக்கி, உங்கள் பிரச்சார சாதனங்களின் துணையோடு கெக்கலி கொட்டி சிரித்தீர்கள். இந்நிலையில்தான் அதனை எக்ஸில் அம்பலப்படுத்தியது. இதனை உங்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. உங்கள் மீது எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு, நேர்மையாக பதில்கூற முடியவில்லை. கி.க.க. ஒன்றியத்தை நீங்கள் சீரழித்துக் காட்டியதை புட்டு காட்டியது எக்ஸில். இதனை உங்களாலும், உங்கள் நண்பர்கள் கூட்டத்தாலும் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பதில் கூற வக்கின்றி, எக்ஸிலை விற்கக் கூடாதென தடைவிதித்தீர்கள். இது புலி செய்யும் வேலை இந்த புஷ்பராஜா தானா, இதுவரை 'கருத்துச் சுதந்திரம் கதைத்தவர்'. 'ஜனநாயகம் பேசியவர்'. மனித உரிமை கேட்டவர் என்று எண்ணும்போது எமக்கே வெட்கமாக இருக்கிறது, உங்களுடன் இணைந்து வேலை செய்த நாட்களை நினைத்து. கேவலம் உங்களையெல்லாம் நம்பி, இலக்கியச் சந்திப்பு நண்பர்களையெல்லாம் நம்பி நாங்களும் ஏமாந்தோம் என்பதை வெட்கமின்றி ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியது இருக்கிறது. ●

---

## கரம்

உறக்கத்திலிருக்கிறாய் என்
றால் விழித்திருக்கும் எனக்கும் இடை
வெளி அளவிட முடியா காலத்தில்
மேலுதட்டிற்கும்
கீழுதட்டிற்கும் இடையே
நீயும் நானுமிப்போது நூற்று
கிலோ மீட்டர்களில் கனவு
படிமமொன்றுன்
இதே நேரத்தில் இடம்பெறுகிற
தென் கவிதை
படிகிறதுன் இரவொன்றின்
கிளைகளில் வெடித்து மலர்ந்து
பரவிச் செல்லும்
இடம் வலம்
வரும் திசைகளில்
எண்ணாயிரத்தில் ஒரு பொறியென
பரவசமான திடுக்கிடல்
விழிப்புகள் மற்றும் உன் புரள்வு
வேர்த்திருக்கும் கீழ்ப்புற வுன்
கன்னத்தில் ஒத்தியும்
ஒத்தாமலும்
ஒரு சொர சொரப்பான
கரம். ●

ஸ்ரீநேசன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏழு பெட்டி இரயில்

போற்றத் தருந்த
இந்த வாழ்க்கைப் போற்றத்
தருந்த சில தோல்விகளையும்
பரிசளித்துக் கொண்டிருக்கிறது
பாலத்தின் மீது ஓடிக்
கொண்டிருக்கும் ரயில் வானில்
செங்குத்தாகப் பாயத் தொடங்கி
விட்டதைப் போல
ஒருவனின்
மனநிலைப் பிறழ்ந்த புனைவுச்
சுதந்திரம்
ஆபத்தை உருவாக்குவதில்லை எனில்
மிரள்கிறீர்கள்
ஏன் அழிக்கத் துணிகிறீர்கள்
ஏழுப் பெட்டி ரயிலொன்றை
அவன் புனைய
பாலத்தின் மீது
மெதுவாக நகர்கிறது

அவசரமில்லாமல்
முதலில் ஏழு வண்ணங்களை
ஒவ்வொரு பெட்டிக்கும் பூசுகிறான்
பின் ஒவ்வொரு பெட்டியிலும்
ஒவ்வொரு தினத்தை
நிலவ விடுகிறான்
பெரும் வெளி யோசையை
ஏழு ஸ்வர இசையெனப் பிரித்து
உள்ளே அனுப்புகிறான்
ஓடிக்கொண்டிருக்கும் அந்த
ரயில்
ஏழு மலை
ஏழு கடல் கடந்து
உனக்குள் நுழைந்து
வெளியேறி
எனக்குள் வந்து
நிற்கிறது ●

ஸ்ரீநேசன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


வெளியீடு




## "நிஷ்டை"
(சிறுகதைத்தொகுதி)
**க.கலாமோகன்**



## "யுத்த்தின் இரண்டாம் பாகம்"
(சிறுகதைத்தொகுதி)
**சக்கரவர்த்தி**





## "மட்டக்களப்புத் தமிழகம்"
**வி,சீ. கந்தையா**

வெளிவருகின்றது **க.கலாமோகனின்** **"Et demain "**

எமது அனைத்து வெளியீடுகளுக்குமான இந்திய விற்பனை உரிமை :
**"யாதுமாகி"**
37/17, இராமசாமிகோயில் சன்னதி தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627 002. தமிழ்நாடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**Published by Exil. R.INBAVALLI, No. d'enreg: 13022670**
**B.P.204, 92604 Asnieres Cedex, France**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்